
கல்கி

KALKI 6.10.2002
ரூ. 6.00



மாலத்தீவில் பிரதமர்!

தெய்வீக மாத இதழ்

தீப ஆராதனை

வாழ்வில் ஒளியேற்றி வழிகாட்டும்...!

அக்டோபர் 1-முதல் விஜயதசமியை முன்னிட்டு இதுவரையில் தமிழகத்தின் ஆன்மீக உலகில் இல்லாத வகையில் முழுவண்ண கோலத்தில் 'தீப ஆராதனை' மாத இதழ்.

ரூ.15/- மட்டு



பரபரப்பான விற்பனையில்

- நவராத்திரியின் சிறப்புகள்
- காமகோடி ஆட்சிசெய்யும் காஞ்சி சிறப்புகள்
- நீங்களும் கொண்டாடலாம் விஜயதசமி
- பண்டிட் காழியூர் நாராயணன் கணிக்கும் மாத ராசி பலன்கள்
- ஆர்.ஐ. துரைமுருகர் கணிக்கும் கைரேகையும் கேள்வி பதில்களும்
- இன்னும் இன்னும்... தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களின் தெய்வீக சிந்தனைகள்



இலவசம்
பிள்ளையார்பட்டி விநாயகர் வண்ண ப்ளோஅப்

DNet Services,
7B-5th Street, Kumaran Colony, Vadapalani,
Chennai-26. Tel : 372 8186, 372 9186, 473 5186
e-mail : dnet@vsnl.net www.dnetservices.com



பட்டாசு இல்லாமல்
தீபாவளியா?
கல்கி தீபாவளி மலர்
இல்லாமல் கொண்டாட்டமா?
தயாராகிறது
கல்கி
தீபாவளி
மலர் - 2002
விலை ரூ.70/-
உடனே உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.
கூரியர் அல்லது தபாலில் பெற ரூ.100 அனுப்பவும்
கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
புதிய ஈ மெயில் முகவரிகள் :
எடிட்டோரியல் : kalki@kalkiweekly.com சந்தா : subscription@kalkiweekly.com பிற தகவல்கள் : info@kalkiweekly.com

• உருப்படும் வழி! • வாபஸ் வித்தை!



• காமெடி ...

• ... டிராக்!

• ...சூழ்ச்சி!

• புதிய அகராதி!

• சாணக்கியம்...

• நீங்கள் கேட்டவை – தராசு •

டான்ஸி நிலத்தை

● வி. ரூபஸ், கோவை.

? இணைந்த காங்கிரஸ் கட்சி சட்டமன்றத் தலைவர் பதவிக்கு வழக்கம்போல் விளக்கெண்ணெய் சமாசாரம்தானே நடக்கிறது?

! ஊகூம்! தமிழக காங்கிரஸின் செயல்தலைவர் என்ற இரட்டைத்தலை சமாசாரம்தான் விளக்கெண்ணெய். சட்டமன்றத் தலைவர் பிரச்னை வேப்பெண்ணெய்!

● நெய்வேலி க. தியாக ராஜன், குடந்தை -1.

? உண்மையை விட வதந்திக்கு ஏன் இத்தனை வேகம்?

! வதந்தியில் தந்தி இருப்ப தாலோ என்னவோ!

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'சினிமா நடிகனுக்கு போர்டு வைக்கும் இளை ஞன் உருப்படுவானா?' என்ற ராமதாஸின் கேள்வி தவறா...?

! தவறில்லை; ஆனால் 'இன் றைய அரசியல்வாதிக்கு போர்டு' வைக்கும் இளைஞன் மட்டும் உருப்படவா செய் கிறான்?' என்ற எதிர் கேள்விக்கு இடமளிக்கிறது.

● கு. அருணாசலம், தென்காசி.

? சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு, காவிரி நதிநீர் ஆணை யத்தின் முடிவு, எதையும் செயல்படுத்தாத கர்நாடக மாநிலத்தின் துணிச்சல் பற்றி..?

! அது துணிச்சல் அல்ல; இந் நாட்டின் சட்டம், நீதியை மதிக்காத திமிர் – தேசத் துரோகத்துக்கு ஒப்பானது.

● பி.பாபு, வேலூர் _ 1.

? திருப்போரூரில் அதி.மு.க. பொதுக் கூட்டத்தில் அமைச் சர் சோமசுந்தரம் முன்னி

...ருப்பித் தந்தால் ...ரச்னை தீருமா?...

❐ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
கே. சங்கர்,
சூரியா எஃ்ரசி
சாந்தி தியேட்டர் எதிரில்,
கோபி - 658 452

* ரூ. 50/- பரிசு பெறுபவர்:
இரா. சக்கரபாணி,
12இ. எம்.ஜி.ஆர். நகர் இரண்டாவது
தெரு, மூன்றாவது குறுக்குத்
தெரு, கோ.புதூர்.
மதுரை - 625 007

லையில், ஒரு நாய் கழுத்தில் 'இளங்கோவன்' என்று எழுதி நாற்காலியில் அமர வைத்துக் கிண்டல் செய்த கீழ்த்தரமான செயல் குறித்து...?

! இதைவிடக் கேவலம் அ.தி.மு.க. தலைவர்கள் இத்தகைய போக்கைக் கண்டிக்காமல் மௌன ஆதரவு தருவதாகும்.

● ஆ. காளிமுத்து, இராணிப்பேட்டை.

? பிரதமராகும் தகுதி 'ஜெ'வுக்கு மட்டும் தான் இருக்கிறது – ஓ. பன்னீர்செல்வம். 'இந்தியாவை ஒரு மணி நேரம் ஜெ.விடம் ஒப்படைத்தால், பாகிஸ்தானியரை நாட்டை விட்டே ஓட்டி விடுவார்!'_ எஸ்.எஸ். சந்திரன் – இப்படியெல்லாம் பேசுவது குறித்து...?

! ஜெ எழுதி நடிக்கும் காஸ்ட்லி கனவு 'அரசியல் திரைக்கதைக்கு' மலிவான காமெடி டிராக்.

● முகவை முத்துசாமி, தொண்டி.

? மத மாற்றம், கட்சி மாற்றம் – என்ன வித்தியாசம்?

! மனமாற்றத்தோடு சம்பந்தப்பட்டது மத மாற்றம். பணமாற்றத்தோடு சம்பந்தப்பட்டது கட்சி மாற்றம்.

● இரா. சக்கரபாணி, மதுரை – 7 *

? தமிழ்நாடு அரசோ வீரப்பனைப் பிடிக்க அதிரடிப்படைகளை ஏவி, தீவிரமாக முயன்று வருகிறது. கர்நாடக அரசு, அவற்றைத் திரும்பப் பெற்றுவிட்டது. மாநிலங்கள் இரண்டுபட்டால் வீரப்பனுக்குக் கொண்டாட்டமா...?

! இப்போதைக்கு நாகப்பாவுக்குத் திண்டாட்டம்.

● கே. சங்கர், கோபி. ❐

? டான்ஸி நிலத்தைத் திருப்பி ஒப்படைத்து விட்டால் பிரச்னை முடிந்துவிடுமா...?

! ஒருவர் குற்றத்தை உணர்ந்துவிட்டால் குற்றமற்றவராகிவிடுவாரா..!

● ஜோ. ஜெயக்குமார்,
நாட்டரசன்கோட்டை.

? 'அ' – அம்மா, 'ஆ' – ஆண்டிப்பட்டி என்று காளிமுத்து புது விளக்கம் தருகிறாரே?

! சபாநாயகராக இல்லாதிருந்திருந்தால் 'இ' என்றால் இரட்டை இலை என்றும் சேர்த்துச் சொல்லியிருப்பார். இப்போது அது 'இலை மறை'!

● ஆர். ரத்தினசாமி,
சத்தியமங்கலம்.

? சமீபத்திய அரசியல் சாணக்கியம், சூழ்ச்சி எது?....

! மோடியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே, குஜராத் கோயில் தாக்குதல் பாகிஸ்தானின் ISI சதித்திட்டம் என்று அத்வானி சாதிப்பது.

● கே.எல். சுபகனி, எம்.கே. புதூர்.

? 'அமைச்சர்களுக்கு லஞ்சம் கொடுக்கவே லஞ்சம் வாங்குகிறோம் என மதுரை வருவாய்த்துறை ஊழியர்கள் ஆவேசப்பட்டிருக்கிறார்களே...?'

! அதில் உண்மை இல்லை என்று ஒதுக்கிவிட முடியாது. ஆனால் பூனைக்கு யார் மணி கட்டுவது!

● சு.நா. இராஜேஸ்வரன்,
மொரட்டுப் பாளையம்.

? கிரிக்கெட் கட்டுபாட்டு வாரியத்தின் தலைவராக மீண்டும் ஜக்மோகன் டால்மியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது பற்றி...?


! உடனே இரண்டு வெற்றிகளைப் பரிசாக அளித்து விட்டார்களே! அடேங்கப்பா, என்ன த்ரில்! என்ன த்ரில்! இனி ஃபைனலில் தோற்றால்கூட பாதகம் இல்லை!

● டி.சுப்ரமணியன், மேலையூர்.

? ஒருவேளை ப்ரியங்கா பிரதமராக வர நேரிட்டால் அவரையும் வெளிநாட்டுக்காரர் என்று விமர்சிப்பாரோ ஜெயலலிதா...?

! தந்தைநாடு இந்தியாவாக இருக்கலாம்; ஆனால் தாய்நாடு இத்தாலிதானே என்று பிரச்னை கிளப்புவாராயிருக்கும்!

• சத்திய ஞான சபை






• அன்னதானம்







• ருத்திராபதி • பாலமுருகன் • சரவணன்

வள்ளலார்

“மனிதனின் பசியை முதலில் அடக்குவோம்; பின்பு அவனுக்கு ஞான மார்க்கத்தைப் போதிப்போம்” என்பதே ராமலிங்க அடிகளாரின் குறிக்கோளாக இருந்தது. 1867ம் வருடம் வடலூரில் அவர் துவக்கி வைத்த தருமச் சாலையில் கடந்த 135 வருடங்களாக இரண்டு வேளை உணவு போடப்பட்டு வருகிறது. வள்ளலாரின் பக்தர்கள் நெல்லும் அரிசியுமாகக் கொண்டு வந்து கொட்டுகிறார்கள். இது தவிர 2830 பேர் தலா ஐயாயிரம் ரூபாய் செலுத்தி அறக்கட்டளை உறுப்பினராகியிருக்கிறார்கள்.

வங்கியில் இரண்டு கோடிக்கும் அதிகமாக வைப்பு நிதி உள்ளது. தருமச்சாலையில் மூக்கை நுழைத்து உடைபட்டுக்கொண்டிருக்கிறது ஜெ. அரசு.

திருப்பதிக்கே லட்டு, திருநெல்வேலிக்கே அல்வா என்றெல்லாம் சொல்வது போல வடலூருக்கே முதல்வரின் அன்னதானத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதும் வள்ளலார் பக்தர்கள் அதிர்ச்சியடைந்தார்கள். முதல்வர் அன்னதானத் திட்ட அறிவிப்புப் பலகையும், தனி உண்டியலும் பதற்றத்தை உண்டாக்கின. வள்ளலார் பிறந்த மருதூர் வீடு, வடலூர் சத்திய ஞான சபை, வடலூர் சத்திய தருமச்சாலை, கருங்குழியில் அவர் தங்கியிருந்த இல்லம், சித்தி அடைந்த மேட்டுக்குப்பம் ஆகியவற்றைப் பராமரித்து வரும் அமைப்பிற்கு 'வள்ளலார் தெய்வ நிலையம்'

பூமியில் ஊழல் பயிர்!



• வள்ளலார் சுவாமிகள்

என்று பெயர். இந்த அமைப்பு, இந்து அற நிலையத் துறை ஆளுகையின் கீழ் வருகிறது. இதற்கென தனி நிர்வாக அதிகாரி இருக்கிறார். முதல்வரின் அன்னதானத் திட்டம் வடலூரில் அறிமுகப்படுத்தப்பட்டால் நாளடைவில் வள்ளலார் பெயர் மறைக்கப்பட்டு அங்கு அரசியல் அரங்கேறி விடும் என்பதை உணர்ந்த வள்ளலார் பக்தர்கள் மக்கள் போராட்டக் குழு ஒன்று துவங்கி, பந்த், போராட்டம் என்று இறங்கவே, தெரியாத்தனமாக(?) நுழைந்துவிட்ட தமிழக அரசு, முதல்வரின் அன்னதானத் திட்டத்தை வடலூர் தெய்வ நிலையத்திலிருந்து துவங்கிய ஏழு நாட்களுக்குள் வாபஸ் வாங்கி விட்டது.


"அன்னதானம் போடப்படும் கோயில்களின் கூட்டு எண்ணிக்கை ஒன்பதாக இருக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில் அறநிலையத் துறையின் கீழே இருக்கும் தெய்வ நிலையத்தையும் சேர்த்து விட்டார்கள். ஆனால் எங்கள் எதிர்ப்பு காரணமாக, முதல்வரின் அன்னதானத் திட்டம் ஒருநாள் கூட இங்கு செயல்படவில்லை; அதற்கான உண்டியலையும் ஓரங்கட்டிவிட்டோம்'' என்று சொல்கிறார் கல்லூரி மாணவரான பாலமுருகன்.

''வள்ளலார் தொடர்பான இந்த அமைப்புகளை இந்து அறநிலையத்துறையின் பிடியிலிருந்து உடனே விடுவிக்க வேண்டும். ஏனென்றால் "எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பனவற்றின் ஆசார, சங்கற்ப, விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாச்சார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனத்தில் பற்றா வண்ணம் அருள் செய்தல் வேண்டும்...'' என்று சொல்லி மறைந்தவர் அடிகளார் வள்ளலார். இயக்கம் என்பது மதத்திற்கெல்லாம் அப்பாற்பட்ட அமைப்பு. இதை அறநிலையத் துறை நிர்வகிக்க முடியாது. இதுநாள் வரை அரசியல் இதில் நுழைந்ததில்லை. ஆனால் எதிர்காலத்தில் அப்படி நடக்காது என்று சொல்ல முடியாது; எனவே வள்ளலார் விட்டுச் சென்ற பணிகளை நிறைவேற்ற வள்ளலார் அன்பர்களைக் கொண்ட ஒரு தனிப்பட்ட அமைப்பை நிறுவ வேண்டும். இந்து அறநிலையத் துறையின் பிடியிலிருந்து அது விடுவிக்கப்பட வேண்டும்'' என்கிறார் பாலமுருகன்.

"வள்ளலார் அறிவுறுத்திச் சென்றது ஜோதி வழிபாடுதான். ஆனால் இன்று அவர் காட்டிய வழியை மீறி சத்திய ஞான சபையில் உருவ வழிபாடு நடக்கிறது'' என்கிறார் வடலூர் டாக்டர் ருத்திராபதி..

சத்திய ஞான சபை என்பது வள்ளலார் ஏற்படுத்திய அமைப்பு. எண்கோண வடிவமுள்ள இந்த ஞான சபையில் வள்ளலார் ஏற்றி வைத்த அணையா ஜோதி இருக்கிறது. வருடத்திற்கொருமுறை தைப்பூச தினத்தன்றுதான் இந்த ஜோதி தரிசனம் மக்களுக்குக் காண்பிக்கப்படும். அன்று வடலூரில் லட்சக்கணக்கில் பக்தர்கள் திரளுவார்கள்.

"இந்த ஞானசபையின் பிராகாரத்தில் பிரதோஷ தினத்தன்று சிவலிங்கம் வைத்து வழிபாடு செய்கிறார்கள். இது வள்ளலார் நெறிகளுக்கு எதிரானது'' என்கிறார் டாக்டர் ருத்திராபதி. அதுபோல தீபாராதனை செய்யக் கூடாதாம். "இது மட்டுமா? இங்கு நடக்கும் அக்கிரமங்களுக்கு அளவேயில்லை. பணமாக வசூலிக்கப்படும் நன்கொடைகளுக்குப் போலி ரசீதுகள் போடப்படுகின்றன. பருப்பு, காய்கறிகள், எண்ணெய் வாங்குவதில் ஊழல். கிட்டத்தட்ட நூறு ஏக்கர் கொண்ட வடலூர் வளாகத்தில், ஆக்கிரமிப்புகள் நடக்கின்றன. இதற்கு அதிகாரிகளும் துணை. இது முழுதும் மக்கள் கொடுத்த நிலம். பல வருடங்



"அந்த சீரியல்ல ஏன் ஹீரோயின் திக் கித் திக்கிப் பேசறாங்க?"

"சீரியலை வளர்த்த டைரக்டருக்கு வேற வழி தெரியலையாம்!"

- சீர்காழி வி. ரேவதி



"என் பிள்ளை சாக்பீஸ், பல்பம்னு சாப் பிடுகிறான் டாக்டர்."

"விடுங்கம்மா... நாளானால் இது சரியா யிடும். கவலைப்படாதீங்க!"

"நான் கவலைப்படலை டாக்டர். ஆனால் அவன் மனைவிதான் ரொம்பக் கவலைப் படுறா!"

- எம். அசோக்ராஜா



"அரசியல் வாதியின் மகனை காதலிச்சது தப்பா போச்சுடி!"

"ஏன்?"

"உன் சமையலறையில் நான் கஞ்சியா, பிரியாணியான்னு பாடறாரு!"

- ஜி. சுந்தரராஜன்

களுக்கு முன்னர், வளாகத்தின் ஒரு பகுதி யைப் பட்டா போட்டுக்கொண்ட ஒரு குடும்பம், பிளாட் போட்டு விற்று லட்சக் கணக்கில் சுருட்டிவிட்டது. ஒவ்வொரு ஞாயிறு அன்றும் சேலத்தைச் சேர்ந்த வள் ளல் ஒருவர் உணவு போடும் பொறுப்பை எடுத்துக் கொள்கிறார். ஆனால் அன்றைய தினம் 5000 ரூபாய் செலுத்திய டெபாஸிட் தாரர்கள் பெயரால் உணவு போடப்படுவ தாக கணக்கு எழுதப்பட்டு, பணம் சுருட் டப்படுகிறது. பொதுமக்கள் கொடுத்த நெல் லில் பாதிக்கு மேல், பராமரிப்பு இல்லாத தால் மக்கிப் போய்விட்டது. அரிசி கழு விய தண்ணீரில், சாம்பாரும், ரசமும் வைக் கிறார்கள். வள்ளலார் துவக்கிய சமரச சுத்த சன்மார்க்க சங்கம் இப்போது எங்கேயிருக்கிறது என்று யாருக்கும் தெரிய வில்லை. ஊருக்கு ஊர் ஒரு சங்கம் தனி மனிதர்களால் நடத்தப்படுகிறது. இந்த வட லூரை 'வாடிகன்' போல் மாற்ற வேண்டும். இங்கு மாமிசம் விற்பது தடை செய்யப்பட வேண்டும். இங்கு வளரும் ஊழல் பயிரை உடனே வெட்டியெறிய வேண்டும்" என்று ஆவேசமாகச் சொல்கிறார் ருத்திராபதி. வடலூர் நிர்வாகம் சுத்தப்படுத்தப்பட வேண்டுமென்று பலமுறை போராடியிருக் கிறார் இவர். 1930களில் தனிப்பட்டவர் களின் பொறுப்பில் இருந்த தர்மசாலையின் நிர்வாகம், பின்னர்தான் கைமாறியதாம்.


"வெளியாட்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு செய்தால் உள்ளூர் மக்கள் ஓரங் கட்டப்படுகிறார்கள். உள்ளூர் ஆட்களிடம் பொறுப்புகளைக் கொடுத்தால் மோதல் வருகிறது. இப்படிப்பட்ட நிலையில் அர சிடம் சென்றுவிட்டது நிர்வாகம். 'இது போலெல்லாம் நடக்கும். சில விஷயங் கள் தடைபட்டுப் போகும். குறிப்பிட்ட கால கட்டத்துக்குப் பின்னர் எனது நெறி களை முழுவதுமாக அப்படியே வழி நடத் திச் செல்ல ஓர் அருளாளர் வருவார். அப் போது எல்லாம் சரிப்பட்டுப் போகும்' என்று வள்ளலாரே சொல்லியிருக்கிறார்" என்கிறார் இங்கு சேவையில் ஈடுபட்டுள்ள மதுரையைச் சேர்ந்த சரவணன்.

'அப்படிப்பட்ட அருளாளர் எப்போது வருவாரோ' என்று ஏங்கும் நிலை வந்து விட்டது" என்கிறார் டாக்டர் ருத்திராபதி.

— ஸ்ரீநிவாசன்

படங்கள்: மீடியா 'ராமு'

"அக்டோபர் மாதம்" மார்பக புற்று நோய் விழிப்புணர்ச்சி மாதம்



மமோகிராம் என்பது என்ன?

ஒரு எளிய எக்ஸ்ரே முறைப்படி மார்பகத்தின் உள்ளிருக்கும் (கையாலும் உணர முடியாத, மிகவும் சிரிய அளவிற்கு இருக்கும்) கட்டிகளை மிக துல்லியமாக அரியவல்லது.

யாருக்கு மமோகிராம் தேவை ?

- 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள்
- 40 - 50 வயதிற்குட்பட்ட :-
  - திருமணமாகாத பெண்கள்
  - பருத்த மார்பகம் / உடல் கொண்டவர்கள்
  - தாய்ப் பால் கொடுக்காதவர்கள்
  - குழந்தைப்பேறு இல்லாதவர்கள்
  - நெருங்கிய உறவினர்களில் ...
    (தாய், சித்தி, அத்தை, சகோதரி முதலானோர் மார்பகப் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்தால்)
  - ஹார்மோன் மாத்திரை உட்கொள்பவர்கள்
  - கர்ப்பப்பை நீக்கப்பட்டவர்கள்.
- மார்பகத்தின் தோலில் தடிப்பு ஏற்பட்டு நிறம் மாற்றம் தென்பட்டால்

உங்கள் கவனத்திற்கு

- மார்பகத்தில் சிரிய கட்டி போன்று தென்பட்டால்
- எப்பொழுதும் இல்லாத ஒருவித வலி ஏற்பட்டால்
- மார்பக வடிவ அமைப்பில் ஏற்படும் மாறுதல்
- மார்பகத்தில் ஏற்படும் கசிவு
- அக்குளில் அடிக்கடி நெறிக் கட்டுதல் (Any node in the Axilla)

இவை யாவும் அடுத்த மாதவிடாய்க்குப் பிறகு மறையாவிட்டால் உடனடியாக உங்களது மருத்துவரின் ஆலோசனையுடன் மார்பகங்களை மமோகிராம் மூலம் பரிசோதித்து கொள்ள வேண்டும்.

50% Discount

பாரத் ஸ்கேன்ஸ் நிறுவனத்தினர் - உலக மார்பக புற்று நோய் விழிப்புணர்ச்சி மாதமாகிய அக்டோபர் மாதம் **1-10-02** முதல் **18-10-02** வரை தங்களது நிறுவனத்தில் மமோகிராம் பரிசோதனை செய்து கொள்பவர்களுக்கு 50% தள்ளுபடி கொடுத்து கட்டணமாக Rs.600/- மட்டுமே நிர்ணயித்துள்ளனர்.

பாரத் ஸ்கேன்ஸ் நிறுவனத்தில் உள்ள தேர்ச்சி பெற்ற மகளிர் மருத்துவர்கள் மார்பக புற்று நோய் பற்றிய விவரங்களும், பெண்கள் தங்களது மார்பகங்களை சுயமாக பரிசோதித்துக் கொள்ளும் விவரங்களையும் எடுத்துரைக்க உள்ளனர்.

மமோகிராபி தின பதிவுக் கட்டணம் - Rs.100/

For Enquiry Call : 98410 63666

BHARAT SCANS™
An ISO 9002 Organisation

பாரத் ஸ்கேன்ஸ்™
இது ஒரு ISO 9002 நிறுவனம்




Wholebody
Color Doppler And Echo Centre at

35, 1st Avenue, (Near Ashok Pillar),
Ashok Nagar, Chennai - 600 083.
Phone : 489 4677 / 471 0777



M R I, 3D Multislice Helical CT, Mammography, 3D Color Doppler Ultrasound,
Echo Cardiography, Realtime 4D Ultrasound, & DEXAscan Bone Densitometery

197, Peters Road, Opp. to New College, Chennai - 600 014.
Phone : 841 8333 / 8334 / 8335 / 8336 / 8337 851 8463 / 8464
www. Bharatscans.com e.mail : bsmri@vsnl.net



Wholebody 3D Colour Spiral CT
Scanning Centre at

57, Thiru. Vi. Ka. Industrial Estate,
Guindy, Chennai - 600 032.
Phone : 232 8118 / 231 1423 / 231 6500

இந்திய சட்டியும்

சீதா ரவி

• வரவேற்பு



• கய்யூமுடன்





• அழகிய தீவே...

"உலகில் பயங்கரவாதம் எங்கு தலைதூக்கினாலும் கண்டனம் செய்வோம்; இந்தியாவுடன் இணைந்து எதிர்ப்போம். 1988இல் எங்கள் நாட்டை அபாயம் எதிர்நோக்கியபோது இந்தியா கை கொடுத்தது. அதைத் தொடர்ந்து நமது உறவு உணர்வு ரீதியாக பலப்பட்டிருக்கிறது..." ... மாலத்தீவு அதிபர் மௌமூன் அப்துல் கைய்யூம், இந்திய பிரதமரை வரவேற்றுப் பேசிய 24 மணி நேரங்களுக்குள் பயங்கரவாதம் மீண்டும் தாக்கியது - இந்தியாவில்!

குஜராத் அக்ஷர்தாமில் நடந்த பயங்கரத்தைத் தொடர்ந்து பிரதமர் வாஜ்பாயின் மாலத்தீவு விஜயம் அவசரமாக முடிவுக்கு வர, பிரதமருடன் வந்த மெகா குழு, ஏர் இந்தியாவின் 'கிருஷ்ணதேவராயா' ஜம்போ விமானத்தில் ஏறி அகமதாபாத் நோக்கிப் பறந்தது.

விடைபெற்ற முகங்களில் உற்சாகம் குறைவாயிருந்தாலும், வழியனுப்பிய மாலத் தீவினர் முகங்களில் நன்றியுணர்வு - பெற்ற உதவிகளுக்கும் பெறப் போகும் உதவிகளுக்குமான நன்றி.

மாலத் தீவு மக்கள் இன்னும் ஏழேழு ஜன்மங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறார்கள். பிரதமர் வாஜ்பாயிடமோ, இந்திய அரசிடமோ நன்றிக் கடன் பட்டிருக்கிறார்கள் என்ற அவசர முடிவுக்கு வந்துவிட வேண்டாம்! கடந்த செப்டம்பர் 22 முதல் 25 வரையிலான மாலத் தீவு விஜயத்தின்போது வாஜ்பாயிடம் ஜனாதிபதி கய்யூம், ஒரு சூப்பர் மார்க்கெட் கொள்ளாத அளவுக்குத் தொழில்நுட்ப, நிதி உதவிகளைக் கேட்டதும் உண்மைதான்; அப்பா அம்மா நீங்கலாக அத்தனைச் சமாசாரங்

மாலத் தீவு அகப்பையும்!


• வாஜ்பாய் சிறப்புரை...

களையும் அன்னித் தர நமது பிரதமர் ஒப்புக் கொண்டதும் உண்மைதான். ஆனாலும் மாலத் தீவினர் ஏழேழு ஜன்மத்துக்கும் நன்றிக்கடன் பட்டிருப்பது ஜார்ஜ் கார்பின் என்ற இத்தாலியருக்குத்தான்!

கார்பின், மீன் பிடிப்பதில் ஆர்வம் உள்ளவர். மீன் பிடிப்பதென்றால் வலை வீசிப் பிடிப்பது அல்ல... நீருக்குள் ஈட்டி எறிந்து மீன்களை 'வேட்டையாடும்' கலையில் அவர் வல்லவர். ஒரு சரக்குக் கப்பலில் ஏறி இப்படி வேட்டையாடிக் கொண்டே வந்தவர் 1972 ஆம் வருடம் மாலத் தீவுகளை அடைந்தார். 'அட்டோல்' எனப்படும் பவழப் பாறைகளாலான அத் தீவு போன்ற அமைப்புகள், அமர்க்களமான விடுமுறை நகரங்களாக அமைவதற்கு வாய்ப்பிருக்கிறது என்று உணர்ந்தார். திரும்பிப் போய், ஒரு பத்திரிகையாளர் குழுவையும் அழைத்துக்கொண்டு மீண்டும் மாலத் தீவு வந்தார். உள்ளூர்க்காரரான எம்.யூ மானிக் அஹமத் நஸீம் என்பவரின் துணையுடன் 'குரும்பா' என்ற 'ஹாலிடே ரிசார்ட்'ஐத் தொடங்கினார். சமீபத்திய மாலத் தீவு பயணத்தின்போது இந்திய பிரதமர் தங்கியது இந்த குரும்பா ரிசார்ட்டில்தான்!

இன்று உலகம் போற்றும் சுற்றுலாத் தலமாக உயர்ந்துவிட்டது மாலத் தீவு. தீவு என்றால் ஏதோ இலங்கை, நியூசிலாந்த், மேற்கிந்தியத் தீவு போல் என்று எண்ணி விடலாகாது.

இந்துமாக் கடலில் இலங்கைக்குத் தென்மேற்கே உள்ள இந்த நாடு, விமானத்திலிருந்து பார்க்கும்போது சற்றே பெரிய ரொட்டித் துண்டுகளை சமுத்திரத்தில் யாரோ விட்டெறிந்தது போல் சிதறிக் கிடக்கிறது! 1192 தீவுகளின் மொத்தப் பரப்பளவு 298 சதுர கிலோமீட்டர்தான்! ஆனால் ஒவ்வொரு தீவும் ஒரு குட்டி சொர்க்கம். தீவுகளின் கரையையொட்டி பவழப் பாறைகளை, தெளிந்த அற்புத நீல நீரினடியில் இன்னமும் பார்க்க முடிகிறது. மனிதக் கழிவுகளால் மாசுபடாத வெண்மணல் கடற்கரைகள் குறுகலாய் இருந்தாலும், ஆழம் அதிகமில்லாது இருக்கின்றன. புன்னை மரங்களும், பன்னீர் மரங்களும், பூவரசும் இயற்கையாக வளர்ந்து மண்டிக் கிடக்க, அவற்றை அங்கங்கே அகற்றிவிட்டு தென்னை மரங்கள் நட்டு, கோன வீடுகளின் அமைப்பில், சகல வசதிகளும் கொண்ட சிறு குடில்களைக் கட்டிப் போட்டிருக்கிறார்கள். இத்தாலி, ஜெர்மனி, பிரிட்டன், ஜப்பான், அமெரிக்கா... இன்னும் உலகில் எங்கெல்லாம் செல்வம் கொழிக்கிறதோ, அங்கெல்லாமிருந்து சுற்றுலாப் பயணிகள் வந்து அவற்றில் தங்கி, தயங்காமல் டாலர்களைக் கரைத்துவிட்டுப் போகிறார்கள்!

மாலத் தீவுகளின் முக்கிய வருமானமே சுற்றுலாத் துறையிலிருந்துதான் கிடைக்கிறது. அத்தனையும் அந்நியச் செலாவணி! (அடுத்து வருவது மீன்பிடித் தொழில்) அவ்வாறிருந்தும் இந் நாட்டின் அந்நியச் செலாவணி கடன் தொகை மிக அதிகமாயிருக்கிறது. ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்குமான இடைவெளி 312.39 மில்லியன் அமெரிக்க டாலர்கள்! உலக வரைபடத்தில் ஸ்டிக்கர் பொட்டு போல் ஒட்டிக் கொண்டிருக்கும் குட்டிநாடு இதை எப்படித்தான் தாங்கும்! அதனால்தான் உதவி கேட்டு கரம் நீட்டுகிறது, பக்கத்து வீட்டுப் பெரியண்ணனை நோக்கி!

நமது பிரதமரும், காவேரி, காஷ்மீர், காங்கிரஸ் போன்ற தலைவலிகளையும், திருகுவலிகளையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு கவித்துவத்துடன் உதவிக்கரம் நீட்டிவிட்டார் மாலத் தீவுக்கு!

"மாலத் தீவுக்கு நான் முதல்முறையாக இப்போதுதான் வருகிறேன். 'இந்துமாக் கடலில் பூத்த மலர்' என்று மார்க்கோ போலோ இந்நாட்டை ஏன் அழைத்தார் என்பது இப்போதல்லவா தெரிகிறது! பல நூற்றாண்டுகளாக, கடல் பயணிகள் இத்தீவுகளால் ஈர்க்கப்பட்டது ஏன் என்றும் புரிகிறது.. சூரிய ஒளியில் குளித்த தீவுகளும், வெள்ளி மணல் கடற்கரைகளும், ஆழமில்லாத தெளிந்த கடல்நீர் தூங்கிக் கிடக்கின்ற அழகும் இப்பயணிகளை ஈர்த்துள்ளன.... சிறியது பெரியது என்ற பாகுபாடின்றி உலகின் எந்த தேசமும் நமது மரியாதைக்கு உரியதே. இரு நாடுகளிடையேயான உறவு, நிலப்பரப்பின் அளவால் நிர்ணயிக்கப்படுவதில்லை; பூமி கிரகம் என்ற



• இந்துமாக்கடலில் பூத்த மலர்

திறந்த வெளி அருங்காட்சியகத்தில் ஒவ்வொரு தேசமும் ஒரு ரத்தினம்."

- தலைநகர் மாலேவில் வழங்கப்பட்ட வரவேற்பின்போது, மேயர் இஸ்மாயில் ஷஃபியுவிடம் நகரின் சாவியைப் பெற்றுக்கொண்ட பிரதமர் வாஜ்பாய் பேசிய வார்த்தைகள் இவை.

இந்நாட்டுக்கு இந்தியா அளித்துள்ள/அளிக்கப் போகிற உதவிகளின் பட்டியலைப் பார்ப்போமா...?


- விஞ்ஞானத் தொழில்நுட்ப உடன்படிக்கைக்கான வரைவு தயாராகி வருகிறது.
- விவசாயத் துறையில், மண் ஆய்வுக்கான இந்திய உதவியை நாடியிருக்கிறது மாலத் தீவு.
- 'ஹுல்ஹுமாலே' என்ற புதிய நகர நிர்மாணத்தில் உதவி, அங்கு எதிர்காலத்தில் ஐம்பதாயிரம் பேர் குடியேற குடியிருப்புகள் அமைக்கவும், அந்நகரைப் பசுமையாக்கவும் பாரதம் உதவும்.
- ராணுவப் பயிற்சி முகாம்களின் எண்ணிக்கை '95-'96ம் ஆண்டில் 23. இப்போது 101 பயிற்சி முகாம்கள் நடத்துகிறது இந்தியா!
- பி-18 ரேடார்களைப் பரிசாக வழங்கி அவற்றை உபயோகிக்க மாலத்தீவினருக்குப் பயிற்சியும் அளித்துள்ளது.
- மாலத் தீவுகளை முறையாக வரை படம் எடுக்க (mapping) டிஜிடல் தொழில் நுட்ப உதவியை நமது 'இஸ்ரோ' வழங்கப் போகிறது.
- எலக்ட்ரானிக் தொழில் நுட்பம் நிறுவி நிர்வகிக்கும் உதவியும் அளிக்கப்படும்.
- நாற்பது கோடி ரூபாய் செலவில் இந்தியா அமைத்துக் கொடுத்துள்ள இந்திரா காந்தி நினைவு மருத்துவமனையில் இன்னொரு ஆபரேஷன் தியேட்டர் கட்டித் தரப்படும். இதனை ஒரு மருத்துவக் கல்லூரியாகவும் செயல்படச் செய்ய உதவி கோரியிருக்கிறது மாலத் தீவு அரசாங்கம். மாலத் தீவு மாணவர்களுக்கு நமது மருத்துவக் கல்லூரிகளில் இரண்டு இடங்கள் ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளன. இனி அது நான்காக அதிகரிக்கப்படும். டெலி மருத்துவ உதவிகள் வழங்கவும் திட்டங்கள் உள்ளன.
- சென்னையிலும், பெங்களூர், ஹைதராபாத் போன்ற நகரங்களிலும் உள்ள ஐ.டி நகரமொன்றை, இங்கே மாலத் தீவிலும் நிறுவ வேண்டுமாம்... இந்த ஐ.டி தீவு அமைக்கும் முன் ஒரு குழு நமது பெங்களூர், ஹைதராபாத் (கவனிக்கவும், சென்னை அல்ல) ஐ.டி நகர வசதிகளை வந்து பார்வையிடப் போகிறது.
- முஸ்லிம் நாடான மாலத் தீவில் பழைய, பாழடைந்த மசூதி ஒன்றைப் புதுப்பிக்க இந்தியா ஏற்கெனவே உதவியிருக்கிறது. ஃபென்ஃபுஷி மசூதி என்ற மற்றுமொரு பழம்பெரும் மசூதியைச் சீரமைக்க இந்திய தேசியக் கலாசார பாதுகாப்பு விஞ்ஞானக் கூடம் உதவப் போகிறது.
- ஹோட்டல் தொழில் பயிலகத்தின் புதிய கட்டடத்துக்குப் பிரதமர் வாஜ்பாய் அடிக்கல் நாட்டினார். இந்தப் பயிற்சிக் கூடத்தின் விரைவான முன்னேற்றத்துக்கும், கட்டடம் கட்டி முடிப்பதற்கு ஆகக்கூடிய மூன்றாண்டுக் கால இடைவெளிக்கு முன்னதாகவே பாடங்களைத் தொடங்கி நடத்தவும் உதவப் போகிறோம்.

இத்தனை உதவிகளையும் கணக்கிட்டுப் பார்த்தால் தலை சுற்றவே செய்யும். நமது நிலைமையே ஆட்டங் கண்டிருக்க, இந்திய சட்டியிலிருந்து மாலத் தீவு, அகப்பை கொண்டு அள்ளுவதற்கு எப்படி முடிகிறது? என்ற கேள்வி எழும்.

தனி நபர் வருமானம், நாட்டின் மொத்த உற்பத்தியில் வளர்ச்சி விகிதம், கரன்ஸி மதிப்பு என்று எதை எடுத்துக்கொண்டாலும் இந்தியாவைக் காட்டிலும் மாலத் தீவே முன்னணியிலிருக்கிறது. ஒரு டாலருக்கு 48.50 இந்திய ரூபாய் மதிப்பு; மாலத் தீவு செலாவணி மதிப்போ டாலருக்கு 12.75 ரூஃப்பியா!

ஆனாலும் நாம் உதவிகளை அள்ளித் தருவது ஏன்...? இதற்கு அதிபர் அப்துல் கய்யூமின் கவித்துவமான விளக்கமும், நமது அயலுறவுத் துறையினரின் 'கணக்கு போட்ட' விளக்கமும் பதில் கூறும்.

(தொடரும்)





கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
- பாரதியார்.

மோடியின் மூர்க்கத்தனம்!


அக்ஷர்தாமில் நடந்த பயங்கரம் கண்டனத்துக்குரியது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதே அளவுக்குக் கண்டனம் செய்யப்படவேண்டியவை, குஜராத் அரசின் அணுகுமுறையும், அதற்கு மத்திய அரசு அளித்து வரும் ஆதரவும்.

"காஷ்மீர் தேர்தல்கள் வெற்றிகரமாக நடந்துவிட்டதில் எரிச்சலுற்றுத்தான் பயங்கரவாதிகள் அக்ஷர்தாமை முற்றுகையிட்டார்கள்" என்கிறார் பிரதமர். பாக். தூண்டுதலால் இது நடந்துள்ளது என்று மறைமுகமாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

இது பாகிஸ்தானின் சதித்திட்டம் என்றே வைத்துக் கொண்டாலும், அதற்கான ஆதாரம் முஷாரஃபின் ஐ.நா. சபை உரை என்று அத்வானியும் மற்றவர்களும் கூறுவதை ஏற்றுக் கொண்டாலும், அத்தகைய ஆதாரம் கிடைத்த பிறகு அத்வானியும் மோடியும் வெகு எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டாமா? மக்களின் பாதுகாப்புக்குத் திட்டமிட்டிருக்க வேண்டாமா?



2002 அக்டோபர் 6
சித்ரபானு புரட்டாசி 20
மலர் : 61
இதழ் : 10



அமைச்சர்களின் பாதுகாப்புக்கு கறுப்புப் பூனைகள் இருக்கிறார்கள். மக்களை யார் காப்பார்கள்?

கோத்ரா சம்பவத்தைத் தொடர்ந்து நடந்த வன்முறைகளில் இஸ்லாமியர்கள் திட்டமிட்டுத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். மோடியின் அரசு இதற்கான வரைவுத் திட்டமே போட்டிருந்தது. இந்த உண்மைகள் தன்னார்வ அமைப்புகளின் ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளன.

கௌரவ ரத யாத்திரை என்கிற போர்வையில் சமீபத்தில் குஜராத் முதல்வர் மோடி பேசிய அபத்த அநாகரிகங்களைச் சுலபத்தில் யாரும் மறந்துவிட முடியாது.

இந்தச் செயல்களின் பின்விளைவு என்னவாக இருக்கும் என்பது குறித்து நரேந்திர மோடிக்குத் துளியும் கவலை இல்லை.


குஜராத் அரசின் முஸ்லிம் விரோதப் போக்கினால், ஏற்கெனவே பயங்கரவாதத்தில் ஈடுபட்டுவரும் இஸ்லாமிய அமைப்புகள் மேலும் வெறிகொண்டு திட்டமிட்டுத் தாக்கும். இஸ்லாமியர்களுள், இதுவரை ஒதுங்கியிருந்த அமைதி விரும்பிகளும் கூட, உணர்ச்சிகள் தூண்டப்பட்டு வன்முறையில் ஈடுபட முன்வரலாம்.

அக்ஷர்தாமில் அத்தகையதொரு முயற்சிதான் நடந்திருப்பதாகத் தோன்றுகிறது.

23 ஏக்கர் பரப்புள்ள கோயிலை முற்றுகையிட்டு, நூற்றுக்கணக்கான பக்தர்களை வளைத்துப் பிணைக்கைதிகளாக்குவது என்பது சுலபமல்ல. அதைச் செய்ய இரண்டு மூன்று பேரே கொண்ட சிறு குழு முயன்றிருக்கிறது என்பது கவனத்துக்குரியது. அனுபவம் பெற்ற 'தொழில் முறை' பயங்கரவாதிகள் இதைக் காட்டிலும் எச்சரிக்கை உணர்வுடன் செயல்பட்டிருப்பார்கள்.

கொலையுண்ட பயங்கரவாதிகளின் பாக்கெட்டிலிருந்து கண்டெடுக்கப்பட்ட கடிதம், கோத்ரா சம்பவத்துக்குப் பிறகு நடந்த வன்முறைகளுக்குப் பழிவாங்குவதாகத்தான் குறிப்பிடுகிறது.

அக்ஷர்தாமில் உயிரிழந்த பயங்கரவாதிகள் சகல விதமான ஆயுதங்களும் வைத்திருந்ததாக அறிகிறோம். இவற்றைப் பெற பாகிஸ்தான் உதவி கிடைத்திருக்கலாம். ஆனால், பழிவாங்குவதற்கான வித்து குஜராத்தில், முஸ்லிம்களுக்கு எதிரான அதிகாரப்பூர்வமான



திட்டமிட்ட கொடூரம் என்ற விளைநிலத்தில்தான் முதலில் முளைத்தது.

இந்தக் கொடூரங்கள் வெளிச்சத்துக்கு வந்த பிறகு, மோடியே ராஜினாமா செய்திருக்க வேண்டும். ஆனால், அவர் ராஜினாமா செய்யவுமில்லை; மத்திய அரசு அதனை வலியுறுத்தவுமில்லை.

மோடி பதவி விலக மறுத்ததும் அல்லாமல், சட்டசபையைக் கலைத்துவிட்டு தேர்தல் நடத்துவேன் என்று அடம்பிடிக்கிறார். அவருடைய மூர்க்கத்தனத்தை ஆதரித்து, மத்திய அரசும் குஜராத் தேர்தலுக்கு ஒப்புதல் அளிக்குமாறு தேர்தல் கமிஷனுடனும் உச்சநீதிமன்றத்துடனும் மோதுகிறது!

இதுபோன்ற கேவலங்களாலும், மோடியின் ஒளிவு மறைவற்ற முஸ்லிம் விரோதத்தாலும் எத்தனை உயிர்கள் அநியாயமாய்ப் பலியாகியிருக்கின்றன!

அக்ஷர்தாமில் மட்டுமே 29 பக்தர்கள் செத்துப் போயிருக்கிறார்கள்;

கோயில் வளாகத்துள் மாட்டிக் கொண்டவர்களைக் காப்பாற்றச் சென்ற கமாண்டோ படையினருள் ஒருவரும் அநியாயமாய் இறந்து போயிருக்கிறார்கள்.

கண்மூடித்தனமான அடிப்படைவாதப் போக்கு, சம்பந்தாசம்பந்தமில்லாத நல்லவர்களையும் வல்லவர்களையும் பலிகொண்டிருக்கிறது.

புதிய வன்முறையாளர்களைத் தோற்றுவிப்பதுடன், அவர்களை இஸ்லாமிய அண்டை நாடான பாகிஸ்தானின் கூலியாட்களாகவும் மாற்றுகிறது.

மாலத் தீவுக்குச் சென்ற பிரதமர், அக்ஷர்தாம் பற்றிய செய்தி தெரிய வந்ததுமே தொலைபேசி மூலம் அத்வானியிடம் பேசியிருக்கிறார்; குடியரசுத் தலைவர் அப்துல்கலாமிடம் பேசியிருக்கிறார்; குஜராத் ஆளுனரிடம் பேசியிருக்கிறார்... ஆனால், அவர் மோடியை போனில் அழைத்துப் பேசியதாகச் செய்தி இல்லை! மோடி பேரில் எத்தனை நம்பிக்கை வைக்கலாம் என்பதற்கு இது ஒன்றே போதுமானது!

அத்தகைய மனிதர் இன்னமும் குஜராத்தின் முதல்வராகத் தொடர அனுமதிக்கப்படுவதுதான் வெட்கக்கேடு! ○

போட்டு வாங்க முயன்ற வாழப்பாடியார்!

● சமீபத்தில் காங்கிரஸ் மேலிடப் பார்வையாளர்கள் தமிழ்நாடு ஒருங்கிணைப்புக் கமிட்டியின் உறுப்பினர்களைத் தனித் தனியாகச் சந்தித்து நிர்வாகிகள் மாற்றத்தைப் பற்றி கருத்துக்கள் தெரிவித்தார்கள் அல்லவா! அப்போது வாழப்பாடியார் தலைவர் பதவிக்குத் தம்மையும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டதோடு மட்டுமல்லாமல் வரும் பாராளுமன்றத் தேர்தலில் யாரோடு கூட்டணி என்பதையும் உடனடியாக காங்கிரஸ் மேலிடம் அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். "இப்போதுள்ள சூழ்நிலையில் அ.இ.அ.தி.மு.க.வோடு கூட்டணி அமைக்கும் நிலை இல்லை; எனவே தி.மு.க.வோடு கூட்டணி என்று அறிவித்து விடுங்கள். இரண்டு கட்சியினரும் ஒருங்கிணைந்து வேலை செய்ய வசதியாக இருக்கும்" என்றாராம் வாழப்பாடி. ஆனால் அவரது கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லையாம். "அம்மாவின் ஆதரவாளரான வாழப்பாடியார், மேலிடத்தின் மனநிலையைத் தெரிந்து கொள்ளத்தான் இப்படி 'போட்டு வாங்க' முயற்சிக்கிறார்" என்றாராம் ஒரு மேடைப் பார்வையாளர்.

● சட்டமன்றத் தேர்தல்களில் எதிர்பார்த்த வெற்றி மதிமுகவுக்குக் கிடைக்காவிட்டாலும் பலமான கூட்டணியில் இடம் பெற்றது மூலம் இரண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் கணிசமான இடங்களைப் பெற்றது அது. 'பொடா'வில் வைகோ மற்றும் அவரது கட்சிக்காரர்கள் கைது செய்யப்பட்டதும், பா.ஜ.க. அ.இ.அ.தி.மு.க.வோடு நெருங்கி வருவதும், கூட்டணியை மாற்ற வேண்டிய அவசியத்தை வைகோவுக்கு ஏற்படுத்திவிடும் என்கிறார்கள். பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க - அ.இ.அ.தி.மு.க கூட்டணி அமைக்கும் சூழ்நிலையில் அதே கூட்டணியில் பா.ஜ.கவை விட மனதில்லாமல் "எங்கள் கூட்டணி பா.ஜ.க.வோடுதான்; அம்மாவோடு இல்லை" என்று ம.தி.மு.க சொல்லித் தொடரும் வாய்ப்பு மிக, மிகக் குறைவாம். இந்த நிலையில், சமீபத்தில் கலைஞருக்கு வேண்டிய மூத்த பத்திரிகையாளர் ஒருவரும், கவிஞர் வைரமுத்துவும் வைகோவைச் சிறையில் சந்தித்ததைத் தொடர்ந்து 'தி.மு.க.வுடன் நெருங்கி வருகிறாரோ' என்று பேச்சு அடிபட்டது. ஆனால் அந்த சந்திப்புகள் முற்றிலும் தமிழ் உணர்வு மற்றும் நட்பு அடிப்படையில் நடந்தது என்கிறது ம.தி.மு.க வட்டாரம். காவிரிப் பிரச்னை பற்றிய அறிக்கையில் ஜெயலலிதா, கலைஞரின் பரம்பரையைப் பற்றி விஷமத்தனமாகச் சொன்னதற்கு ம.தி.மு.க.வும் தனது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.





● தமிழக கிராம மக்கள் முன்னேற்றக் கழகம் என்றொரு அமைப்பு துவங்கும் ஏற்பாட்டில் இருக்கிறார் பா.ம.கவில் முக்கியப் புள்ளியாக இருந்த பூங்கா ராதாகிருஷ்ணன். இது அரசியல் கட்சி அல்லவாம். கிராமங்களில் உள்ள படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு இலவசமாக ஆடு கொடுப்பார்களாம். அந்த ஆட்டை வளர்த்து அதன் இனத்தைப் பெருக்கி, பொருளாதார பலத்தை அந்த இளைஞர்கள் தேடிக் கொள்ள வேண்டுமாம். ஆடு வளர்ப்பது மட்டுமல்லாமல், மக்கள் மற்றும் நாட்டு நலனுக்காக மாதம் ஒருமுறை கிராமங்களில் அக்னி வளர்த்து யாகமும் செய்வார்களாம் இந்த இளைஞர்கள். இந்தத் திட்டத்தைப் பற்றி ஆர்வமாக முழுதும் கேட்டறிந்த காஞ்சி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தமது ஆசிகளையும் தெரிவித்து தேவையான உதவிகளைச் செய்வதாகச் சொல்லியிருக்கிறாராம்.

— சஞ்சயன்

ஆல் தோட்ட 'பூபதி!'

"மகேஷ் பூபதி எடுத்த சுயநல முடிவு அது. என்றாலும் அவரது முடிவை நான் பாராட்டுகிறேன்!"

தானும் மகேஷ் பூபதியும் தனித்தனியே பிரிந்து விளையாடுவது குறித்து சில நாட்களுக்கு முன் லியாண்டர் பயஸ் இப்படிக் கூறினார். அந்த 'சுயநலம்' மகேஷைப் பொறுத்தவரை சாதகமான முடிவுகளையே இந்த சீஸனில் தந்திருக்கிறது. இது ஆல் தோட்ட பூபதி பாடல் லெவலைவிட எக்கச்சக்க பாபுலராக்கியிருக்கிறது இவரை.

பிரபலமான நான்கு கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான யு.எஸ். ஓப்பன் இரட்டையர் பிரிவின் இறுதிச் சுற்றில் வெற்றி வாகை சூடியிருக்கிறார் மகேஷ். கூட ஆடியவர் மாக்ஸ் மிர்னை என்பவர்.

போன வருடம் பிரெஞ்சு ஓப்பன் பந்தயத்தில்கூட கோப்பையை இணைந்துதான் கைப்பற்றினார்கள் மகேஷும், லியாண்டரும். ஆனால் அதற்குப் பிறகு நடந்த கிராண்ட் ஸ்லாம் பந்தயங்களில் அவர்களுக்கு மரண அடி. முதல் சுற்றிலேயே கிட்டத்தட்ட முகம் தெரியாதவர்களிடம் தோற்று வெளியேறினார்கள்.

பிறகுதான் ஜோடி மாற்றும் முடிவு.

பல டென்னிஸ் பிரபலங்களை வதைக்கும் தீவிரத் தோள்வலி மகேஷ் பூபதியையும் ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிறது. எனவே, அவர் வரும் டேவிஸ் கோப்பை பந்தயத்தில் பங்கேற்பது சந்தேகம். ஆனால், அதைத் தொடர்ந்து வரும், தென்கொரியாவில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் நிச்சயம் பங்கேற்பார். 'நாலு வருடங்களுக்கு ஒரு முறை வரும் போட்டியாச்சே. மிஸ் செய்வேனா?' என்கிறார் துடிப்போடு.



லியாண்டரின் நிலை என்ன? டல்தான். இந்த ஆண்டு பிரெஞ்சு ஓப்பனில் அரையிறுதி வரை வந்தாலும் ஆனந்தம் தரக்கூடிய பிற போட்டி முடிவுகள் எதுவுமில்லை.


— குல்னூ

கி.ரா.வுக்கு

திருப்பூர் கிருஷ்ணன்

இலக்கியவாதியாக இயங்குவோர் மத்தியில், இலக்கியமாகவே வாழ்பவர் - அண்மையில் எண்பது வயது கண்டிருக்கும் கிருஷ்ணராஜ நாராயணப் பெருமாள் நாயக்கர் என்கிற கி. ராஜநாராயணன். அவர் வாழ்வே இலக்கியம். அவரும் அவர் மனைவியும் நடத்தும் அன்பு மயமான இல்லறம் ஒரு தனி இலக்கியம். வஞ்சகம், புறம்பேசுதல், நெஞ்சு முட்டப் பொறாமைப்படுதல், ஜாதியைச் சொல்லித் தாக்குதல் என்று பலவகை குணக்கேடுகள் கொண்ட எழுத்தாளர்களைச் சந்தித்திருக்கிறேன். மற்ற துறைகளைப் போலவே எழுத்துத் துறையிலும் சகுனிகளும் கூனிகளும் உண்டு. கி.ரா இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர். அவர் கண், காது, மூக்கு, வாய் எல்லாம் அன்பால் மட்டுமே செய்யப்பட்டவை. பார்வையிலேயே பிரியத்தைக் கொட்டவும், ஒரு கைப் பிடிப்பில் தம் முழு ஆதரவைத் தெரிவிக்கவும் அவரால்தான் முடியும்.

அவருக்கு வாய்த்த மனைவி அவருடன் பழகிப் பழகியோ என்னவோ அவரது குணங்களையே கொண்டவராகி விட்டார். தோசை மாவு என்ற பெயரில் உலகின் தாய்ப்பாசம் அத்தனையையும் ஒரு கலக்குக் கலக்கி, தோசைக் கல்லில் வட்டமாய் வார்த்து, எண்ணெய் என்ற பெயரில் ஒரு ஸ்பூன் பிரியத்தையும் விட்டுத் திருப்பிப் போட்டு, நமக்கு அவர் தோசை பரிமாறும் போது நம் வாழ்வையே அன்பு மயமானதாக அவர் திருப்பிப் போட்டு விடுவார்



• கி.ரா

• வெங்கடசுப்ரமணியன்



• மீரா



வயது என்பது...

சுவடுகள்:39

கடும் வெய்யிலில் ஆலமர நிழலில் அக்கடா என்று உட்காருகிற மாதிரி, அந்தத் தம்பதியினரின் பாசக் குளுமையில் சற்று நேரம் இளைப்பாறக் கிடைப்பது தனி சுகம். அவர்கள் வருகைக்குப் பிறகு பாண்டிச்சேரி பிரதேசத்தில் அன்பின் ஒளி சற்றுக் கூடுதலாகிவிட்டது. அரவிந்தரும் அன்னையும் தவம் நிகழ்த்திய பூமி. அந்தத் திருத்தலம் நல்லவர்களை ஈர்ப்பதில் ஆச்சரியமென்ன? கரிசல் காட்டை விட்டு விட்டு கி.ரா. புதுச்சேரியில் தங்கிவிட்டார்.

கி.ரா, புதுச்சேரி வந்த பிறகுதான் எனக்கு அவரோடு பழக்கம். புதுவைப் பல்கலை நாடகத் துறையில் பிஎச்.டி படிப்புக்குப் பதிவு செய்துகொண்டேன். அது ஓர் ஐந்தாண்டுத் திட்டம் போல் ஆகிவிட்டது. அண்மையில்தான் 'இந்திரா பார்த்தசாரதியின் நாடகங்கள்' பற்றிய என் ஆய்வேட்டுக்கு டாக்டர் பட்டம் கிடைத்தது. நாடகத் துறைத் தலைவர் கே.ஏ. குணசேகரன், என் நெறியாளராக இருந்தவரும், இப்போது திருநெல்வேலியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிபவருமான அறிஞர் அ. ராமசாமி என இருவருமே என் வளர்ச்சியில் அக்கறை உள்ளவர்கள். ஒவ்வொரு முறையும் சென்னையிலிருந்து புதுவைப் பல்கலை சென்று அவர்களை நான் சந்திக்கும்போது 'என்ன கி.ரா.வைப் போய்ப் பார்த்தாயிற்றா, இல்லை இனிமேல் தான் பார்க்கப் போகிறீர்களா?' என்று அவர்கள் விசாரிப்பதுண்டு. கி.ரா எழுத்தில் எனக்கு உள்ள ஈடுபாட்டை அறிந்தவர்கள் அவர்கள். புதுவை சென்றால் பாரதியார் வழிபட்ட மணக்குள விநாயகருக்கு ஒரு கும்பிடு போட்டுக் கொள்வது, அரவிந்த ஆசிரமம் சென்று தியானம் செய்வது இவற்றோடு கி.ரா. வீடு செல்வதும் தவறாமல் இணைந்து கொண்டது.

புதுவைப் பல்கலை முன்னாள் துணைவேந்தரும், தற்போதைய திட்டக் குழுத் தலைவரும், சிறந்த பேச்சாளருமான டாக்டர் வெ. வேங்கடசுப்பிரமணியன்தான், முறையான படிப்பில்லாத அறிஞர் கி.ரா.வை கௌரவப் பேராசிரியராக்கியவர். (க.நா.சு.வையும் அவர் தான் பேராசிரியராக்கினார்.) புதுவைப் பல்கலையின் தமிழ்த் துறை ஜானகிராமன் குறித்து ஒரு கருத்தரங்கம் நடத்தியது. நான் கட்டுரை வாசிக்க அழைக்கப்பட்டேன். அப்போது கி.ரா. பல்கலையில் இணைந்த புதிது. கருத்தரங்க அழைப்பிதழில் ஜானகிராமன், சானகிராமனாக்கப் பட்டிருந்தார். நான் அதுகுறித்து கி.ரா. விடம் என் வருத்தத்தைப் பரிமாறிக் கொண்டேன். இயல்புக்கு மாறான அதி தீவிர தனித்தமிழ் கி.ரா.வுக்கு உடன்பாடானதே அல்ல. நான் மேடையில் கட்டுரை வாசித்த பின், கேள்வி நேரத்தின் போது பல கேள்விகள் வந்தன. தி.ஜா. பாலியல் எழுத்தாளர் என்பது போல் அவர் இலக்கியத்தை மேலோட்டமாய்க் கண்டு கொச்சைப்படுத்தி வந்த வினாக்கள் அதிகம். எனக்கு ஆதரவாக கி.ரா. மேடையேறிப் பதில் சொல்லலானார். பாலியல் எழுதத் தகாதது அல்ல என்றும், ஜானகிராமன் பாலியல் பிரச்னைகளைப் பூடகமாகத் தான் கையாண்டார் என்றும், தி.ஜா.வைப் பாலியல் எழுத்தாளர் என்பது, எதையும் ஆழமாகப் பார்க்காமல் தட்டையாகவே பார்க்கும் அறிவுக் குறைபாட்டைச் சார்ந்தது என்றும் அவர் விளக்கியதும் சபை அடங்கியது.

சில ஆண்டுகள் கடந்தன. அவர் நாட்டுப்புறப் பாலியல் கதைகளைத் தொகுக்கலானார். அந்தக் கடும் பச்சைக் கதைகள் ஒரு வார இதழில் தொடராகவும் வந்தன. கு.ப.ரா., தி.ஜா போல் அல்லாமல் பாலியலை வெளிப்படையாக எழுதும் போக்கு எனக்கு உடன்பாடாக இல்லை என்பதை அவரிடம் தெரிவித்தேன். அவர்


என் கருத்தோடு உடன்படவில்லையானாலும், என் அபிப்ராயத்திற்கு மதிப்புக் கொடுத்துக் கேட்டுக்கொண்டார்.

கி.ரா. இசைப் பிரியர். அவர் இசை பற்றிப் பேசினால் இன்றைக்கெல்லாம் கச்சேரி கேட்பது போல் கேட்கலாம். பழைய இசை மேதைகள் பற்றி அவர் பேசும்போது அன்றைய ஒலியலைகள் காலக் காற்றில் ஆண்டுகள் தாண்டி வந்து நம் காதில் ரீங்கரிக்கும். இலக்கியத்தில் இரண்டு பேரைப் பற்றி அவருக்கு மறுபடி மறுபடிப் பேசப் பிடிக்கும். ஒருவர் டி.கே.சி, இன்னொருவர் கு. அழகிரிசாமி.

கோமல் சுவாமிநாதன், அண்மையில் காலமான மீரா இருவரும் கி.ரா. ரசிகர்கள். அவர்கள் இருவரோடும் கி.ரா. இலக்கியம் குறித்து நிறைய பேசி மகிழ்ந்திருக்கிறேன். கோமல் கி.ரா.வின் 'நாற்காலி' கதையை இலக்கியச் சிந்தனை விழா ஒன்றில் நாடகமாக்கி மேடையேற்றினார். கி.ரா.வின் கடிதங்கள் அவர் கதை எழுதுவதுபோல் சிரத்தை எடுத்து எழுதுபவை. அவர் கடிதங்களின் நடை நம்மை வசீகரித்து மறுபடி மறுபடி வாசிக்கத் தூண்டும். அதைக் கிழித்துப் போட மனம் வராது. (கி.ரா. போல் இலக்கியமாய்க் கடிதம் எழுதும் இன்னொருவர் வண்ணதாசன்.)

நான் கி.ரா. வீடு செல்லும் போதெல்லாம் அவர் பேச்சில் மயங்கி நேரமாகி விடுவதும் அவசர அவசரமாகப் புறப்படுவதும் வழக்கம். ஒவ்வொரு முறையும் பேருந்து நிறுத்தம் வரை வந்து வழியனுப்புவார். நெடுஞ்சாலையில் பேருந்து வெகுதூரம் சென்று வளைவில் திரும்பி மறையும் வரை, அவர் கையசைப்பதை நான் பேருந்து ஜன்னல் வழியே கண்ணில் நீர்மல்கப் பார்த்துக் கொண்டிருப்பேன். என்ன பாசம்! என்ன நட்பு! மனிதர்களை நேசிப்பதை வாழ்க்கைக் கோட்பாடாகக் கொண்டிருப்பவர் அவர். இப்போது அவர் நகரத்தில் வாழ்ந்தாலும் என்ன? எப்போதும் ஓர் அன்புமயமான கிராமத்து விவசாயி தான் அவர்.

(தொடரும்)



மகாத்மா காந்தி படைப்புகள்

ஒரு சிறப்புத் தொகுப்பு

தமிழ்ப் பதிப்பாசிரியர்
லா.சு. ரங்கராஜன்

முழுநிறைவாகத்
தேர்ந்தெடுக்கப்பட்ட
வாசகங்கள் அடங்கிய
**காந்திய சிந்தனைக்
களஞ்சியம்**
ஐந்து தொகுதிகள்
கொண்ட நூல் வரிசை

**நவஜீவன்
பிரசுராலயம்**
அகமதாபாத் - 380 014.

விலை ரூ.200/- மட்டுமே

(ஸ்ரீமன் நாராயண் ஆங்கிலத்தில் தொகுத்து, நவஜீவன் டிரஸ்ட் (அகமதாபாத்) வெளியிட்ட 'The Selected works of Mahatma Gandhi' நூல் வரிசையின் தமிழாக்கம்)

நூல் 1 : காந்திஜியின் 'சுயசரிதை' (முழுமையாக)

நூல் 2 : 'தென்னாப்பிரிக்க சத்தியாக்கிரகம்' (முழுமையாக)

நூல் 3 : ஆதார நூல்கள் (காந்திஜி எழுதிய சிற்றேடுகளான 'அறநெறிச் சமயம்', 'சர்வோதயம்', 'ஹிந்த் ஸ்வராஜ் அல்லது இந்தியத் தன்னாட்சி', 'எரவாடா மந்திரிலிருந்து', 'கீதை உரைகள்', 'நிர்மாணத் திட்டம்' மற்றும் 'ஆரோக்கியத் திறவுகோல்'.

நூல் 4 : தேர்ந்தெடுத்த கடிதங்கள் மற்றும் கடிதப் பகுதிகள்

நூல் 5 : உண்மையின் குரல் (சில புகழ்பெற்ற பேருரைகள் மற்றும் காந்திஜி எழுதிய கட்டுரைகளிலிருந்து வாசகப் பகுதிகள்)

முக்கிய விநியோகஸ்தர்கள் :
காந்திய இலக்கியச் சங்கம், தமிழ்நாடு காந்தி நிதி,
மதுரை - 625 620.
சென்னையில் : **காந்தி அமைதி நிறுவனம் (Gandhi Peace Foundation, Madras)**
332, அம்புஜம்மாள் தெரு (செட்டியார் ஹால் எதிரில்),
ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் : 4970039

(முற்பகல் 10 முதல் 11.30, மாலை 4 முதல் 6 மணி வரை)



• இந்துப்ரியாவுக்குப் பரிசு



• நல உதவித் திட்டம்



• சாலைப்பணிகள்



• போதமலை • நாமக்கல்

கல்வியில்

• • சாருகேசி • •

சென்னை போன்ற நகரங்களிலிருந்து மட்டுமே அதிக மதிப்பெண் பெறும் மாணவ - மாணவிகளை உருவாக்க முடியும் என்று நினைத்திருப்பவர்கள், தயவு செய்து அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளவும். புதிதாக உருவான, ஒரு சின்ன மாவட்டத்தில் கூட அது போன்ற சாதனைகள் புரிய முடியும்!

"ஜூன் மாதம் வந்துவிட்டால், இங்கேயுள்ள பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்க்க சிபாரிசு தேடி வரும் பெற்றோர்கள் ஏராளம். சென்னையிலிருந்து கூட நிறையப் பேர் எனக்கு போன் செய்து, இடம் வாங்கித் தரச் சொல்லுகிறார்கள்!" என்று நாமக்கல் மாவட்ட ஆட்சியர் ராஜேந்திரன் சொன்னபோது, தூக்கிவாரிப் போடாவிட்டாலும் சற்றே வியப்பாகத்தான் இருந்தது.

"நிஜமாகவா?"

"ஆமாம். ராசிபுரம் எஸ்.ஆர்.வி.மேல்நிலைப் பள்ளி இந்துப்ரியா, திருச்செங்கோடு வரகூராம்பட்டி வித்யா விகாஸ் பள்ளி கோதை நாச்சியார் மற்றும் பிரவீண்குமார், மூன்று பேரும் இந்த வருடம் ப்ளஸ் டூ தேர்வில் மாநிலத்திலேயே முதல் மூன்று இடங்களைப் பிடித்திருக்கிறார்கள். மூன்று பேருமே 1200க்கு 1177 வித்யா விகாஸ் பள்ளி எஸ். சந்தோஷ் இரண்டாவது இடம். எஸ்.ஆர்.வி.பள்ளி ஆர்.சங்கீதா மூன்றாவது இடம்!"

மாவட்டத்தில் பதினைந்து பள்ளிகளில் 100% தேர்ச்சி.

சிறந்த நாமக்கல்!



டாப்டென் கலெக்டர்கள் : 5

இருபத்திரண்டு பள்ளிகளில் 90 முதல் 99 சத விகிதம் தேர்ச்சி. பிற மாவட்டப் பள்ளிகளுக்கு, நாமக்கல் நிச்சயம் ஒரு சவால்தான்! மாணவ - மாணவிகளுக்கும், பள்ளிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், எச்.எம்.களுக்கும் 'சபாஷ்' சொல்லிவிட்டு, கலெக்டர் ராஜேந்திரன் அவர்களுக்கு, அவரது சாதனைகளுக்கான பாராட்டுகளைப் பட்டியல் போட்டுவிட்டு, தனியே ஒரு 'சபாஷ்' சொல்லுவோம்!

பாராட்டு — 1

இங்கே சட்டம் _ ஒழுங்கு கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஒரே சாதியில் இரண்டு குழுக்கள் பிரிந்து, வருடாந்தர கோயில் திருவிழாவின்போது யார் உசத்தி என்று இரு பிரிவினரும் அடித்துக் கொள்வதுதான் அதிக பட்ச பிரச்னை. ஆனால் காவல்துறை உதவியுடன் முன்னாலேயே தகவலறிந்து, அதிகாரிகளுடன் கூட்டம் நடத்தி, சட்டம் _ ஒழுங்கு பிரச்னை எழாமலே தடுத்து விடுகிறார். பிரச்னை உருவான பிறகு தடியடி, துப்பாக்கிச்சூடு என்று தலையைப் பிய்த்துக் கொள்வதைவிட, வரு முன் காப்பதல்லவா புத்திசாலித்தனமான பணி!

பாராட்டு — 2

ஒன்பது கோடி ரூபாயில், குடிநீர் வடிகால் வாரியத் திட்டம் நடைபெறுகிறது. வறட்சி காரணமாக, இன்னொரு ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கி குடிநீர் வசதிக்காக உள்ளூர் கிணறுகளைச் சீராக்கி வருகிறார்கள். மழை குறைச்சல். எனவே மழைநீர் சேமிப்புக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, தடுப்பணை கட்டி, குளம் - குட்டைகள், கசிவுநீர்க் குட்டைகள் எல்லாம் பழுது பார்க்கப்பட்டு, தூர்வாரப்பட்டு வருகின்றன. நகரை பதினைந்து மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் பொறுப்பாக ஓர் அதிகாரியை நியமித்து, நேரடியாக அவர்களே மக்களிடம் போய் நீர் வழங்கல் பற்றி விசாரித்து, அங்கேயே பிரச்னைக்குத் தீர்வு கண்டு திரும்புகிறார்கள். "இந்த நடைமுறை மக்களிடம் திருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. 95 சதவிகிதம் பிரச்னையைத் தீர்த்துவிட்டால், மீதி ஒன்றிரண்டு இடங்களில் மட்டுமே பிரச்னை கடுமையாக இருக்கும். இங்கே எல்லாம் நிவாரணத்துக்கு எப்படியாது வழி செய்துவிடுகிறோம்!" என்கிறார் கலெக்டர்.

பாராட்டு — 3

பொது விநியோக முறையில் இவருக்கு பிரச்னை ஏதும் இல்லை. "22 முதல் 27 சதவிகிதம் பேரே இங்கே ரேஷன் அரிசி வாங்குகிறார்கள். இத்தனைக்கும் ரூ. 3.50க்கு வழங்கப்படும் அரிசியின் தரம் நன்றாகவே இருக்கிறது." (பொருளாதார நிலை உயர்வு காரணமாக, சுமார் 75 சதவிகித மக்கள், பொது விநியோகத்தில் அரிசி வாங்கு வதில்லையாம்.)

பாராட்டு — 4

மாவட்ட கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தில், மத்திய _ மாநில அரசுகள் தரும் நிதியைக் கொண்டு, தூர் வாரவும், புதிய வரம்புகள் அமைக்கவும், குளங்களை

ஆழப்படுத்தவும், யந்திரங்களை உபயோகிக்காமல், மக்களுக்கே வேலை வாய்ப்புகள் தரும் வகையில் செயல்பட்டிருக்கிறார் ஆட்சியர்.

பாராட்டு – 5

பிரதமர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில், 'நபார்டு' உதவியுடன் 29 சாலைப் பணிகள் நடந்து வருகின்றன. ஓய்வு பெற்ற இஞ்சினீயர் ஒருவர் வந்து, போடப்பட்ட சாலையின் தரம் சரியாக இருக்கிறதா என்று பார்வையிடுகிறார். அவர் முழு திருப்தி தெரிவிக்கும் அளவுக்கு வேலைகள் நடைபெறுகின்றன.

பாராட்டு - 6

புதிய மரங்கள் நடுவது தவிர, 'மரங்களை வெட்டாதீர்கள். காஸ் ஸ்டவ் வாங்க நிதி உதவி தருகிறோம்' என்று மாற்றுத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறார். இதற்காக கிராம வனக் குழு உருவாக்கியிருக்கிறார். இதில் கிராம மக்கள் பெருமளவுக்கு உறுப்பினர்கள்!

பாராட்டு – 7

கீழ் மட்டத்திலுள்ள வணிகர்களுக்கு, வியாபாரத்தைப் பெருக்க உதவியாக வட்டியில்லாக் கடன் வசதி. இந்த மைக்ரோ _லெவல் கடனுதவி பலருக்கும் பயன்படுகிறது.



“அந்த நடிகைகிட்டே தமிழ் படத்துல உங்களைக் காணோமேனு கேட்டது தப்பாயிடுச்சு...”

“'தெலுங்குல பிஸி'னு சொல்லியிருப்பாங்களே!”

“அதுவாவது தேவலாமே. 'ஹாலிவுட்ல பிஸி'ன்னு சொல்றாங்க!

- எஸ். முகம்மது யூசுப்

பாராட்டு – 8

குறைகேட்கும் தினத்தன்று குறைகள், புகார்கள் பெரும்பாலும் குடிநீர், வீட்டு மனைகள் பற்றித்தான் இருக்கும். இருநூறு, முந்நூறு விண்ணப்பங்கள் வரை வரும். ஒவ்வொரு வருடமும் சுமார் ஐந்தாயிரம் வீட்டு மனைகளைப் பதிவு செய்து கொடுக்கிறார். உள்ளே தள்ளி இருக்கிற கிராமங்களுக்குக் கூட டி.ஆர்.ஓ. ஆர்.டி.ஓ, டெபுடி கலெக்டர் இவர்களுடன் நேரில் போய் விசாரித்து நடவடிக்கை எடுத்து வருகிறார். தீர்க்க முடியாத குறை என்றால், ஏன் தீர்க்க முடியாது என்று விளக்கிச் சொல்லிப் புரிய வைக்கிறார். “ஒவ்வொரு திங்கள் கிழமையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அமர்ந்து விவாதித்து முடிவுகள் எடுத்து, பதில் அனுப்புகிறோம். சில பிரச்னைகளில், இத்தனாம் தேதிக்குள் முடிக்கப்பட்டு எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட வேண்டும் என்று சொல்லிக் குறித்துக் கொண்டு விடுகிறேன்.”

பாராட்டு - 9

களப் பார்வைக்கு நேரில் சென்று பணிகள் சரியாக நடைபெறுகின்றனவா என்று பார்த்துவிட்டு, ரிவ்யூ கூட்டத்தைக் கூட்டி விவாதிக்கிறார். அப்படியென்றால் பொது மக்கள் கலெக்டரை எளிதாகப் பார்த்துவிட முடியாதோ?

“எப்போது வேண்டுமானாலும் பொது மக்கள் என்னை அணுகலாம். குறிப்பிட்ட நேரத்தில்தான் என்னைப் பார்க்க வேண்டும் என்று இல்லை. நான் இல்லாவிட்டாலும், அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியதில்லை. என் சார்பில் யாராவது ஒரு பொறுப்பான அதிகாரி பொதுமக்கள் குறையைக் கேட்பார்.”

பாராட்டு – 10

கமலாலயம் குளத்தை, என்.எஸ்.எஸ். மாணவர்களின் உதவியோடு தூர்வாரிச் சீர்படுத்தியிருக்கிறார். காவல் _ மாசுக்கட்டுப்பாடு _ போக்குவரத்து ரெவின்யூ ஆகிய நான்கு துறைகளும் முழு ஒத்துழைப்புக் கொடுத்தன. மாவட்டத்தில் இருபது டவுன் பஞ்சாயத்துகளில் 'மாஸ் க்ளீனிங்' முகாம்கள் நடத்தி வருகிறார். “அப்போது, 1) மரக்கன்றுகள் நடுவோம். 2) மழைநீர் சேமிப்பு குறித்து எடுத்துச் சொல்லுவோம். 3) வீதிகளில் புதர்களை வெட்டி அகற்று

வோம். 4) குடிநீர் தொட்டிகளுக்கும், கழிப்பறைகளுக்கும் வெள்ளை அடிப்போம். 5) சாக்கடைகளை (டிரெயினேஜ்) சுத்தப் படுத்துவோம். இவற்றைச் செய்தாலே ஊர் பளிச்சென்று ஆகிவிடும்."

பாராட்டு – 11

இருபது அம்சத் திட்டச் செயலாக்கத்தில் மாவட்டம் முதலாவதாக வந்திருக்கிறது.

பாராட்டு - 12

அன்னதானத் திட்டத்தில் நாமக்கல், திருச்செங்கோடு இரண்டு திருக்கோயில்களிலும், இந்த முழு வருடத்துக்கும் வேண்டிய நிதி, நன்கொடையாக வந்துவிட்டது. அத்தனூர் அம்மன் கோயிலிலும் சமீபத்தில் இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. தினந்தோறும் நூறு பக்தர்களுக்குக் குறையாமல் அன்னதானம் அளிக்கப்படுகிறது.

பாராட்டு – 13

ஊழியர்களின் செயல்திறனை மேம்படுத்த, யோகா வகுப்புகள் நடைபெறுகின்றன. அதே போல், எல்லா அதிகாரிகளுக்கும் மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது. "இதுவரை மூன்று மெடிகல் கேம்ப் முடித்து விட்டோம். ரெவின்யூ துறையும், டெவலப்மென்ட் துறையும் இதற்கு ஒத்துழைத்தன."

பாராட்டு – 14

தச்சுடையான்பட்டிபுதூர், மேதுரமாதேவி, ஆண்டான்புரம், காமராஜர் நகர் ஆகிய நான்கு கிராமங்களில் சாராயத்தை ஒழித்திருக்கிறார். மாற்று நலத்திட்டங்களை இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறார். "மாவட்டத்தில் உள்ள 331 பஞ்சாயத்துகளிலும் சுயஉதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கி இருக்கிறோம். ஆறு மாதப் பயிற்சி கொடுத்து, சிறு அளவில் வியாபாரம் செய்து சம்பாதிக்க நிதியுதவி செய்கிறோம். 4,000 குழுக்கள், 60,000 உறுப்பினர்களுடன், எட்டுக் கோடி ரூபாய் சேமிப்புத் தொகை சேர்த்திருக்கிறார்கள் வங்கிக்குத் திருப்பிச் செலுத்தும் வகையில். 100 சதவிகிதம் சாதனை!"

"டாக்டர், அவரை காலையில் கிழக்கு பக்கமாகவும், அவர் மனைவியை மேற்கு பக்கமாகவும் இரண்டு கி.மீ நடக்கச் சொன்னீங்களே, ஏன்?"

"இரண்டு பேருக்கும் ரத்த அழுத்தம் இருக்கு. ஒன்றாக வாக்கிங் போனால் இரண்டு பேருக்கும் பி.பி அதிகம் ஆயிடும்."

- ஓ.பி.ஆர்



பாராட்டு – 15

எல்லாவற்றுக்கும் சிகரமாக, அருகிலுள்ள போத மலையில் உள்ள ஒரே ஒரு பஞ்சாயத்தில் வாழும் 1500 மலைவாழ் மக்களையும் சிரமத்தைப் பொருட்படுத்தாமல் அதிகாரிகளுடன் போய்ச் சந்தித்துவிட்டு வந்திருக்கிறார். "இவர்கள் மின்சாரம், குடிநீர், மருத்துவ வசதி ஏதுமில்லாமல் வசிக்கிறார்கள். அவர்களைக் கீழே வந்து குடியிருக்கச் சொல்லி எவ்வளவோ கேட்டுக்கொண்டேன். இங்கே இருநூறு வீட்டு மனைகள் கூட ஒதுக்கினோம் அவர்களுக்காக. பிற குடும்பங்களும் மலையை விட்டு வந்துவிட்டால் ஒவ்வொரு வசதியாகச் செய்து கொடுக்க விரும்புகிறோம்."

நாமக்கல்லிலும், கொல்லி மலையிலும் உள்ள டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த டாக்டர் தனபால் சொல்கிறார்:

"கலெக்டர் திரு ராஜேந்திரன் பொறுமையானவர். பொது மக்கள் குறைகளைச் சொன்னால் உடனடி நடிவடிக்கை எடுக்கிறார். எந்தக் கட்சியையும் பார்ப்பதில்லை. எது நியாயமோ, அதைச் செய்கிறார். ஃபீல்டு விஸிட்டும் வருகிறார். தொடர்ந்து அதிகாரிகளை வைத்துக் கொண்டு பேசுகிறார். குடிநீர்ப் பிரச்னை முக்கியமாக இருப்பதால், அதற்குப் போதுமான நிதி ஒதுக்கி, நன்றாகச் செயல்படுகிறார். அவசரப்பட்டு யாரையும் கடிந்து பேசமாட்டார்."

சபாஷ், கலெக்டர்!



மணம்

பாலகுமாரன்

ரேவதியைப் பார்த்து அந்த இளைஞன், கண்களில் ஜலம் கட்ட பேச ஆரம்பித்தான்.

"வேணாம். வேணாம். உங்களைப் பத்தி தப்புத் தப்பா பேசி எல்லாமும் தப்பாயிடுச்சு. உங்களைச் சொன்ன வார்த்தைக்காகவே நான் யாராலேயோ அடிபட்டுட்டேன். இப்பவும்கூட சரியா யார் அடிச்சாங்கன்னு தெரியலை. ஆனா, ராதாகிருஷ்ணன் இல்லைன்னு நிச்சயமா தெரிஞ்சுடுச்சு. எதுக்கு அடிச்சாங்கன்னு தெரியலை. இந்த சண்டையில்லைன்னு தெளிவாயிடுச்சு."

"திரும்பவும் சங்கரய்யர்கிட்ட பேசினீங்களா?"

"இல்லை. காசுக்கு ஏற்பாடு பண்ணிக்கிட்டிருக்கேன். அடுத்த வாரம் தெரிஞ்சுடும். அது தெரிஞ்சுட்டா அவரண்ட சொல்லிடுவேன். அவர் மூலமாகவே உங்களுக்குக் காசு வந்துடும். ராதாகிருஷ்ணன் ஸார் இல்லீங்களா?"

"படப்பை பக்கம் போயிருக்கார்."

"என்ன?"

"படப்பைக்கிட்ட நிலம் வாங்கணும். அங்க வீடு கட்டிக்கலாம்னு நினைக்கப் போறார்."

"ஏங்க அவ்ளோ தூரம் போறீங்க? இங்க எங்கயாவது மயிலாப்பூர்ல ஃப்ளாட் வாங்கக்கூடாதா?"

"ஃப்ளாட்ல எல்லாம் இருக்க முடியுமான்னு தெரியலை. எங்ககிட்டயும் கொஞ்சம் காசு இருக்கு. தனியா நிலம் வாங்கி ஒரு வீடு கட்டி குடித்தனம் பண்ணலாமோன்னு ஒரு யோசனை இருக்கு."

"அவ்ளோ தொலைவு

உருகுதே



லேருந்து வேலைக்கு வரணுமே."

"வேலைக்கு வரணுமான்னு ஒரு கேள்வி இருக்கு."

"வேலைக்கு வரலைன்னா, சாப்பாட்டுக்கு?"

"அம்பாள் ஏதாவது வழி விடுவா."

"ஏங்க, நான் போகச் சொன்னதனால நொந்துபோய் பேசறீங்களா?"

"இல்லை. இந்த ஆட்டமே போதும்னு எங்களுக்குத் தோணிடுச்சு."

"எந்த ஆட்டம்?"

"ஆபீஸுக்குப் போறதும் வரதும்."

"ஏங்க வரலையா?" என்று கீழிருந்து குரல் கேட்டது.

அவன் மடமடவென்று கீழே ஓடினான்.

ரேவதி அவனைச் சிரிப்போடு பார்த்தாள்.

என்ன இந்தப் புள்ள பொண்டாட்டிக்கு இந்த பயம் பயப்படறது என்று வியந்தாள்.

தான் புருஷனுக்குப் பயப்படுகிறோமோ என்று கேட்டுக் கொண்டாள்.

பயமில்லை. ஒரு மரியாதை.

என்ன விதமான மரியாதை?

பிரியம் கலந்த மரியாதை. புருஷன் என்றால் கூப்பிட்டக் குரலுக்குப் போக வேண்டும் என்கிற மரியாதை. கூப்பிட்டக் குரலுக்கு வர முடியவில்லை என்று சொன்னால் போதும், புருஷன் ஓடி வந்து விடுவான். ஏன், என்னாயிற்று உனக்கு என்று முகம் தாங்கி கேள்வி கேட்பான் குழந்தை. பரபரப்பான எட்டாம் கிளாஸ் குழந்தை. போய் சங்கரய்யரிடம் சொன்னதுதான் சற்று கஷ்டமாக இருந்தது. சங்கரய்யரிடம் அதிகம் பேசி விட்டோமோ, புருஷனைப் பற்றிக் குறைவாகச் சொல்லி விட்டோமோ என்று தோன்றியது. புருஷனைப் பற்றி வாய்க்கு வந்தபடி குறை சொல்கிறாள் என்று நினைத்துக்கொள்வார்களோ, வேறு ஏதேனும் ஒரு சமயம் குத்திக் காட்டுவார்களோ என்றும் தோன்றியது. கணவன், மனைவி அன்பு பற்றி அந்தப் பையனுக்குச் சொன்னதெல்லாம் அவனுக்குச் சொன்னதல்ல; நமக்குச் சொன்னது, என்று ராதாகிருஷ்ணன் சொல்ல அதுவும் சந்தோஷமாக இருந்தது.

சங்கரய்யர் நேரடியாக எதையும் பேசுவதில்லை. வேறு யாருக்கோ ஏதோ சொல்கிற போது மற்றவருக்கும் சொல்லிவிடுகிறார் என்பது புரிந்தது. சங்கரய்யரிடம் போனால் அவர் பேச்சைக் கூர்ந்து கவனித்துக் கொள்ள வேண்டும் என்று ருக்மணி கீழிறங்கும்போது சொன்னாள். 'ஆமாம்' என்று இவர்கள் இரண்டு பேரும் தலையசைத்தார்கள். வீட்டிற்கு வந்து சங்கரய்யர் என்னவெல்லாம் சொன்னார் என்று யோசித்துப் பரிமாறிக் கொண்டார்கள். ஆனால், இந்தப் பிள்ளைக்கு அந்த மாதிரி பரிமாறிக் கொள்ள ஆள் ஏதும் கிடைக்கவில்லை.

வராண்டா வழியாக தெருவை எட்டிப் பார்த்தான்.

அந்தப் பையன் சற்று நிற்கும்படிச் சொல்ல, "இல்லை, நாங்கள் போகிறோம்" என்று அவர்கள் உரக்க குரல் கொடுத்தார்கள். அவன் ஏதோ வேகமாக மறுத்துச் சொல்ல, அவர்கள் அவனைவிட வேகமாக மறுத்துச் சொல்ல, அவர்கள் அவனைவிட வேகமாக மறுத்துச் சொன்னார்கள்.

கார் இலேசாக புகை கக்கிக் கக்கி வீட்டு வாசலில் இருந்து அகன்றது. அவன் இடுப்பில் கை வைத்து காரையே பார்த்தபடி இருந்தான். பிறகு தலை குனிந்தான். படியேறி மறுபடியும் மேலே வந்தான்.

"ரேவதி மேடம்" என்று வராண்டாவிலிருந்து குரல் கொடுத்தான்.

20

"வாப்பா, என்ன வேணும்?"

"ஒரு கப் காபி கிடைக்குமா? ரொம்ப தலை நோவுது."

"என்னாச்சு திடீர்னு?"

"ச்சு... கோவம் தலைக்கு ஏறிடுச்சு. ஏறின கோவத்தை இறக்க முடியலை. வாய் விட்டு சொல்ல முடியலை."

"ஏன்? யார் மேல கோவம்?"

"பொண்டாட்டி மேலேதான்."

"சும்மா ஒரு குழந்தையைக் கோவிச்சுக்காதப்பா."

"அது குழந்தை இல்லைங்க. பிசாசு. இவ்ளோ தூரம் வந்துட்டோம், ராதாகிருஷ்ணன் ஸார்கிட்ட பேசிட்டுப் போயிடலாம், நாடார்கிட்ட பேசிட்டுப் போயிடலாம்னு சொல்றேன். 'அதெல்லாம் நீங்க பேசிக்கோங்க' அப்படின்னு சொல்விட்டு வண்டியை எடுத்துட்டுப் போயிட்டா. நான் எப்படி வரதுன்னு கேட்கறேன். எங்கப்பா எனக்கு கொடுத்த காரு. வேணும்னா உங்கப்பா கார்ல வாங்க. இல்லைன்னா ஆட்டோல வாங்கன்னு சொல்லிட்டுப் போயிட்டா. அவங்க அப்பா இருக்கறதனால, திமிரா போயிட்டா. இழுத்துப்போட்டு மிதிச்சா சரியா வரும். ஆனா மிதிக்க முடியலையே..."

"தப்புப்பா. இப்படியெல்லாம் யோசனை பண்ணாதே. இரு காபி தரேன்."

ரேவதி காபியோடு வந்தாள். அவனுக்கு ஆற்றிக் கொடுத்தாள்.

என்னமோ சட்டென்று இந்தப் பையன் மீது ஒரு வாஞ்சை வந்துவிட்டது. மிகப் பெரிய ரௌடித்தனம் பண்ண வேண்டுமென்று வீட்டு வாசலுக்கு வந்து உரக்கக் கத்திய பையன். ஆனால், இப்பொழுது வலியில் துடிக்கிறான். அவமானத்தில் இருக்கிறான். இவனைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. இவன் சொத்து நமக்கெதற்கு? இந்த ஏழு லட்சம்கூட வேண்டாம் என்று சொல்லி விட்டு வந்துவிட வேண்டும். அதுதான் நல்லது. அதுதான் மரியாதை. அதுதான் அழகு.

ஆனால், இதில் நான் தலையிட வேண்டாம். எப்பொழுது சங்கரய்யர் இதை எடுத்துக் கொண்டாரோ அவரே முடிவு செய்யட்டும். ஒருவேளை இவன் காக சிரமத்திற்கு நீங்கள் ஒன்றும் வாங்காமல் போங்கள் என்று சொல்லிவிட்டாலும் சந்தோஷமாகப் போய் விடலாம்.

அந்தப் பையன் காபி டம்ளரை நெற்றியில் வைத்துக்கொண்டான். அந்தச் சூடு அவனுக்குத் தேவையாக இருந்தது.

ரேவதி அவனைப் பரிதாபத்தோடு பார்த்தபோது உள்ளுக்குள்ளே ராதாகிருஷ்ணன் படியேறி வந்தார். அவனைப் பார்த்துவிட்டுத் திகைத்தார்.

"என்ன... என்னாச்சு?" என்று பதற்றத்தோடு ரேவதியிடம் கேட்டார்.

"ஒண்ணும் ஆகலை. தலைவலி, காபி போட்டு கொடுங்கோன்னார். கொடுத்தேன்."

"ஏன்? ஊர்ல ஹோட்டலே இல்லையா?"

ராதாகிருஷ்ணன் தன்னுடைய இயல்பான எகத்தாளத்திற்கு இறங்கினார். ரேவதி கை தூக்கி போதும் என்பதாய் நிறுத்தினாள்.

அவன் இரண்டு பேரையும் பரிதாபமாகப் பார்த்தான்.

"நீ சாப்பிடு அம்பி. அவர் அப்படித்தான். தேவையில்லாத பேசுவார். ஒருத்தருக்குக் காபி கொடுத்திருக்கேன். அவர் குடிச்சுண்டிருக்கார். அப்போ அதைப்பத்தி இழிவா பேசறது நல்லதா?"

"மன்னிச்சுக்கோப்பா. நீ காபி சாப்பிடு" என்று அவன் தோள் தட்டிக் கொடுத்தார்.

அவன் எழுந்து நின்று கைகூப்பினான்.

"உங்களை நான் தப்பா சங்கரய்யர்கிட்ட சொன்னேன். உங்களை வந்து தேவையில்லாத மிரட்டினேன். இது இரண்டுத்துக்கும் நான் என் மனப்பூர்வமான மன்னிப்பைக் கேட்கறேன். உங்களை மிரட்டின பாவமோ என்னமோ வேற யாரோ என்னை மடக்கிப் போட்டு, அடிச்சுக் குத்தி, உடம்பெல்லாம் புண்ணாக்கிட்டாங்க."

"அதுதான் தவிடு ஒத்தடம் கொடுத்தா சரியா போயிடுமேன்னு சொன்னேன். எங்கு போறது தவிடுக்குங்கறார். பொண்டாட்டியோட அவ்ளோ சுமுகமா இல்லை போலிருக்கு. பொண்டாட்டியும் ஏதோ கோச்

"உங்களை இவ்வளவு பெரிய அரசியல் தலைவரா ஆக்கியது யாரு? என்ன இன்ஸ்பிரேஷன்?"

"வாங்காத மாட்டுக்குத் தீவனக் கணக்கு பத்து கோடின்னு மந்திரி எழுதச் சொன்ன கணக்குதாங்க மாபெரும் தூண்டுதல் இந்தக் குமாஸ்தாவுக்கு!"

- காவிரி மணாளன்

கண்டு போறா. எதுக்குன்னு தெரியலை. பாவமாதான் இருக்கு இந்தப் புள்ளையப் பார்த்தா'' மெல்லிய குரலில் ரேவதி சொல்ல, ஆழ்ந்து ராதாகிருஷ்ணன் அந்தப் பையனைப் பார்த்தார்.

அவன் காபி தம்ளரோடு தலைகுனிந்து உட்கார்ந்திருந்தான். அவன் தோளைத் தட்டினார். "குடி" என்று சொன்னார்.

அவன் குடித்து முடித்ததும் ரேவதியின் காதோரம் "தவிடு வறு. நானே அவனுக்கு ஒத்தடம் கொடுக்கறேன். கரு ரத்தம் கட்டிண்டிருக்குன்னு அங்கயே சொன்னான் இல்லியா?" என்று சொல்ல ரேவதி "ஆமாம்" என்று சொன்னாள்.

வாணலியை அடுப்பில் வைத்து வீட்டிலுள்ள டப்பாவிலிருந்து தவிடு கொட்டி வேகமாக வறுக்கத் துவங்கினாள்.

வறுத்த தவிடை மூட்டையாக்கினாள். அதற்குள் ராதாகிருஷ்ணன் அவனிடம் பேசி



சட்டையைக் கழற்றி அவனுடைய காயங்களைப் பரிசோதித்தார். எல்லா இடமும் கருரத்தம் கட்டிக் கொண்ட அடியாகத்தான் இருந்தன. தவிடு மூட்டை வந்தது. அவனைத் தரையில் குப்புறப் படுக்கச் சொல்லி தலைக்கு பெட்ஷீட் மடித்துப் போட்டு அவன் முதுகிலும் தோளிலும் கழுத்திலும் தவிடு மூட்டையை வைத்து வைத்து எடுத்தார். மறுபடி மறுபடி தவிடு சூடு படுத்திக்கொண்டு ரேவதி முன்னும் பின்னும் அலைய, மிகக் கவனமாக தவிடு ஒத்தடம் கொடுத்துவிட்டு அதன் மீது அயோடெக்ஸ் தடவ அவன் கண்மூடி பதினைந்து நிமிடங்கள் தூங்கியதுபோல் படுத்துக் கொண்டிருந்தான். பிறகு அவனை மல்லாக்கப் போட்டு வயிறுப் பகுதியிலும் தவிடு ஒத்தடம் கொடுத்து அங்கேயும் அயோடெக்ஸ் தடவ மெல்ல எழுந்தான்.

ராதாகிருஷ்ணன் கால்களை வருடி தலையில் வைத்துக் கொண்டான்.

"தப்பு. எவ்ளோ சீக்கிரம் என்னால காசு கொண்டாந்து கொடுக்க முடியுமோ அவ்ளோ சீக்கிரம் கொண்டாந்து கொடுக்கறேன். நான் நல்லபடியா காசு கொண்டாரணும்னு நீங்க பிரார்த்தனை பண்ணிக்கோங்க" என்று சொன்னான். சட்டையை மாட்டிக் கொண்டான்.

"மாமி வரேன். போயிட்டு வரேன். எல்லாத்துக்கும் ரொம்ப தேங்க்ஸ்" என்று கைகூப்பினான்.

சட்டென்று எல்லா துக்கமும் மறைந்து ஓடிப்போய் மனம் பளிச்சென்று துடைத்தது போல் மின்னியது.

"சங்கரய்யரைப் போய்ப் பார்த்துட்டு வரலாமா?"

இம்முறை அவர்கள் குழந்தைகளை அழைத்துக்கொண்டு போனார்கள்.

"சங்கரய்யர் யாருப்பா?"

ராதாகிருஷ்ணனின் மகன் ராஜாராமன் அப்பாவின் புஜத்தைப் பிடித்துக்கொண்டே, தெருவில் நடந்தபடி அவர் முகத்தை உற்றுப் பார்த்துக் கேட்டான்.

"அவர் பெரிய மகான். அவரைப் பார்த்ததும் கை கூப்பி நமஸ்காரம் பண்ணணும். அபிவாதயே சொல்லணும். உனக்கு சொல்லிக் கொடுத்திருக்கு இல்லியா?"

ஏழு வயதிலேயே பூணூல் போட்ட பையனுக்கு மறுபடியும் அந்த மந்திரத்தை, அந்த வணக்கம் சொல்லுதலைத் திரும்பச் சொல்ல வைத்து, சரி செய்து அவனைத் தயார் படுத்தினார்.

"மகான்னா யாருப்பா?"

மகள் சுபத்ரா கேள்வி கேட்டாள்.

எட்டாவது படிக்கின்ற சுபத்ராவும், பதினொன்றாவது படிக்கின்ற ராஜாராமனும் மிகுந்த திறமையோடும் கூரிய ஞாபக சக்தியோடும், நிறைய கேள்விகளோடும், நல்ல பசியோடும் வளர்ந்து வந்தார்கள்.

சுபத்ரா இன்னும் மலரவில்லை. ஆனால், மலர்ந்து விடுவாள் என்று உடம்பு எச்சரித்துக்கொண்டேயிருந்தது. மாறாக ராஜாராமன் சற்று கச்சலாய் உறுதியான உடம்பாய், ஒட்டிய கன்னமாய், ஏதோ சிந்தனை உள்ளவனாய், தனக்குள்ளே பேசி முணுமுணுப்பவனாய் வளர்ந்து வந்தான். அவன் தனக்குள்ளேயே அதிகம் பேசுவதை, கண்

ணாடி முன் நின்று கைகால் ஆட்டி, உரக்க பிம்பம் பார்த்து உளறுவதை ஒளிந்திருந்து ரேவதி பார்த்துவிட்டு புருஷனிடம் சொன்னாள்.

"என்னடா.. எதுவோ தனியா பேசறியாமே..ஏன்?"

குழந்தை சட்டென்று அப்பாவின் கேள்வியை எதிர்கொள்ள முடியாமல் வெட்கப்பட்டான். கால் பின்னினான்.

அம்மா இதைப் போய் அப்பாவிடம் சொல்லி விட்டாளே என்பது போல் பார்த்தான்.

அவன் தவிப்பதைப் புரிந்துகொண்டு ராதாகிருஷ்ணன் அவனை அருகே அழைத்து அணைத்துக் கொண்டார்.

"என்ன... என்ன பிரச்னை உனக்கு சொல்லு?" என்று கேட்டார்.

"ஒண்ணுமில்லைப்பா... ஏதேதோ கற்பனை பண்ணிண்டிருக்கேன். சில சமயம் என்னை மீறி பெருசா பண்ணிடறேன்."

"கற்பனைன்னா எந்த மாதிரி?"

"உன்னை மாதிரியும் பண்றேன்பா."

"என்னை மாதிரியும்னா?"

"ஆமாம். நீ கடுகடுன்னு சத்தம் போடுவேயில்லை. உனக்குக் கீழே வேலை செய்யறவாளை அதட்டுவே இல்லை, நிறைய வேலை இருக்குன்னு அலட்டிக்குவே இல்லை, அதேமாதிரி நானும் பண்ணிப் பார்ப்பேன்."

"அப்புறம். வேற யார் மாதிரி பண்ணுவே?"

"பெரிய ரவுடி மாதிரி பண்ணுவேன்."

"அப்புறம்?"

"அந்த ரவுடிகளை முட்டிக்கு முட்டி பேத்துடுவேன்ற போலீஸ்காரன் மாதிரி பண்ணுவேன்."

"அப்புறம்..."

"கிரேன் ஆபரேட்டர் மாதிரி பண்ணுவேன்."

"கிரேன் ஆபரேட்டரா. எதுக்குடா?"

"நல்ல வேலை இல்லைப்பா. ஒரு இடத்துல உட்கார்ந்துண்டு கடலை வேடிக்கை பார்த்துண்டு கப்பலை வேடிக்கை பார்த்துண்டு கியர் மாத்தி சாமானைத் தூக்கி, இறக்கிண்டு நல்ல வேலை இல்லைப்பா? நான் பெரியவனானா கிரேன் ஆபரேட்டர் ஆகணும்பா" என்று அவன் சொல்ல வீடு சிரித்தது.

"சரி, அப்புறம் வேற யாரு மாதிரி நினைச்சுப்ப?"

"சில சமயம் என்னை நான் கடவுளா நினைச்சுப்பேன்."

"என்னடா இது... என்ன சொல்ற!"

"ஆமாம். நான் இருக்கேன், எதுக்கு பயப்படறேன், அப்படின்னு வலதுகை தூக்கி ஆசீர்வாதம் பண்ணுவேன்ப்பா. கையில கதை வைச்சுப்பேன். இன்னொரு கையில சங்கு சக்கரம் இருக்கறதா நினைச்சுப்பேன்."

ரேவதியை நோக்கி ராதாகிருஷ்ணன் என்னடி இது என்பதுபோல் பார்த்தார்.

"அதெல்லாம் ஒண்ணும் தப்பு இல்லைடா."

ரேவதி சட்டென்று உதவிக்கு வந்தாள். பிள்ளை ஆவலோடு அம்மாவைப் பார்த்தது.

"ஆனா, ரொம்ப ஜாஸ்தியா பண்ணிடாதே. கண்ணாடிக்கு முன்னாடி நின்னு பேசாதே. அதை யாராவது பார்த்தா தப்பா நினைச்சுப்பா. கொஞ்சம் உள்ளுக்குள்ளயே வைச்சுக்கோ" என்று சொல்ல ராதாகிருஷ்ணன் அவன் முதுகைத் தடவி நெற்றியில் முத்தமிட்டு அனுப்பி வைத்துவிட்டார்.

இரவு நேரம் புருஷனும், மனைவியும் எதிரும் புதிருமாக உட்கார்ந்துகொண்டு பிள்ளையைப் பற்றிக் கவலைப்பட்டார்கள்.

குழந்தையை சங்கரய்யரிடம் கூட்டிக் கொண்டு போகும்போது இதைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றும் பேசிக் கொண்டார்கள்.

(தொடரும்)



ஐஸ்வர்யா ராய் ஹாலிவுட்டுக்குப் போகிறார். பிரம்மாண்டமான இந்தப் படத்தின் இயக்குனர் மனோஜ் ஷியாமளன். இரண்டு இந்திப் படங்களைத் தியாகம் செய்து டேட்ஸ் கொடுத்திருக்கிறார் ஐஸ்வர்யா.

- அஜய்

படித்தேனா நான்?

ஒரு அடி ஆழத்துக்கு
கலப்பை பிடித்து உழ
அண்ணனால் ஆகும்

இன்னும்
அப்பாவுக்கு
தூரத்து பேருந்தின்
தலையெழுத்தைப் படிக்க
கண்சுருக்க நேர்ந்ததில்லை.

அடுப்பில் ஏதோ
தீய்ந்து போகிறதென்று
கொல்லையில்
கொம்பு வெட்டி நிற்கும்
அம்மா மூக்கு
தப்பாமல் சொல்லும்

பக்கத்து வீட்டு
பாம்படப் பாட்டி சொல்லும்
நல்லதங்காள் கதை
மனத்தில்
திரைப்படமாய் விரியும்.

வெள்ளரி வயலின்
பிஞ்சுகளைப் பார்த்து
வியாதியும், வைத்தியமும்
தப்பாமல் சொல்வார்
பெரியப்பா.

விவசாய நிலங்களும்
பருவத்துக்கான உரங்களும்
சுருதி சுத்தமாய்
பெரிசுகள் சொல்லும்

எனக்கு,
இதில் எத்திறமையும்
இல்லை.
இருந்தாலும்
அத்தனை உள்ளங்களும்
ஆசையாய்ச் சொல்லும்
ஊரில இவன் தான்
அதிகமா படிச்ச புள்ள

சேவியர்



இனி பிள்ளை வரம் வேண்டி எங்கும் அலைய வேண்டாம்

ஹோமியோ - சித்தா - ஆயுர்வேத முக்கூட்டு மருத்துவத்தால் குழந்தை பெறலாம்!


குழந்தை இல்லாத தம்பதிகள் பிள்ளைவரம் வேண்டி இனி எங்கேயும் அலைய வேண்டாம். குழந்தை பெறாமைக்கு குறைபாடு கணவனிடம் இருந்தாலும் சரி, மனைவியிடம் இருந்தாலும் சரி, ஹோமியோ-சித்தா-ஆயுர்வேத முக்கூட்டு மருத்துவத்தின் மூலம் ஆண் மலட்டுத் தன்மையும், பெண் மலட்டுத் தன்மையும் அறவே நீக்கி குழந்தை பிறக்கச் செய்கிறார்கள் டாக்டர் **ஏ.அர்ஜுனா, டாக்டர் வி.ஏ.ஆண்டாள்.** இவர்கள் 'நவீன வைத்தியாலயா' என்ற பெயரில் ஆஸ்பத்திரி நடத்தி வருகிறார்கள். திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் பிராமணர் தெருவிலும், சென்னையில் வடபழனி 100 அடி சாலையிலும் வெற்றிகரமாக சிகிச்சை நிலையங்கள் நடத்தி வருகிறார்கள்.

குழந்தைப் பெற்றுக் கொள்ள சிகிச்சைக்கு வரும் தம்பதிகளை டாக்டர் **ஏ.அர்ஜுனா** முதலில் கணவனின் உயிரணு உற்பத்தியை விந்து பரிசோதனையின் மூலம் குறைபாடுகளைக் கண்டறிகிறார். பிறகு மனைவியின் குறைபாடுகளை சில பரிசோதனைகளின் மூலம் தெரிந்து கொண்டு ஆண் மலட்டுத் தன்மை, பெண் மலட்டுத்தன்மை நீங்கி குழந்தை பெற முக்கூட்டு மருத்துவ சிகிச்சையளிக்கிறார்.

''சென்னை கோடம்பாக்கத்தில் சம்பத் என்பவர் சிகிச்சைக்கு வரும்போது அவரது விந்து பரிசோதனையில் டோட்டல் கவுண்ட் 70 மில்லியனும், மொட்டிலிட்டி 70%ம் இருந்தது. 2 மாத சிகிச்சைக்குப்பின் டோட்டல் கவுண்ட் 142 மில்லியனும், மொட்டிலிட்டி 80% உயர்ந்துள்ளது.

இது முக்கூட்டு மருத்துவத்தில் ஒரு சாதனையாகும்.

கோவை பெரியநாயக்கன் பாளையத்தைச் சேர்ந்த லோகநாதனுக்கு அறவே உயிரணு இல்லை. அவருக்கு ஒரே மாத முக்கூட்டு மருந்தில் கவுண்ட் 110 மில்லியன், மொட்டிலிட்டி 20% உற்பத்தி ஆகியுள்ளது.



• உலக புகழ் பெற்ற மருத்துவ திலகம் டாக்டர் A.அர்ஜுனாவுடன் இருப்பவர்கள் சென்னை வியாசர்பாடியைச் சேர்ந்த திருமதி புஷ்பா சக்ரபாணியும் அவரது குழந்தைகளும்.

உயிரணு குறைவாக இருந்த கேரள மாநிலம் பாலக்காட்டைச் சேர்ந்த சேதுமாதவனுக்கு 16.6.2000ல் கவுண்ட் 20மில்லியன், மொட்டிலிட்டி 50% இருந்தது. 13.7.2001ல் கவுண்ட் 60மில்லியன், மொட்டிலிட்டு 50% என்று முன்னேற்றம் கண்டது.

மகாராஷ்டிர மாநிலம் நியூபாம்பே வாஷி பகுதியைச் சேர்ந்த ஜெயராமனுக்கு உயிரணு குறைவாக இருந்தது. 28.12.2000ல் இருந்த கவுண்ட் 45 மில்லியன், மொட்டி லிட்டி 50% ஒரே மாதத்திற்குள் 26.1.2001ல் கவுண்ட் 92மில்லியன், மொட்டிலிட்டி 30% என்று உயர்ந்தது.

சென்னையைச் சேர்ந்த, உயிரணு குறைவாக இருந்த ரகுவுக்கு 6.5.2000ல் கவுண்ட் 29 மில்லியன், 50% மொட்டிலிட்டி இருந்தது. எங்களது முக்கூட்டு மருந்துகள் மூலம் அவருக்கு 20.8.2000ல் கவுண்ட் 160 மில்லியன் உயர்ந்தது.

ஆண் மலட்டுத் தன்மைக்கான காரணங்கள்:

ஆண்களுக்கு இளம் வயதிலேயே புட்டாளம்மை வந்திருந்தாலும், அம்மை வந்திருந்தாலும், மஞ்சள் காமாலை, டைபாய்டு ஜுரத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும், விதைகளில் அடிபட்டிருந்தாலும், வெப்பம் அதிகமுள்ள இடங்களில் வேலை செய்வதாலும், தன்னைவிட வயது முதிர்ந்த பெண்களிடம் தாம்பத்திய உறவு கொண்டாலும் அவர்களால் புத்திர பாக்கியம் அடைய முடியாத நிலை உள்ளது. அவர்களுக்கு முக்கூட்டு மருத்துவ சிகிச்சையால் உயிரணு உற்பத்தி செய்து புத்திரபாக்கியம் அடையச் செய்கிறோம்.

பெண் மலட்டுத் தன்மைக்கான காரணங்கள்:

பெண்களில் கருப்பை ஒவரி வளர்ச்சியே இல்லாமல் இருப்பவர்களுக்கு வளர்ச்சியடைச் செய்

அன்மையில் குழந்தை பெற்றவர்கள், குழந்தைபேறு உண்டானவர்கள் பெரம்பலூர் மாவட்டம் உடையார்பாளையத்தில் எங்களது முக்கூட்டு சிகிச்சையால் மலட்டுத்தன்மை நீங்கி கிருஷ்ணமூர்த்தி - கஜலட்சுமி தம்பதியருக்கு குழந்தை பிறந்துள்ளது.

கிறோம். வீட்டு விலக்கு ஒழுங்கில்லாதவர்களுக்கு ஒழுங்குபடுத்துகிறோம். சிலருக்கு வீட்டு விலக்கின் போது வரும் சூதக வயிற்றுவலியால் கருத்தரிக்க வாய்ப்பில்லாமல் போகும். இந்தக் குறையை முக் கூட்டு மருந்துகளால் நீக்கி கருத்தரிக்கச் செய் கிறோம்.

சில பெண்களுக்கு கருமுட்டை உற்பத்தி இருக் காது. இத்தகையவர்களை ஸ்கேன் மூலம் பரி சோதிக்கச் செய்து, கருமுட்டை உற்பத்தி நிலையை அறிந்து கருமுட்டை உண்டாக்கி கருவுறச் செய் கிறோம். பெண்களிடமுள்ள பிரதான பெரிய பிரச்னை, கருக்குழாயில் சதை அடைப்பு ஏற்படுவது. அதை முக்கூட்டு மருந்துகளால் கரைத்து அடைப்பை நீக்கி கருத்தரிக்க செய்கிறோம்.

சென்னை புதுப்பேட்டையைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் தம்பதிகளுக்கு எங்கள் வைத்தியத்துக்குப் பின், இரண்டு குழந்தை பிறந்தது.

திருவண்ணாமலை நகரத்தைச் சேர்ந்த ஒரு தம்பதிக்கு மூன்று மாத மருந்து சாப்பிட்டதில் தற் போது அந்தப் பெண் நான்கு மாத கர்ப்பவதியாக இருக்கிறார்.

சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த ராஜா – அலமேலு தம்பதியர் திருமணமாகி நான்கு வரு டங்கள் குழந்தை இல்லாதிருந்து, அவர்களுக்கு முக் கூட்டு சிகிச்சையளித்ததில், கடந்த 6.3.2001 அன்று ஆண் குழந்தை பிறந் துள்ளது.

பெங்களூரைச் சேர்ந்த ஜி.பி. மோகனவேலு கீதாஞ்சலி தம்பதிக்கு எங்களது முக்கூட்டு சிகிச்சை யால் ஆண், பெண் குழந்தைகள் பிறந்துள்ளன. மதுரையைச் சேர்ந்த ஒரு மாவட்ட அரசு அதி காரிக்கு 23 ஆண்டு காலம் குழந்தை இல்லாதிருந்து எங்களிடம் இரண்டு மாத சிகிச்சை பெற்ற அவரது மனைவிக்கு கடந்த 5.6.2000ல் பெண் குழந்தை பிறந்துள்ளது.

○ சென்னை கிண்டியில் கோபால் – சித்ரா தம்பதிகளுக்கு பல ஆண்டுகள் குழந்தை இல்லாமல் இருந்து எங்கள் முக்கூட்டு சிகிச்சையினால் பெண் குழந்தை பிறந்துள்ளது.

○ விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அவலூர் பேட்டையில் சந்திரமூர்த்தி தம்பதிகளுக்கு ஆண் மகன் பிறந்துள்ளது.

○ சென்னை, வடபழனி, கங்கையம்மன் கோயில் தெருவைச் சேர்ந்த, எங்களிடம் சிகிச்சைப் பெற்ற ஒரு முஸ்லிம் பெண்மணி குழந்தை பெற் றுள்ளார்.

○ தஞ்சாவூர் புரசகுடியில் சௌந்தர்ராஜன் - வனரோஜா தம்பதிகளுக்கு ஒரு பையன் பிறந்துள் ளது. மீண்டும் வனரோஜா குழந்தை பெற்றுள்ளார்.

○ பாண்டிச்சேரி கணபதிபட்டில் சாந்தி செல்வ ராஜ் தம்பதிகளுக்கு பெண்ணும், பையனும் பிறந்துள் ளார்கள்.

இப்படி எங்கள் சிகிச்சையில் பல வூர்களில் மாதா, மாதம் குழந்தைகள் பிறந்து கொண்டிருக் கின்றன.

எங்கள் மருத்துவமனையில், தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலிருந்தும், இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்து வந்தும்; அயல்நாடு களில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து, சவுதி அரேபியா, துபாய், குவைத், பக்ரைன், ரியாத், ஓமன், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஜெர்மனி போன்ற வெளி நாடுகளில் இருந்து வந்தும் சிகிச்சை பெற்று பயன டைந்து வருகிறார்கள்.

எங்களிடம் சிகிச்சை பெற்று கர்ப்பமடைந்த வர்கள் கர்ப்பமடைந்த பின் 6 மாதம் வரை ஆங்கில மருத்துவர்களிடம் சென்று ஆங்கில மருந்துகளைச் சாப்பிட்டால் கருச்சிதைவு ஏற்படவும் வாய்ப்புண்டு என்றார்'' டாக்டர் அர்ஜுனா. சுகப்பிரசவத்திற்கு மருந்து உண்டு என்கிறார் அவர்.

நீங்களும் குறைந்த செலவில் புத்திரபாக்கியம் அடைய டாக்டர் ஏ. அர்ஜுனா, அவரது மனைவி டாக்டர். வி.ஏ.ஆண்டாள் அவர்களை அணுகவும்.



• டாக்டர் அர்ஜுனா, டாக்டர் V.A. ஆண்டாள் அர்ஜுனா

நவீன வைத்தியாலயா ஹோமியோபதி - சித்தா - ஆயுர்வேத மலடு நீக்கும் ஆஸ்பத்திரி

சென்னையில் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் டாக்டரைச் சந்திக்குமிடம்: எண் 65 நெற்குன்றம் பாதை, (டி.எஸ். கவுரி சங்கர் கல்யாண மண்டபம் எதிரில்) 100 அடி ரிங் ரோடு, வடபழனி, சென்னை - 600 026. போன் : 4833464 எஸ்டிடி.044

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் டாக்டரைச் சந்திக்குமிடம் -
வீடு : நெ. 30, பிராமணர் தெரு, ஈஸ்வரன் கோயில் அருகில், வந்தவாசி.
திருவண்ணாமலை மாவட்டம் - 604 408
புதிய தொலைபேசி எண்கள் 225208, 226180
STD 04183

செஞ்சியைச் சேர்ந்த முருகன் - தமிழரசிக்கு ஒரே மாத முக்கூட்டு மருந்தினால் உயிரணு உற்பத்தி ஆகி, கருக்குழாய் அடைப்பு நீங்கியதால் கடந்த 20.8.02ல் ஆண் குழந்தை (சுகப்பிரசவத்தில்) பிறந்துள்ளது.

எங்களிடம் சிகிச்சைக்காக கல்கத்தாவிலிருந்து வந்த சுரேஷ் - பரணி தம்பதியர் ஒரு மாத மருந்து சாப்பிட்டதில், கடந்த ஜூலை மாதம் திருமதி சுரேஷ் கர்ப்பம் தரித்துள்ளார்.



புல்லிலும்

சாரா குடியிருக்கும் அபார்ட்மெண்டில் சின்னதாக பால்கனி இருந்தாலும், அங்கே எந்தப் பூச்செடியும் இல்லை. ஆனால் வரவேற்பறைக்குள் நுழைந்து, ஹாலுக்குள் பிரவேசித்தால் புத்துணர்ச்சியோடு பூக்கள். பார்க்கும் இடமெல்லாம் ரோஜா, டியூலிப்ஸ், ஃபாக்ஸ்குளோஸ், லில்லி, ஆர்கிட்ஸ் என்று மலர்களின் வண்ண மாநாடு. கத்தரிப்பூ நிற ஃபாக்ஸ்குளோ பூக்கள் கொத்தாக அடுக்குக் குடைபோல கவிந்திருக்கும் அழகில் சொக்கி, அதைத் தொட முயன்றால், கண்ணாடிச் சட்டத்திற்குள் ஓவியமாய் ஒளிந்து கொண்டு கண்ணாமூச்சு காட்டுகிறது. அட! இங்கே பூத்திருக்கும் அத்தனையும் உயிருள்ள ஓவியப் பூக்கள். வரைந்த விரல்கள் சாராதேவி தாரியினுடையவை. அதிலும் ஒரு விசேஷம். இந்த மலர்களை சாரா வரைந்தது தூரிகைகளை பயன்படுத்தி அல்ல. முழுக்க முழுக்க விரல்களாலும் விரல் நகங்களாலுமே வரைந்திருக்கிறார். ஒரு சிலவற்றுக்கு மட்டும் வண்ணப் பென்சில்களைப் பயன்படுத்துவதுண்டாம்!

"அப்பா வழக்கறிஞர், அம்மா ஆசிரியை. சென்னை அருகேயுள்ள

பூக்கள் பூக்கும்!



படப்பையில் வீடு. அங்கே தோட்டம் உண்டு. பூக்களும் உண்டு. நான் இரண்டு வயதில் அம்மா அப்பாவிடம் வரைந்து காட்டிய ஓவியம் மூன்று இதழ்களோடு கூடிய பூச்செடிதானாம். இயல்பாகவே பூக்கள் என்றால் எனக்குக் கொள்ளைப் பிரியம். ஒவ்வொரு நாளும் நாம் எவ்வளவு பிரச்னைகளோடு எழுந்தாலும், பூக்களைப் பார்த்த அடுத்த கணம் நம்பிக்கை பிறக்கும். மனசுக்குள் மழையடிக்கும். பூமியே புதிதாகத் தோன்றிய உணர்வை பூக்கள் தந்துவிடும். மலர்ந்தது முதல் சிரித்துக் கொண்டேயிருப்பது இந்தப் பூக்கள் மட்டுந்தான்" என்று புதுக்கவிதை மாதிரி பேசிக் கொண்டே போகிறார் சாரா.

சென்னை மகளிர் கிருஸ்தவக் கல்லூரியில் பி.ஏ. ஆங்கிலம் படித்து வெளியே வந்த சாராவுக்கு முழு நேரத் தொழில் ரீதியான ஓவியர் ஆக வேண்டும் என்ற ஆசை மலர்ந்ததும், கோத்தாரி இன்ஸ்டிடியூட்டில் ஓவியம் பற்றிய ஓராண்டு டிப்ளமோ படிப்பில் சேர்ந்து படித்திருக்கிறார். படிப்பு முடிந்த கையோடு கடந்த ஓராண்டுக் காலத்தில் நூற்றுக்கும் அதிகமான மலர் ஓவியங்களை வரைந்து தள்ளியிருக்கிறார். அவற்றில் சிலவற்றை மட்டும் தேர்வு செய்து முதல் ஓவியக் கண்காட்சியை அண்மையில் சென்னையில் நடத்தியபோது, மூத்த ஓவியர்கள் வந்து பார்த்துவிட்டு பாராட்டியதே பெரிய விருதுபோல் உள்ளது என்கிறார்.

வெட்டுக்கிளிகளையும், வண்ணத்துப் பூச்சிகளையும் தொடர் ஓவியங்களாய் வரைய விரும்பும் சாரா, தம்மைக் கவர்ந்தவை என்றில்லாமல் எல்லாவகைப் பூச்சிகளையும் வரைய ஆசை என்கிறார். சாராவுக்கு மெக்னோலியா என்ற வகைப் பூவை ரொம்பப் பிடிக்குமாம். காரணம், அது புல்லில் பூக்கும் பூ.

"புல்லில்தானே பூத்திருக்கிறது என்று நான் அலட்சியமான பார்வையோடு நோக்கியிருந்தால், இத்தனை அழகான பூவை நான் இழந்திருப்பேன்" என்கிறார் தலையில் பூச்சூடும் பழக்கமே இல்லாத இந்தப் பூக்களின் ரசிகை!

சந்திப்பு : **ஆர்.சி. ஜெயந்தன்**

அட்டை, படங்கள் : **டிஜிடல் சண்முகம்**

'அடியே... காந்தாவாக' ரம்யா!

● பெங்களூரைச் சேர்ந்த 'பெனெடிட் பால்ராஜ்' என்ற பிஞ்சுக் குழந்தை பெற்றோரை இழந்து அனாதையாக இருக்கிறது. கலப்புத் திருமணம் செய்து கொண்ட குற்றத்திற்காக பெனெடிட்டின் தாயை அவளுடைய பெற்றோரும் சகோதரர்களும் கொன்றனர். இப்போது பெனெடிட்டிற்குப் பாதுகாப்பு கொடுத்திருப்பது கமிஷனர் சங்கிலியானா. தத்தெடுத்துக் கொள்ள ஏராளமானவர்கள் விண்ணப்பித்திருக்கின்றனராம். "சட்டப்படி செய்யப்படும் பலத்த பரிசோதனைக்குப் பிறகே குழந்தை கொடுக்கப்படும். கொலைகாரர்களின் நிழல்கூட படாத இடத்திற்கு அனுப்பி வைக்கப்படுவாள். வெளிநாட்டில் குடியேறியிருக்கும் சில இந்தியர்களின் பெயர் பரிசீலனையில் இருக்கிறது" என்கிறார் கமிஷனர். சுமார் நான்கு லட்ச ரூபாய் குழந்தையின் எதிர்காலத்திற்கென ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. சபாஷ்! இதுதாண்டா போலீஸ்!

● மீண்டும் பழைய சினிமாவையே திரும்பவும் புதிதாக எடுப்பது ஒரு ஃபேஷன். 'தேவதாஸ்' சினிமா வந்த பிறகு பலருக்கு மலரும் நினைவுகள். தமிழ் சூப்பர் ஹிட்டான 'ரத்தக்கண்ணீர்' இப்போது கன்னடத்தில் 'ரக்த கண்ணீரு' என்ற பெயரில் வரவிருக்கிறது. உபேந்திரா, ரம்யா கிருஷ்ணா, சாக்ஷி நடிக்க சிவமணி இயக்குகிறார். ஐம்பது வருடத்திற்குப் பிறகு கன்னடத்தில் ரீமேக்காக இப்படத்தைத் தருகிறோம். கதையில் மாற்றம் இல்லை. ஆனால் தற்காலத்திற்கு ஏற்றாற் போல் செய்ய இருக்கிறோம்" என்கிறார்கள். நடிகவேள் எம்.ஆர். ராதாவின் புகழ் பெற்ற படைப்பான ரத்தக் கண்ணீர் கன்னடத்தில் எந்த இடத்தைப் பிடிக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்!

● கர்நாடக அரசின் ஃபோரன்ஸிக் கூடத்தில் இருப்பது ஒரே ஒரு தொலைபேசிதானாம். அலுவலகத்திற்குள்ளேயே இன்டர்காம் வசதியும் கிடையாதாம். "ஏன் இங்கு ஒரே தொலைபேசி. இதனால் அசௌகரியமில்லையா?" என்று ஒருவர் கேட்டதற்கு "இது புது ஆபீஸ். இதற்கு முன்னால் வேறிடத்தில் இருந்தோம். கூடிய சீக்கிரத்தில் போன்கள் வந்துவிடும்" என்றனராம். "அது சரி, எப்போது இங்கே மாற்றல் ஆகி வந்தீர்கள்?" என விடாமல் நச்சரிக்க, '90ல் (!) என்று பதில் வந்ததாம். அடேயப்பா! மகாமகம் கடந்த ஆபீஸ்-புத்தம்புதுசாமே!



● சோழவரம் கார் ரேஸ் போல ஹுப்ளி புறா ரேஸ் ரொம்பப் பிரபலம். இந்த வருடம் மாருதி ராவ் பில் லேயின் புறா 9 மணி 55 நிமிடங்கள் பறந்து, நூறு புறாக்களை ஓரங்கட்டி, முதல் பரிசைத் தட்டிச் சென்றிருக்கிறது. எது ஜெயிக்கும் என பலத்த பெட்டிங்கும் உண்டாம். மாட்ச் ஃபிக்ஸிங் இருக்குமா?

— லதா சேகர்



• ரம்யா கிருஷ்ணன்



S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கை யில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

50 / 88, Panchali Amman Kovil Street, (Near Arumbakkam Post Office)
Arumbakkam, Chennai - 600 106
Tel. Off: 475 5700, 475 1356, 475 5799
Cell No. : 98400 84363
Email: svhome1rediffmail.com



வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
89. (ப.எண் 42) காமாக்ஷி ஜோஸியர் தெரு. கும்பகோணம்-612 001.

☎ : (0435)
Off : 425948
Fax : 423777
Patasala : 422866

E-mail : vedagdps@sancharnet.in - Website : www.geocities.com/gdpskmu

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு, பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்ககும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 460 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது: தற்பொழுது 120 மாணவர்களுக்கு 12 வேத, சாஸ்திர அத்யாபகர்கள், புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். *புதிய பாடசாலை கட்டிட நிர்மாணப்பணி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. நன்கொடை வரவேற்கப்படுகிறது.*

தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு திட்ட விபரங்கள்	ஒரு முறைக்கான நன்கொடை தொகை (One Time)	நிரந்தர வைப்பு நிதி 'Corpus Fund'
ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை)	Rs. 500	Rs. 5000
அமாவாஸ்யை (or) பௌர்ணமி (or) க்ருஷ்ண (or) சுக்ல பக்ஷ த்வாதசி ஸமாராதனைக்கு [Please choose one specific (the above said) day of a particular month in a year for Samaradhana]	Rs. 1,500	Rs.15,000
ஒரு வேதம் பயிலும் மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/-	Rs. 12,000 P.A	Rs. 1 Lakh

Cross செய்யப்பட்ட D.D.-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.



சிவகாமியின் சபதம்

பத்தாம் அத்தியாயம்

வாக்கு யுத்தம்

மந்திரி மண்டலத்தாரின் ஒருமுகமான அபிப்பிராயத்தை முதன்மந்திரி சாரங்கதேவ பட்டர் கூறி முடித்ததும் மகேந்திர சக்கரவர்த்தி சபையோரை ஒருதடவை சுற்றி வளைத்துப் பார்த்தார். மாமல்லரும் பரஞ்சோதியும் இருந்த இடத்தை மட்டும் நோக்காமல் அவருடைய கண்ணோட்டத்தை முடித்துவிட்டு, "சபையோர்களே! உங்களுடைய அபிப்பிராயத்தை முன்கூட்டியே எதிர்பார்த்து...'' என்று ஆரம்பித்தார். சிங்காசனத்தில் நிலைத்து உட்கார முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த மாமல்லர் அப்போது துள்ளி எழுந்து, "பல்லவேந்திரா! சாதுக்களும், சமாதானப் பிரியர்களும் இராஜ தந்திரிகளும், தீர்க்க தரிசிகளும் வீற்றிருக்கும் இந்த மகா சபையில் அடியேனும் ஒரு வார்த்தை சொல்லலாமா?'' என்று கேட்டார். அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் சீறலுடன் நெருப்பைக் கக்கிக் கொண்டு வரும் அக்னியாஸ்திரத்தைப் போல் அந்தச் சபையில் இருந்தவர்களின் செவியில் பாய்ந்தது.

மாமல்லருடைய அக்னியாஸ்திரங்களை, மகேந்திரர் வருணாஸ்திரத்தைப் பிரயோகித்து அடக்க முயன்றார்.

"மாமல்லா! இதென்ன இப்படிக் கேட்கிறாய்? பல்லவ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்துக்கு உரிமை பூண்ட குமார சக்கரவர்த்தியல்லவா நீ? சாம்ராஜ்யத்தின் மந்திராலோசனை சபையில் கலந்து கொள்ள உனக்கு இல்லாத பாத்தியதை வேறு யாருக்கு உண்டு? உன் மனத்தில் தோன்றுகிறது என்

அமரர் கல்கி

னவோ, அதைத் தாராளமாகச் சொல்! ஆனால், நான் உன்னுடைய தந்தையாகையாலும், இச் சபையில் உள்ளவர்களெல்லாம் வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்த பெரியவர்களாதலாலும் எங்களையெல்லாம் அவமதித்துப் பேசும் உரிமையை நீ கோர மாட்டாயென்று கருதுகிறேன்...''

அப்போது சபையில் ஏற்பட்ட குறுநகைப்பின் ஒலி மாமல்லர் காதில் விழவும், அவர் தம் கண்களில் தீ எழுமாறு சபையைச் சுற்றிப் பார்த்து விட்டுத் தந்தையை இடைமறித்துக் கூறினார்.

''தந்தையே! தங்களையாவது இங்குள்ள பெரியவர்களையாவது அவமதிக்கும் எண்ணம் எனக்குக் கொஞ்சங்கூட இல்லை. பல்லவ குலத்தையும் பல்லவ இராஜ்யத்தையும் உலகம் என்றென்றைக்கும் அவமதிக்காமல் இருக்க வேண்டுமே என்றுதான் கவலைப்படுகிறேன். வாழையடி வாழையாக தொண்டைமான் இளந்திரையன் காலத்திலிருந்து வந்த வீர பல்லவ குலத்தின் பெருமையைக் குறித்துத் தாங்கள் அடிக்கடி சொல்லியிருக்கிறீர்கள். பல்லவ குலத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது இதற்கு முன்னால் இவ்விதமெல்லாம் செய்ததுண்டா? போர்க்களத்தில் எதிரியின் படைகளுக்குப் புறங்காட்டிப் பின் வாங்கி வந்ததுண்டா? பகைவர்களின் படையெடுப்புக்குப் பயந்து, கோட்டைக்குள்ளே ஒளிந்து கொண்டதுண்டா? கடைசியாக இப்போது, பல்லவ நாட்டுக்குள் படையெடுத்து வரத் துணிந்த பாதகனுடன் சமாதானம் செய்து கொள்ளப் போவதாகச் சொல்லுகிறீர்கள். பல்லவேந்திரா! கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நாளைக்கு உலகிலெல்லாம் என்ன பேச்சு ஏற்படும்? 'வாதாபிச் சக்கரவர்த்தி படையெடுத்து வந்தபோது பல்லவ சக்கரவர்த்தி பயந்து கோட்டைக்குள் புகுந்து கொண்டார்; கடைசியில் சரணாகதி அடைந்து சமாதானம் செய்து கொண்டார்' என்று தானே உலகத்தார் சொல்லுவார்கள். புலிகேசி சமாதானத்தை வேண்டித் தூது அனுப்பினான் என்று ஒருவரும் சொல்ல மாட்டார்கள். பாண்டியனும் சோழனும் சேரனும் களப்பாளனும் பல்லவர்களைப் பார்த்து நகையாடுவார்கள். புள்ளலூரில் புறங்காட்டி ஓடிய கங்கநாட்டான் மறுபடியும் துள்ளி எழுவான். உலகம் உள்ளவரைக்கும் பல்லவ குலத்துக்கு ஏற்பட்ட இந்தப் பழி மறையாது.''

இப்படி மாமல்லர் கேட்போரின் மான உணர்ச்சியைத் தூண்டும் வீரமுள்ள வார்த்தைகளைப் பேசிக் கொண்டு வந்தபோது, சபையிலே கலகலப்பு ஏற்பட்டது. மாமல்லருடைய வார்த்தைகளில் உண்மை இருக்கிறது என்பதை ஆமோதித்து ஒருவரோடொருவர் கசமுசவென்று பேசிக் கொண்டார்கள்.

இந்த நிலைமையைத் தமது கூரிய கழுகுக் கண்களின் ஓரப் பார்வையினால் தெரிந்துகொண்ட மகேந்திர சக்கரவர்த்தி, மாமல்லருடைய பேச்சில் நடுவே குறுக்கிட்டார்.

''மகனே! உலகம் நீ நினைப்பது போல் அவ்வளவு பைத்தியக்கார உலகம் அல்ல. மனிதர்கள் எல்லாரும் அவ்வளவு முட்டாள்களும் அல்ல. அப்படியே இருந்தபோதிலும், அதற்காக நானும் மூடத்தனமான காரியத்தைச் செய்ய முடியாது. அவசியமில்லாத போது யுத்தம் நடத்த முடியாது. இலட்சக்கணக்கான வீரர்களின் உயிரை வீண் வீம்புக்காகப் பலிகொடுக்க முடியாது. காரணமில்லாமல் நாட்டின் பிரஜைகளைச் சொல்ல முடியாத கஷ்டங்களுக்கு உள்ளாக்க முடியாது. மாமல்லா! இந்தப் பல்லவ சிம்மாசனத்தில் நான் ஏறியபொழுது, இந்த மணிமகுடம் என் தலையில் சூட்டப்

பட்ட அன்று, இச் செங்கோலை முதன் முதலாக என்னுடைய கரத்தில் ஏந்திய உடனே, 'இந்த நாட்டு மக்களின் உயிரையும் உடைமையையும் பாதுகாப்பேன்; அவர்களுக்குக் கஷ்டம் எதுவும் வராமல் தடுப்பேன் என்று நாடறியச் சபதம் செய்தேன். வெறும் வீம்புக்காகவோ, உலகத்தில் மூடர்கள் ஏதேனும் சொல்லுவார்களே என்பதற்காகவோ அந்தச் சபதத்தை நான் கைவிட முடியாது!'' என்று கம்பீரமான குரலில் தலை நிமிர்ந்து கூறினார்.

ஆனால், மாமல்லருடைய அம்பறாத் தூணியில் இன்னும் சில பாணங்கள் மிச்சமிருந்தன.

"தந்தையே! இந்தப் பல்லவ நாட்டுப் பிரஜைகளைப் பற்றித்தான் தாங்கள் கவலைப்படுகிறீர்கள் என்றால், அந்தக் கவலை தங்களுக்கு வேண்டாம். தெய்வாதீனமான காரணத்தினால் ஏழு மாதத்துக்கு முன்னால் ஒரு சிறு கிராமத்தில் நான் மூன்று தினங்கள் வசிக்க நேர்ந்தது. அப்போது அந்தக் கிராமத்து ஜனங்கள் பேசி கொண்டதை என் இரு செவிகளாலும் கேட்டேன். இந்தப் பல்லவ இராஜ்யத்தின் பிரஜைகள் சுத்த வீரர்கள் என்றும், மானத்துக்காக உயிரையும் உடைமைகளையும் திருணமாக மதிக்கிறவர்கள் என்றும் அறிந்தேன். புள்ளலூர்ச் சண்டையைப் பற்றியும், அதில் நாம் அடைந்த வெற்றியைக் குறித்தும், பல்லவ நாட்டு மக்கள் எப்பேர்ப்பட்ட குதூகலம் அடைந்தார்கள், தெரியுமா? நாம் வீர சைனியத்துடன் இந்தக் காஞ்சிக் கோட்டைக்குள் ஒளிந்து கொள்ளப் போகிறோம் என்ற வதந்தியை அவர்களால் நம்ப முடியவில்லை. பல்லவேந்திரா! என் காதினால் கேட்ட வார்த்தையைச் சொல்லுகிறேன்; மண்டபப்பட்டுக் கிராமத்து ஜனங்கள் என்ன பேசிக் கொண்டார்கள் தெரியுமா? 'மாமல்லனைப் போன்ற புத்திரனையும் பரஞ்சோதியைப் போன்ற தளபதியையும் படைத்த மகேந்திர சக்கரவர்த்தி புலிகேசிக்குப் பயந்து எதற்காகக் கோட்டைக்குள் ஒளிந்து கொள்ளப் போகிறார்? ஒருநாளும் அப்படிச் செய்ய மாட்டார்' என்று பேசிக் கொண்டார்கள். புலிகேசி காஞ்சிக் கோட்டைக்கருகில் வந்ததும் பல்லவ சைனியம் வாதாபிச் சைனியத்துடன் வீரப் போர் புரியுமென்று நம் பிரஜைகள் எதிர்பார்த்தார்கள். அவர்களை நாம் அடியோடு ஏமாறும்படி செய்துவிட்டோம். இப்போதாவது அவர்களுடைய நம்பிக்கையை மெய்ப்படுத்த எனக்குக் கட்டளையிடுங்கள். இந்தக் கோட்டைக்குள்ளே ஓர் இலட்சம் பல்லவ வீரர்கள் எப்போது போர் வருமென்று துடிதுடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நகரின் மாபெருங் கொல்லர்கள் ஒன்றரை வருஷமாகச் செய்து குவித்திருக்கும் வாட்களும் வேல்களும், 'தாகம் தாகம்' என்று தவித்துக்கொண்டிருக்கின்றன. இதோ என் உயிர்த் தோழர் பரஞ்சோதியும் துடிதுடித்துக் கொண்டிருக்கிறார். தந்தையே! சைனியத்தை நடத்திக் கொண்டு போகக் கட்டளையிடுங்கள். வாதாபி சைனியத்தை நிர்மூலம் செய்ய இந்த க்ஷணமே ஆக்ஞை இடுங்கள்!''

மகேந்திர பல்லவர் உணர்ச்சி மிகுதியினால் பேச முடியாமல் தத்தளித்தார். தமது அருமைக் குமாரனுடைய வீராவேச மொழிகளைக் கேட்டு அவருடைய கல் நெஞ்சமும் கனிந்து விட்டதாக ஒருகணம் தோன்றியது. எனினும், மறுகணமே அவர் பல்லைக் கடித்துக் கொண்டு முகத்தையும் கடுமையாக வைத்துக் கொண்டு சொன்னார்: "குழந்தாய்! சுத்த வீரன் சொல்லக்கூடிய வார்த்தைகளை நீ பேசினாய்; அதைக் குறித்து எனக்குச் சந்தோஷந்தான். ஆனாலும், உன் யோசனையை நான் ஒப்புக் கொள்வதற்கில்லை. பல்லவ நாட்டு வீரக் குடிமக்களின்

அபிப்பிராயத்தைப் பற்றிச் சொன்னாய். அதைப் பற்றியும் எனக்கு மகிழ்ச்சியே. ஆனால் பிரஜைகளின் அபிப்பிராயம் எப்போதும் சரியான அபிப்பிராய மாயிராது. முன் யோசனையின்றி, உணர்ச்சி வேகத்தினால் பிரஜைகள் சொல்லும் பேச்சைக் கேட்டு அது காரணமாக இந்த நாட்டு மக்களுக்கும், அவர்களுடைய வருங்காலச் சந்ததிகளுக்கும் எல்லையற்ற கஷ்ட நஷ்டங்களை நான் உண்டாக்கப் போவதில்லை!''

இவ்விதம் மாமல்லரைப் பார்த்துச் சொன்னவர், சபையோரின் பக்கம் திரும்பி, ''சபையோர்களே! உங்களுடைய சம்மதத்தை எதிர்பார்த்து நான் வாதாபிச் சக்கரவர்த்திக்கு முன்னமேயே மறுமொழி அனுப்பிவிட்டேன். அவருடைய சமாதானத் தூதை ஏற்றுக் கொள்வதாகவும், அவரைக் காஞ்சிமா நகருக்குள் நமது விருந்தினராக வரவேற்க மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொள்வதாகவும் ஓலை அனுப்பிவிட்டேன். அவ்விதம் நான் கொடுத்து விட்ட வாக்கை இனி என்னால் மீற முடியாது!'' என்றார்.

மாமல்லர் அப்போது முன்னைவிட அதிகப் பரபரப்புடனே, ''அப்பா! இது என்ன? பல்லவ வம்சத்தின் கொடிய சத்ருவை நமது தலைநகரத்தில் வரவேற்பதா? புலிகேசிக்கு உபசாரமா? யுத்தத்தை நிறுத்திச் சமாதானம் செய்து கொள்வதோடாவது நிறுத்திக் கொள்ளுங்கள். வாதாபிப் படை இந்த நாட்டை விட்டு ஒழியும்வரையில் நாம் கோட்டைக்குள்ளேயே வேணுமானாலும் ஒளிந்து கொண்டிருப்போம். ஆனால், வஞ்சகப் புலிகேசியுடன் நமக்குச் சிநேகம் வேண்டாம். வைஜயந்திப் பட்டணத்துக்கு நெருப்பு வைத்த பெரும்பாதகன் இந்தப் புண்ணிய நகரத்துக்குள்ளே காலடி வைக்க வேண்டாம்'' என்று அலறினார்.


''முடியாது, மாமல்லா! பல்லவ குலத்தினர் ஒருதடவை கொடுத்த வாக்கை மீறுவது வழக்கமில்லை; புலிகேசியை நான் வரவேற்றேயாக வேண்டும்'' என்றார் மகேந்திரர்.

இதைக் கேட்ட மாமல்லர் இரண்டு அடி முன்னால் பாய்ந்து வந்தபோது சபையோர் ஒருகணம் திடுக்கிட்டுப் போய் விட்டார்கள். தந்தையைத் தாக்குவதற்கோ அவர் பாய்கிறாரோ என்றுகூடச் சிலர் பயந்து போனார்கள். அவ்விதமான விபரீதம் ஒன்றும் நேரவில்லை. சக்கரவர்த்தியின் அருகில் வந்து கைகூப்பிக் கொண்டு, ''தந்தையே! வாதாபிச் சக்கரவர்த்தியைத் தாங்கள் வரவேற்றேயாக வேண்டுமானால் எனக்கு ஒரு வரம் கொடுங்கள். புலிகேசியும் நானும் ஏக காலத்தில் இந்த நகருக்குள்ளே இருக்க முடியாது. புலிகேசி உள்ளே வரும்போது நான் வெளியே போய் விடுவதற்கு அனுமதி கொடுங்கள்!'' என்றார் மாமல்லர்.

''நானும் அப்படித்தான் யோசித்து வைத்திருக்கிறேன், குமாரா! வாதாபிச் சக்கரவர்த்தி வரும்போது உன்னை வெளியே அனுப்பி விடுவதாகத்தான் உத்தேசித்திருக்கிறேன். அதற்கு வேறொர் அவசியமும் ஏற்பட்டிருக்கிறது'' என்றார் சக்கரவர்த்தி.

இச்சமயத்தில் தளபதி பரஞ்சோதி ஓர் அடி முன்னால் வந்து, ''பிரபு! எனக்கும் குமாரச் சக்கரவர்த்தியுடன் வெளியேற அனுமதி தர வேண்டும்'' என்று கேட்க, மகேந்திரர் கூறினார்.

''ஆஹா! அப்படியே! இராமன் போகும் இடத்துக்கு லக்ஷ்மணனும் தொடர்ந்து போக வேண்டியது நியாயந்தானே! நீங்கள் இருவரும், நம் சைனியத்திலே சிறந்த முப்பதினாயிரம்




''முடியாது,
மாமல்லா!
பல்லவ குலத்
தினர் ஒருதடவை
கொடுத்த வாக்கை
மீறுவது வழக்க
மில்லை; புலிகேசியை
நான் வரவேற்றேயாக
வேண்டும்''

வீரர்களைப் பொறுக்கிக் கொண்டு ஆயத்தமாகுங்கள். வடநாட்டுச் சளுக்க சைனியம் படையெடுத்த சமயம் பார்த்துக் கோழைத்தனமாகவும், திருட்டுத்தனமாகவும் பல்லவ இராஜ்யத்துக்குள் பிரவேசித்த தென்பாண்டிய நாட்டானுக்கு அவசியம் ஒரு பாடம் கற்பிக்க வேண்டும். சீக்கிரமாகவே புறப்பட ஆயத்தமாகுங்கள்!''

சக்கரவர்த்தியின் கடைசி மொழிகள் மாமல்லருடைய கோபத்தைத் தணித்து ஓரளவு உற்சாகத்தை அளித்ததோடு, மந்திரி மண்டலத்தாரை ஒரே ஆச்சரியக் கடலில் ஆழ்த்திவிட்டன.

பதினோராம் அத்தியாயம்

வரவேற்பு

அன்றிரவு வெகு நேரத்துக்குப் பிறகு அந்தப்புரத்தில் மகேந்திர பல்லவர் தம் பட்ட மகிஷியைச் சந்தித்தபோது, புவனமகாதேவி தனது மனக் கவலையைத் தெரிவித்தாள். "பிரபு! இன்றைக்கு மந்திராலோசனை சபையில் தங்களுக்கும் மாமல்லனுக்கும் பெரிய வாக்குவாதம் நடந்ததாமே! நாலு பேருக்கு முன்னால் தந்தையும் புதல்வரும் சண்டை போட்டுக் கொள்ளலாமா?'' என்று சக்கரவர்த்தினி கேட்டாள்.

"தேவி! யார் என்ன வேணுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும். எனக்கு இன்று இருக்கிற பெருமையையும் பூரிப்பையும் சொல்லி முடியாது. அர்ஜுனனும் அபிமன்யுவும், லக்ஷ்மணனும் இந்திரஜித்தும் பேசுவதற்குரிய வீர வார்த்தைகளை இன்று மாமல்லன் பேசினான். உள்ளுக்குள் எவ்வளவோ எனக்கு ஆனந்தமாயிருந்தது. ஆனாலும், என்னுடைய நோக்கத்தை நான் கைவிடுவதற்கு இல்லை. ஆகையால், என்னுடைய ஆனந்தத்தை வெளியே காட்டாமல் கடுமையாகவும், கண்டிப்பாகவும் பேச நேர்ந்தது'' என்றார் சக்கரவர்த்தி.

''உங்களுடைய நோக்கந்தான் என்ன? தாங்கள் செய்யப் போகும் காரியம் எனக்கும் பிடிக்கவில்லை. நம்முடைய கொடிய சத்துருவைக் காஞ்சி நகருக்குள் வரவேற்பது உசிதமான காரியமா?'' என்றாள் பல்லவச் சக்கரவர்த்தினி.

"தேவி! இது என்ன வார்த்தை? சத்துருவாக வந்தவரை மித்திரராக்கித் திருப்பியனுப்புவது பல்லவ வம்சத்துக்குப் பெருமை அல்லவா? என்னுடைய நோக்கம் என்னவென்று கேட்டாயே? சொல்கிறேன், கேள்: என்னுடைய வாழ்நாளில் உலகத்தில் மீண்டும் சத்திய யுகம் பிறப்பதைக் காண வேண்டும் என்பதே எனது நோக்கம். இந்தப் புண்ணிய பாரத பூமியில் இன்றைய தினம் மூன்று பெரிய சாம்ராஜ்யங்கள் இருக்கின்றன. நர்மதைக்கு வடக்கே ஹர்ஷவர்த்தனர்; நர்மதைக்கும் துங்கபத்ராவுக்கும் மத்தியில் புலிகேசி; துங்கபத்ரைக்குத் தெற்கே மகேந்திர பல்லவன். இந்த மூன்று பேரும் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் பட்சத்தில் இந்தப் புண்ணிய பூமி நரக பூமியாயிருக்கும். பஞ்சமும் பிணியும் ஜனங்களைப் பிடுங்கித் தின்னும். அப்படியில்லாமல் இந்த மூன்று பேரும் சிநேக தர்மத்துக்குக் கட்டுப்பட்டவர்களாயிருந்தால், இந்தப் பாரத பூமியே சொர்க்க பூமியாகிவிடும். தேசத்தில் வறுமை, பட்டினி, பஞ்சம் ஒன்றும் தலை காட்டாது. கல்வியும் கலைகளும் ஓங்கி வளரும். சகல ஜனங்களும்

சௌக்கியமாக வாழ்வார்கள். தேவி! என் இளம் பிராயத்தில் நான் ஒரு பகற்கனவு காண்பது உண்டு. சளுக்கச் சக்கரவர்த்தியின் விருந்தினனாக நான் சென்று அஜந்தாவின் வர்ண சித்திர அதிசயங்களைக் கண்டு களிப்பதாகக் கனவு கண்டேன். அப்புறம் வடக்கே கன்யாகுப்ஜத்துக்குச் சென்று ஹர்ஷவர்த்தனர் மூன்று வருஷத்துக்கு ஒரு தடவை நடத்தும் ஆனந்தக் கலைவிழாவைப் பார்த்து மகிழ்வதாகக் கனவு கண்டேன். மாமல்லபுரத்தை ஒரு சொப்பனச் சிற்ப உலகமாகச் சிருஷ்டித்து அதைப் பார்ப்பதற்காக ஹர்ஷரையும் புலிகேசியையும் அழைப்பதாகக் கனவு கண்டேன். அதெல்லாம் இப்போது நிறைவேறுமெனத் தோன்றுகிறது. நாங்கள் மூவரும் சிநேகர்களாகிவிட்டால் அப்புறம் இந்த நாட்டில் சமயச் சண்டை என்பது ஏது? யுத்தந்தான் ஏது?"

"பிரபு! அன்பு மதத்தையும் சிநேக தர்மத்தையும் பற்றிப் பேசும் தாங்கள் பாண்டியனைத் தண்டிப்பதற்கு மாமல்லனை எதற்காக ஏவுகிறீர்கள்?" என்று சக்கரவர்த்தினி குறுக்கிட்டுக் கேட்டாள்.

"அது வேறு விஷயம். சிநேகம் என்பது சமநிலையில் உள்ளவர்களுக்கிடையேதான் ஏற்பட முடியும். அறிவாளிகளுக்குள்ளேதான் அன்பு வளர முடியும். அறிவற்ற மூடர்களையும் அதிகப் பிரசங்கிகளையும் தண்டோபாயத்தைக் கைக்கொண்டே சீர்திருத்தியாக வேண்டும்" என்று கூறினார் மகேந்திர பல்லவர்.

மறுநாள் முதல் காஞ்சி நகரம் ஒரு புதிய தோற்றத்தை மேற்கொண்டது. ஏதோ ஒரு பெரிய முக்கியமான திருவிழாவை எதிர்பார்ப்பது போல ஜனங்களிடையே அபரிமிதமான உற்சாகம் காணப்பட்டது. வீதிகளையும் வீடு வாசல்களையும் ஜனங்கள் சிங்காரிக்கத் தொடங்கினார்கள். கடைவீதிகள் பழையபடி சோபை பெற்று விளங்கின. கோயில்களில் உற்சவங்கள் ஆரம்பமாயின. சிற்ப மண்டபங்களில் பழையபடி சிற்பிகள் வேலை செய்யத் தொடங்கினார்கள். நாற்புறமும் மேள வாத்தியங்கள் முழங்கின. சமஸ்கிருதக் கடிகைகளில் முன்போல வேத கோஷங்கள் கேட்டன. தமிழ்க் கல்லூரிகளில் பாசுரங்கள் பாடப்பட்டன. நடன அரங்கங்களும் நாடக மேடைகளும் புத்துயிர் பெற்றன. தாளச் சத்தத்துடன் கலந்து பாதச் சதங்கையொலியும் எழுந்தது.

ஜனங்களின் முக மலர்ச்சியோ சொல்ல வேண்டியதில்லை. எல்லாரும் ஒரே ஆனந்தமயமாய்க் காணப்பட்டார்கள். புருஷர்களும் ஸ்திரீகளும் முன்போல ஆடை ஆபரணங்களால் தங்களை அலங்கரித்துக் கொள்ளத் தொடங்கினார்கள். பெண்களின் கூந்தலில் புஷ்பக் காடுகள் மலர்ந்து நாற்புறமும் சுகந்தத்தைப் பரப்பின.

மாமல்லர் எதிர்பார்த்ததுபோல் காஞ்சி நகர மக்கள் அதிருப்தியடைந்தவர்களாகத் தெரியவில்லை. யுத்தம் நின்று விட்டதில் பெரிதும் மகிழ்ச்சியடைந்தவர்களாகவே காணப்பட்டார்கள். அதைக் காட்டிலும் சளுக்கச் சக்கரவர்த்தி காஞ்சிக்கு விஜயம் செய்யப் போவதை நினைத்து நகரவாசிகள் அபரிமிதமான களிப்படைந்தவர்களாகத் தோன்றினார்கள்.

புலிகேசியின் சமாதானத் தூதன் வந்த ஐந்தாவது நாள் பிற்பகலில், காஞ்சி நகரின் வடக்குக் கோட்டை வாசல் எட்டு மாதத்திற்குப் பிறகு மீண்டும் திறந்தது. பேரிகைகளும், நகராக்களும் சமுத்திர கோஷம், சடுமுகம் என்னும் வாத்தியங்களும் நெடுந்தூரத்திற்கு நெடுந்தூரம் உள்ளவர்களின் காது செவிடுபடும்படி முழங்கின. வாதாபிச் சக்கரவர்த்தி தாம் இளம் பிராயத்திலிருந்து பார்க்க ஆசைப்பட்டுக் கொண்டிருந்த 'கல்வியிற் பெரிய காஞ்சி' மாநகரத்திற்குள் பிரவேசம் செய்தார். அவருடைய முக்கிய பரிவாரத்தைச் சார்ந்த ஐம்பது பேர் அவருடனே வந்தார்கள்.

வெளிவாசலைத் தாண்டி உள்ளே பிரவேசித்ததும், அங்கே தம்மை எதிர்கொண்டு வேற்பதற்கு ஆயத்தமாகக் காத்துக் கொண்டிருந்த மகேந்திர பல்லவச் சக்கரவர்த்தியைப் புலிகேசி பார்த்தார். அவ்விரண்



அருள்வாக்கு

'ஜனங்கள் இப்படிப்பட்ட சரக்குதான் கேட்கிறார்கள்' என்று அவர்கள் தலையில் பழியைப் போட்டுவிட்டு, கன்னா பின்னாப் பாட்டுப் பாடுகிறார்கள்; புலன் வெறியைத் தூண்டி விடுகிற ரீதியிலேயே எழுதுகிறார்கள்; ஸினிமா எடுக்கிறார்கள்; சித்திரம் போடுகிறார்கள். ஜனங்களும் அவர்கள் தலையில் பழியைத் திருப்பிப் போட்டு அவர்கள் இப்படிப்பட்ட சரக்குகளைத்தான் தருவதால் தாங்கள் அதைத்தான் எடுத்துக் கொள்ளும்படி இருக்கிறது என்கிறார்கள். இதிலே ஜனங்களைவிடக் கலைஞர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களாக இந்தக் கலைகளை அப்யஸித்துக் கொண்டிருக்கிறவர்களுக்குத்தான் அதிகம் பொறுப்பிருக்கிறது. இப்போது கண்டதை எழுதியும், பாடியும், நடித்தும், படம் பிடித்தும் கீர்த்தி, தனம் எல்லாம் ஸம்பாதித்து விடலாம். ஆனால் 'இத்தனை ஜனங்களைக் கெடுத்ததற்கான தோஷத்தையும் கண்ணுக்குத் தெரியாமல் ஸம்பாதித்துக் கொண்டிருக்கிறோம்; நாளைக்கு இதற்காக நாம் ஒருத்தனுக்குப் பதில் சொல்லியாக வேண்டும்' என்ற நினைப்பு அவர்களுக்கு இருக்க வேண்டும். மளிகை சாமானில் கலப்படம் பண்ணினால் குற்றம்; குடிதண்ணீரைக் கெடுத்தால் குற்றம் என்றால் நேரே மனுஷ்யனின் ஆத்மாவையே கெடுப்பது இவற்றைவிடக் குற்றம்தானே? கலப்படத்துக்காகத் தண்டிக்கிறவன் நம் மாதிரி ஒருத்தன்தான். அவனிடமிருந்து தப்பியும் விடலாம். அல்லது லஞ்சம் கொடுத்து ஸரிப்படுத்திவிடலாம். ஆனால் தன் ஆத்மாவையும் கெடுத்துக் கொண்டு, மற்றவர்களையும் கெடுத்ததற்காக ஒருத்தனைச் சிக்ஷிக்கிறானே, அவனிடமிருந்து தப்பவே முடியாது; அவனை நாம் வசியம் பண்ணிக் கொள்ளவும் முடியாது; இந்த நினைப்பு இருந்துவிட்டால் கலைகளில் ஈடுபட்டவர்கள் தப்பு வழிக்குப் போக மாட்டார்கள்.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராச்சாரிய ஸ்வாமிகள்

பேரரசர்களின் கண்களும் சந்தித்தன. மகேந்திரரின் முகத்தில் அரும்பியிருந்த இளம் புன்னகையைத் தவிர வேறு எவ்வித உணர்ச்சியும் வெளியாகவில்லை. ஆனால், புலிகேசியின் முகமானது அவருடைய கொதிப்படைந்த உள்ளத்தின் கொந்தளிப்பை நன்கு காட்டுவதாய் இருந்தது. 'என்னுடைய வம்ச சத்துரு, நான் போட்டுக் கொண்டு வந்த திட்டங்களையெல்லாம் தோல்வியடையச் செய்த மகேந்திர பல்லவன் இவன்தானா?' என்று புலிகேசியின் உள்ளத்தில் உண்டான ஆத்திரத்தை அவருடைய கண்கள் பிரதிபலித்தன. இந்த எண்ணங்களோடு, 'ஆகா! கள்ளங்கபடு அறியாதது போலப் பாவனை செய்யும் இந்தக் கம்பீரமான முகத்தை இதற்கு முன் எங்கேயோ பார்த்தாற் போல் இருக்கிறதே!' என்ற நினைவும் புலிகேசியின் மனத்தில் தோன்றியது.

இரு சக்கரவர்த்திகளின் விருதுகளும் முறையே கூறப்பட்ட பிறகு, இருவரும் அவரவருடைய குதிரையிலிருந்து கீழே இறங்கி ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். அதேசமயத்தில் புலிகேசியின் கண்கள் மகேந்திர பல்லவருக்குப் பின்னால் நின்ற பரிவாரங்களைத் துருவி ஆராய்ந்தன. "சத்தியாச்ரயா! யாரைத் தேடுகிறீர்கள்?" என்று மகேந்திர பல்லவர் கேட்க,

"பல்லவேந்திரா தங்களுடைய வீரப் புதல்வர் மாமல்லரைப் பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறேன், அந்த மகாவீரர், இங்கு நிற்பவர்களிலே யாரோ?" என்று சளுக்கச் சக்கரவர்த்தி கேட்டார்.

மகேந்திர பல்லவர் அப்போது இலேசாகச் சிரித்துவிட்டு, "இல்லை, சத்தியாச்ரயா! மாமல்லன் இங்கே இல்லை. அவன் வேறு முக்கிய காரியமாக வெளியூருக்குச் சென்றிருக்கிறான்!" என்றார்.

(தொடரும்)



தைராய்டு குறைபாடுகளுக்குத் தேவையான தெய்வீக மூலிகைகளும் & இயற்கை சிகிச்சை முறைகளும்



நம் உடலில் பல வகையான சுரப்பிகள் (Glands) உள்ளன. இவைகள் சுரக்கும் திரவங்கள் (Hormones) நம் உடலின் சீரான இயக்கத்திற்கும், வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் மிகவும் முக்கியமானவை. நம் உடலில் உள்ள ஒவ்வொரு சுரப்பியும் உடலின் குறிப்பிட்ட உறுப்பின் (Organs) வளர்ச்சிக்கு உதவுகின்றன. உடலில் நாளமுள்ள சுரப்பி, நாளமில்லா சுரப்பி (Duct Gland - Ductless Gland) என இரண்டு விதமான சுரப்பிகள் உள்ளன. நாளமுள்ள சுரப்பி என்பது தான் சுரக்கின்ற திரவங்களை குழாய்கள் மூலம் இரத்தத்தில் கலக்க செய்வது. நாளமில்லா சுரப்பி என்பது தான் சுரக்கின்ற திரவங்கள் (Hormones) நேரடியாக இரத்தத்தில் கலக்கச் செய்து, அவை செயலாற்றும் உறுப்புகளுக்கு அனுப்புகின்றன. ஒரு சில காரணங்களால் சுரக்கின்ற ஹார்மோன்கள் கூடுதலாகவோ, குறைவாகவோ சுரந்தால் அவை சார்ந்த உடல் உறுப்பினை பாதிப்புக்குள்ளாகிறது. நாளமில்லா சுரப்பிகளில் தைராய்டு சுரப்பி பற்றியும், இது பாதிப்புக்குள்ளாகும்போது உடலில் தோன்றும் பாதிப்புகள் பற்றியும், அதனை நீக்கும் இயற்கை வழிமுறைகள் பற்றியும் அறிந்துக் கொள்வோம்.

தைராய்டு சுரப்பி கழுத்துப் பகுதியில் குரல் வளையின் இரு பக்கங்களிலும் பக்கத்திற்கு ஒன்றாக அமைந்துள்ளது. இதன் எடை சுமார் 20 முதல் 30 கிராம் இருக்கும். இவை இரண்டு பகுதிகளாக உள்ளன (Lobes). தைராய்டு சுரப்பியில் சுரக்கும் ஹார்மோனின் பெயர் தைராக்ஸின் என்பதாகும்.

ஏதேனும் சில காரணங்களால் தைராய்டு சுரப்பிகளில் பாதிப்புகள் தோன்றும்போது மூன்று விதமான குறைபாடுகள் தோன்றுகின்றன. (1) தைராய்டு சுரப்பி அதிகமாக தைராக்ஸினை சுரப்பது (Hyper Thyroidism). (2) குறைவாக தைராய்டு சுரப்பி சுரப்பது (Hypo Thyrodism). (3) தைராய்டு பருத்து காணப்படுவது (Goitre) என்பதாகும்.


ஹைபர்தைராய்டிசம் : தைராக்ஸின் ஹார்மோன் அதிகமாக சுரப்பதால் தைராய்டு சுரப்பி வீங்கி பருத்து காணப்படுவதே ஹைபர் தைராய்டிசம் என்பதாகும். இந்த தைராக்ஸின் அளவு இரத்தத்தில் அதிகமாக கலந்தால் உடல் படபடப்பு, நெஞ்சுப்படபடப்பு, அதிகமான இதய துடிப்பு, உடல் சோர்வு, தலைவலி, உடல் எடை குறைதல், அதிகமான பசி, வயிற்றுப் போக்கு, உடல் சூடு போன்ற அறிகுறிகள் இருக்கும். பெண்களுக்கு மாதவிடாயில் மாற்றம், விரல்களில் நடுக்கம் போன்றன இருக்கும்.

ஹைபோதைராய்டிசம் : தைராக்ஸின் அளவு இரத்தில் குறைவாக இருந்தால் இதற்கு ஹைபோதைராய்டு என்று பெயர். குழந்தைக்கு பிறப்பிலேயே இவ்வாறு இருந்தால் ஏற்படும் நோய்க்கு கிரிடினிசம் என்றும், பெரியவர்களுக்கு இரத்தத்தில் குறைவாக இருந்தால் ஏற்படும் நோய்க்கு மிக்ஸிடிமா என்று பெயர். குழந்தைகளுக்கு வளர்ச்சி தடைபடுதல், மன நிலை குன்றி இருத்தல், தோல் உலர்ந்து, மென்மையற்று, வீங்கி தடித்து காணப்படும். பால் சுரப்பிகளின் (Sexual Organs) வளர்ச்சியின்மை, போன்ற அறிகுறிகளும், பெரியவர்களுக்கு தோலில் முடி உலர்ந்து, சொரசொரப்பாகி உதிர்தல், முகம் எவ்வித உணர்ச்சிகளும் அற்று வீங்கி காணப்படுதல், சோர்வு, உடல் எடை அதிகமாதல், அடிக்கடி சளி பிடித்தல், உடலின் வெப்ப நிலை குறைவு, நாடி துடிப்பு குறைவு போன்ற அறிகுறிகள் தோன்றும்.

தைராய்டு நோயாளிகளுக்கு தேவையான தெய்வீக மூலிகைகள் : வேப்பிலை, வில்வம், துளசி, அத்தி, அருகம்புல், நெல்லி, நாவல், கீழாநெல்லி, கடுக்காய், தான்றிக்காய், மாவிலை போன்றவைகளை பறித்து வெயிலில் உலர்த்தி பொடி செய்து சம அளவில் ஒன்றாக கலந்து ஒரு பாட்டலில் வைத்துக் கொள்ள வேண்டும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக தினம் காலை, இரவு ஆகிய இரண்டு வேளையும் உட்கொள்ளவும். இம் மூலிகைகளால் தைராய்டு சுரப்பி நோய்களால் பாதிப்படையாமல் பாதுகாக்கப்படுகின்றன. பின் இவைகளில் உள்ள சக்திகள் தைராய்டு சுரப்பியை இயல்பான அளவு சுரப்பு நீர்களை சுரக்க உதவுகின்றன.

தைராய்டு நோயாளிகள் பின்பற்ற வேண்டிய உணவு முறைகள் : இந்நோயாளிகள் தினம் காலை, ஒரு வேளை பச்சையாக சாப்பிடும் பழங்கள், காய்கள், பழஜூஸ், வெஜிடபிள் சாலட் போன்றவைகளை தேவையான அளவு காலை உணவாக சாப்பிட வேண்டும். இவைகளில் அந்தந்த காலங்களில் கிடைக்கும் காய்கள், பழங்கள் உண்பது சிறந்த பயன் அளிக்கும். தேன், இளநீர், பதனீர், கரும்புசாறு போன்றவையும் பயன்படுத்தலாம். பகல் வேளை உணவில் சமைத்த உணவு 50% அளவும், 50% அளவு சமைத்த காய்கள், கீரைகள் இருக்கும்படியாக சாப்பிடுவது நல்லது. மாலை வேளைகளில் வெஜிடபிள் சூப், பட்டாணி சுண்டல், சத்துமாவு கஞ்சி, சுக்கு காப்பி போன்றவைகளில் ஏதேனும் ஒன்று தேவையான அளவு உட்கொள்ளவும். இரவு உணவை - ராகி, கோதுமை, மக்கா சோளம் போன்ற தானியங்களில் தயார் செய்த உணவாக தோசை, இடியாப்பம், ரொட்டி போன்றவைகளாக உண்பது நல்லது அயோடின் உள்ள உணவுகள் என்று இதுவரை தெளிவாக அறிய முடியவில்லை. எனவே உணவில் மேலே குறிப்பிட்டுள்ளவாறு சரிவிகித உணவை உட்கொண்டாலே தினசரி தேவையான அயோடினை பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறு உணவை உட்கொள்வது உடலில் உள்ள எல்லா சுரப்பிகளும் இயல்பான அளவில் சுரப்பு நீர்களை சுரக்க உதவும்.

உடற் பயிற்சிகள் : கழுத்துப் பகுதியில் தான் இந்த சுரப்பி உள்ளது. எனவே இதனை தூண்டும் வகையில் நாம் செய்யும் உடற்பயிற்சி இருக்க வேண்டும். மேலும் கழுத்து மசாஜ், நீர் சிகிச்சை (Hydro Theraphy) மண் சிகிச்சை யோகாசனம் போன்றன செய்தால் விரைவான பலன் பெறலாம். மேலும் இது பற்றிய விரிவான விவரம் அறிய கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள் **Chennai Cell : 98410 45138 Vellore Cell : 98423 69696**

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்

P.B.No:30, No.3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர், வேலூர் Dt.-635 601 ✆ 04179-220469, 222769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7 ✆ 6424285, 6427638

7 & 8ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011589, 4083879

9ந் தேதி - பெங்களூர் : காலை 11 to 1 மணி வரை ஹோட்டல் பிரஸிடெ, (கல்பனா தியேட்டர் அருகில்) செப்பேசுடியா ரோடு : ✆ 080-2265374, 2873013

18 & 19ந் தேதி - புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, : 5717126, 5723651

“மாயா... மாயா.

ஹோட்டல் சவேராவின் 'பாடிவிரிக்ஸ் ஹெல்த் ஸ்டுடியோ பரபரப்பாக இருந்தது.

''நம்ப ஹெல்த் ஸ்டுடியோவுக்கு யாரோ ஃபிலிம் ஸ்டார் வரப் போறாராமே!''

“பிரசாந்த், ராம்கி, கஸ்தூரி, மந்த்ரா எல்லாம் ரெகுலரா வர்றவங்க.. இது வேறே யாரோ! பத்து மொழியிலே நடிச்சவராம்!''

ஜிம் பொறுப்பாளர்கள் விஜயகுமாரும், சுந்தரும் பேசிக் கொண்டிருக்கும் போதே, அவர்களுக்கு இன்ப அதிர்ச்சி தரும் வகையில், தலையை ஸ்டைலாகக் கோதியபடியே உள்ளே நுழைகிறார் ஓமக்குச்சி நரசிம்மன்.

''என்ன ஸார்... 'இரும்படிக்கிற இடத்துலே ஈக்கு என்ன வேலை?'ன்னு பார்க்கறீங்களா?''

“வாங்க ஸார்.. வெல்கம்..”

“சென்னையிலே மூலைக்கொரு ஹெல்த் கிளப் இருக்கு தம்பி.... ஆனா, உங்க ஜிம்லே நிறைய விஷயங்கள் புதுசா இருக்குன்னு கேள்விப்பட்டேன். அதான் ரிலாக்ஸா ஒரு விஸிட் அடிக்கலாமேன்னு..”

“வித் ப்ளெஷர்'' மிக பவ்யமாக, அவரை வழிநடத்திக் கொண்டு போனார்கள்.

“ஓமக்குச்சி ஸார்... உங்க எடை என்ன?''

“1954லேயிருந்து ஐம்பத்து நாலு கிலோ தான். எப்படி இவ்ளோ கரெக்டா சொல்றேன்னா, என்னோட எஸ்.எஸ்.எல்.சி. ரிக்கார்டுலே, மருத்துவப் பரிசோதனையிலே என்னோட எடையைக் குறிச்சிருக்காங்க.”



• தூக்கேய்...



• ஐலேசா...ஐலேசா...



• மேனி அழகுக்கு...

• நீனாரெட்டி



“தொப்பை மாயா!”

• சக்திமான்



“நாற்பத்தெட்டு வருஷமா, ஒரே வெயிட்டை மெயின்டைன் பண்ணியிருக்கீங்களே! வெல்டன் ஸார்” விஜயகுமார் பாராட்ட, ஓமக்குச்சிக்கு மூடு வந்தே விட்டது.

இப்ப கொஞ்சம் வெயிட் தூக்கிப் பார்க்கட்டுமா?”

“ஆஹா!”

தோசைக்கல் சைஸில், கனமாகப் பளபளத்த, எடைத் தட்டுகளை எடுத்து, அடுக்கி, பூட்டவும் ஓமக்குச்சி அலறினார்.

“யோவ்...இந்த வெயிட்டை எல்லாம் கண்ணால பார்க்கவே, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்குதே?”

விட்டால் வாசல்புறமாக ஓடி விடுவார் போலிருந்தது.

“இல்லீங்க.. இதையெல்லாம் கழட்டறோம். உங்களுக்கு மினிமம் வெயிட்தான் அடுக்குவோம். டோன்ட் வொர்ரீ” என்று சுந்தர் சொல்லவும், நெஞ்சைத் தடவிக் கொண்டார்.

இருபது பவுண்ட் எடைத் தட்டைத் தூக்கியபடியே, “யோகா, சீக்கிரம் ஃபோட்டோ எடுங்க. இது எம்மேலே விழுந்தா, நான் சட்னிதான்” என்று போஸ் கொடுத்தார்.

“இது ஸ்மித் மெஷின். நல்ல உயரம் கிடைக்கும். ஷோல்டர்ஸ் டெவலப் ஆகும். சாதாரணமா, பத்து, பன்னிரண்டு புல்அப்ஸ் எடுக்கலாம்” என்று விஜயகுமார் விளக்கிக் கொண்டிருக்கும்போதே, ஓமக்குச்சியைக் காணவில்லை.

“தோ... இங்க! பத்து என்ன? அதுக்கு மேலே எடுப்பேன்” என்று ஸ்மித் மெஷினின் குறுக்குக் கம்பியைப் பிடித்து, என்ன செய்தாரோ, பீக் அவர் ஃபுட் போர்டு பயணி போல தொங்கினார்... துவண்டார்!

ஓடிப்போய் தாங்கி, இறக்கிவிட்ட மாஸ்டர்களை, பார்வையாலேயே பொசுக்கி, “ஷோல்டரை ஷேப் பண்ண விடமாட்டேங்கறீங்களேப்பா” என்று கோபித்துக் கொண்டார்.

அடுத்து அவர் பார்வை, ‘ட்ரெட்மில்’ மீது பட வேகமாய் ஓடினார்.

அது இலேசாகத் தடுக்கிவிடவே, “புல் தடுக்கி பயில்வான் கேள்விப்பட்டிருக்கீங்களா? நான் ட்ரெட் மில் தடுக்கி விழுவான்”னு கேப்புலே ஒரு கடி கடித்தார்.

“இதிலே என்ன ஸ்பெஷாலிடி?”

“இந்த மிஷின் மட்டுமில்லே. இங்கே இருக்கிற எல்லா மிஷினுமே கம்ப்யூட்டரைஸ்ட்ங்கிறதனாலே, நீங்க பயிற்சியின் போது எவ்வளவு கலோரிகள் க்ரைச்சீங்கன்னு உடனடியா தெரிஞ்சுக்கலாம்.”

“இது மல்டி ஹிப் மிஷின். கொஞ்சம் அட்வான்ஸ்ட் டைப். நடிகர் பிரசாந்த், ராம்கி எல்லாம் விரும்பி பயிற்சி செய்வாங்க” என்று சுந்தர் சொன்னதும்,

“ஐயோ... இது நம்பளாலே முடியாதுப்பா!” என்று தொட்டுக் கும்பிடு போட்டார்.

"ஸ்டீம்பாத், சோனா பாத் எடுத்துக்கறீங்களா ஸார்?"

"இரண்டு இரண்டு பிளேட் ஆர்டர் பண்ணுப்பா... வயிற்றைப் பசி கிள்ளுது."

"ஸார்... இது சாப்பிடற பாத் இல்லே... நீராவி, கூழாங்கல் குளியல்... இதைத்தான் அப்படிச் சொல்றாங்க."

"கூழாங்கல் குளியலா?"

"மழமழப்பான கூழாங்கல்லை சூடு செய்து, அதிலிருந்து வர்ற ஆவியிலே உட்கார வைப்பாங்க... உடம்பு பூரா நல்லா வேர்த்து, கொழுப்பை எல்லாம் கரைச்சிடும்."

"வேணாம்... இந்த விளையாட்டுக்கு நான் வரலை" என்று அவசரமாக மறுத்துவிட்டு, ஒரு கூழாங்கல்லை எடுத்து "லக்ஸ்... என் மேனியின் அழகுக்கு" என்று விளம்பரப் பாணியில் பேசி போஸ் கொடுத்தார்.

"நிறைய வர்க் அவுட் பண்ணிட்டேன். கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக்கணுமே" என்ற

• கண்டேன் ரசிகையை...



வரை, பிரியமுடன் நீச்சல் குளத்துக்கு அழைத்துக் கொண்டு போனார்கள்.

ஸார்... நீங்க ஜிட்டுதானே?"என்று கேட்டபடியே, ஓர் அழகிய இளம்பெண் அணுகவே ஓமக்குச்சி, புல்லரித்துப் போனார்.

"தெலுங்குலே என் பேர் ஜிட்டு" என்று விளக்கம் சொல்லி, ஆட்டோகிராஃப் போட்டுத் தந்தார்.

"ஒரு ஆயிரம் படம் தாண்டியிருப்பீங்களா?" பல்லவி கேட்கவே,

"மூவாயிரம் தாண்டியாச்சும்மா... இப்ப எனக்கு அறுபத்தெட்டு வயசாகுது. பத்து மொழியிலே நடிச்சிருக்கேன். இருந்தாலும் அமிதாப்பச்சனுடன் பெப்ஸி மிராண்டா விளம்பரத்துலே நடிச்சதுதான் மறக்க முடியாத அனுபவம்."

"ஹெல்த் கிளப் போவீங்களா?"

"தினமும் யோகா செய்வேன். நாலு குடம் தண்ணி அடிச்சு, மாடிக்கு எடுத்துட்டுப் போவேன். சைவ சாப்பாடுதான். பி.பி., சுகர் ஒண்ணும் இல்லே!" பெருமையாகச் சொன்னார் ஓமக்குச்சி.

கிளம்பும் நேரம் வந்தது.

"எங்க ஹெல்த் ஸ்டுடியோவுலே மெம்பர் ஆயிடறீங்களா ஸார்... உங்களுக்குப் பிடிச்சிருக்கா?" விஜயகுமார் கேட்டார்.

"இன்னும் ஏதாவது சிறப்பம்சம் இருந்தா சொல்லுங்க... வீட்டுக்குப் போயி யோசிச்சு முடிவெடுக்கறேன்" என்றார் தடபுடல் பந்தாவுடன்.

'அக்வா அரோபிக்ஸ் சொல்லித் தர்றோம். களரி, யோகா, தியானம், ஹெர்பல் மசாஜ் என நிறைய விஷயங்கள் இருக்கு. இது தவிர, டயட்டீஷியன், பிஸியோ தெரபிஸ்ட், ஸ்போர்ட்ஸ் மெடிசினர் இப்படி நிறையப் பேர் உங்களுக்கு சேவை செய்வாங்க. இதெல்லாம் எங்க டைரக்டர் நீனா ரெட்டியோட ஐடியா! ஆரோக்கிய மிருந்தா, தன்னம்பிக்கை இருக்கும். தன்னம்பிக்கை இருக்கிறவனுக்கு எல்லாமே கிடைக்கும்னு அடிக்கடி சொல்வாங்க. அதான், லட்சக்கணக்குலே செலவு செஞ்சு விஞ்ஞானப் பூர்வமான ஹெல்த் ஸ்டுடியோ அமைச்சிருக்காங்க. குறிப்பா, பெண்களுக்கு நிறைய கோர்ஸ் இருக்கு. அதிலும் இங்கே பயிற்சி செய்ய வர்ற பெண்களுக்கு, டயட்டும் தயார் பண்ணிக் கொடுத்துடறதனாலே, ஃபாஸ்டிங், ஃபீஸ்டிங் இரண்டையுமே தவிர்த்துடலாம்."

"நல்ல விஷயம்தான். எனக்கே கொஞ்சம் தொப்பை குறைஞ்சிட்ட மாதிரி தோணுது... ஹய்யா! மாயா... மாயா... மாயா... தொப்பை மாயா!" என்று 'பாபா' ஸ்டைலில் பாடிக் கொண்டே விடை பெற்றார் ஓமக்குச்சி.

— அனுராதா சேகர்

படங்கள் : யோகா

முன்னோர்களுக்கு திதி கொடுக்கும் வழக்கத்தை விட்டவர்களுக்கும் - மறந்தவர்களுக்கும் தம்மை நினைவுகூறும் குடும்பத்தாருக்கு மஹாளயபக்ஷ காலத்தில் பிதுர்க்கள் பூமிக்கு வந்து நல்லாசி வழங்குகின்றனர்.



புண்ணியக்ஷேத்ரம் இராமேஸ்வரத்தில் மஹாளயபக்ஷ அமாவாஸை திதியில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

அன்புடையீர், புரட்டாசி மாத மாளயபக்ஷ அமாவாசையன்று, சர்வ கோடி லோகங்களிலுமுள்ள மஹரிஷிகள் உட்பட அனைத்து ஜீவன்கள், தேவதைகள் அனைவரும் பூலோகத்திற்கு வந்து புண்ணிய நதிக்கரைகளிலும், சமுத்திரங்களிலும், இராமேஸ்வரம் போன்ற புனிதத் தலங்களிலும் தர்ப்பண பூஜையை மேற்கொள்கின்றனர். வசு, ருத்ர, ஆதித்ய, பித்ரு தேவர்களே இந்நாளில் தர்ப்பணம் இடுகின்றனர் என்றால் மாளயபக்ஷ மஹிமை பெரிதன்றோ? நம் மூதாதையர்களான பித்ருக்கள், தாம் நினைத்தபடி யெல்லாம் பூலோகத்திற்கு வர இயலாது. ஆனால், அமாவாஸை, இறந்த திதி, மாதப் பிறப்பு, மாளயபக்ஷ நாட்கள் போன்ற நாட்களில்தான் அவர்கள் பூலோகத்திற்கு வர அனுமதிக்கப்படுகிறார்கள். எனவே அவர்கள் சூட்சும தேகத்தில் பூலோகத்திற்கு வருகின்ற நாட்களில், நாம் பித்ரு தர்ப்பண பூஜைகளை நிறைவேற்றிட, அவர்கள் அவற்றை இங்கு நேரடியாகப் பெற்று ஆசியளிக்கின்றனர்.

மஹாளயபக்ஷ அமாவாஸை திதியில் அன்னதானம் செய்வது வெகு விசேஷமான தொன்றாகும். அது, தர்ப்பணப் பலன்களைப் பன்மடங்காக நமக்குப் பெற்றுத்தரும் என்பதில் எவ்வித ஐய்ப்பாடும் வேண்டாம். இராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். அனைவரும் நலம் பெறுவர்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ சிறியதொகை மற்றும் அரிசி போன்ற உணவு பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கந்தபுராணம் அல்லது பகவத்கீதை புத்தகம் அனுப்பி வைக்கப்படும். ரூ. 5,000 அளிக்கும் அன்பர்களுக்கு கவி-ந்யாய-மீமாம்ஸ சிரோமணி ஸ்ரீமான் திருவெண்காடு டி.கே. முத்துஸ்வாமி சாஸ்திரிகளால் தயாரிக்கப்பட்டு பூஜையில் வைத்த யந்திரம் அன்பர்களின் விருப்பத்திற்கேற்ப எந்த யந்திரம் தேவையோ அந்த யந்திரம் இலவசமாக வழங்கப்படும். ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு அணில் செய்த ஸேவை போல் இந்த லோகக்ஷேமத்திற்கு நம்மால் இயன்றளவில் உபகாரம் செய்திடுவோம். நேரில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் **GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41** என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். புனித ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை என்றென்றும் நாடுகிறோம்.

CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை

GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST

M-11/F-4, TNHB FLATS, I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA

☎: 4900303, 4900603 Fax: (044)4916316 E-mail: gopuradarisanam@yahoo.com

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து

அந்தக் கிழ விவசாயியின் குதிரை ஒரு நாள் எங்கோ ஓடிப் போய்விட்டது. "என்ன துரதிர்ஷ்டம்" என்றார்கள் அக்கம்பக்கத்தினர். "இருக்கலாம்" என்றார் விவசாயி. மறுநாள், ஓடிப் போன குதிரை திரும்பி வந்தது. தனியாக அல்ல இன்னும் மூன்று காட்டுக் குதிரைகளுடன். "அடடா.. என்ன அதிர்ஷ்டம்!" என்றனர் அயலார். "இருக்கலாம்" என்றார் விவசாயி. அடுத்த வாரம் விவசாயியின் மகன், காட்டுக் குதிரை மேல் ஏறி சவாரி செய்ய முயன்றபோது, கீழே விழுந்து காலை உடைத்துக் கொண்டான். "என்ன துரதிர்ஷ்டம்" என்றனர் ஊர் மக்கள். "இருக்கலாம்" என்றார் விவசாயி. மறுநாள் ராணுவத்தில் ஆள் சேர்க்க அரசு ஊழியர்கள் வந்தபோது, விவசாயி மகனின் உடைந்த காலைப் பார்த்து, அவனைச் சேர்க்க முடியாமல் திரும்பினர். அப்போதும் மக்கள், விவசாயியின் அதிர்ஷ்டத்தைப் பாராட்டிப் பேசவே "இருக்கலாம்" என்றார் அவர்.

வாழ்வில் நமக்கு நேரும் நன்மையும் தீமையும், அதிர்ஷ்டமும் துரதிர்ஷ்டமும் நாம் வாழ்க்கையை எடுத்துக் கொள்ளும் விதத்தில்தான் இருக்கிறது.

இது போன்ற குட்டிக் கதைகளைச் சொல்லியே, கூட்டத்தை கட்டிப் போட்டு விடுகிறார் கிரீத் பைஜி.

சமீபத்தில் சென்னை 'டாக்' சென்டரில் நடைபெற்ற கீத ஞான யக்ஞத்தில் சனாதன தர்மம் பற்றி உபன்யாசம் நடத்தினார்.

போர்பந்தரில் பிறந்ததாலோ என்னவோ, சிறு வயது முதலே, காந்தியிடம் ரொம்ப ஈடுபாடு. "எனக்கு ஏதாவது மனக் கஷ்டமோ, பிரச்னையோ ஏற்பட்டால், உடனே பகவத் கீதையை எடுத்துப் படிப்பேன். மனம் தெளிந்து விடும். சஞ்சலமற்ற மனம் கொண்டு, பிரச்னையை ஆராய்ந்தால், தீர்வு உண்டாகும்" என்று தமது 'சத்திய சோதனை'யில் காந்திஜி எழுதியிருந்ததைப் படித்துவிட்டு, 'பகவத் கீதையை'ப் படிக்க ஆரம்பித்தவர், அதன்பின் கீதையைப் பரப்புவதையே தம் வாழ் நாள் லட்சியமாகக் கொண்டு விட்டாராம்.

நாற்பது வயதாகும் கிரீத் பைஜி, வளம் கொழித்த சார்டட் அக்கவுண்டண்ட் தொழிலை உதறிவிட்டு, முழு நேர கீதா பிரசங்கியாகியிருக்கிறார்.

"கீதையில் இல்லாதது உலகில் ஏதாவது இருக்கிறதா என்ன?" என்கிறார் கிரீத்.

— ஆதர்ஷ்





என்ன இல்லை கீதையில்?

வட்டமேஜை



பிடியுங்க 'கலைமாமணி'!

ஆர்ட் காலரிக்குள் நுழைந்து ஆற அமர ரசித்து வெளிவந்த மனத் திருப்தி ஏற்பட்டது. கலையாத கலைப் பொருள் சிறப்பிதழ்.
நெய்வேலி, க.இந்துமதி

நல்ல சிறப்பிதழ். ஆனால் அதை ரசித்துப் படிக்கும் மக்கள் குறைந்து கொண்டே வருகிறார்கள். இங்கு கஞ்சியே பெரும்பாடாக இருக்கும்போது, கலைப் பொருட்கள் மூன்றாம் பட்சமே.
மணப்பாறை, ஆனந்திராஜா

கலைப் பொருள் சிறப்பிதழ் வெளியிட்ட 'கல்கி'க்கு வாசகர் சார்பில் 'கலைமாமணி' விருது வழங்குகிறோம்.
சென்னை, கே.வி.ராமன்

'வீரப்பன் சிரிப்பு' கவலைகளை மறந்து சிரிக்க வைத்தது. 'தேவாரமே இருக்கட்டும்' என்ற வீரப்பனின் விருப்பம், நிஜமான சிரிப்பின் உச்சக் கட்டம்.
திருச்சி, இ.முகம்மது உசேன்

என்னதான் உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்தாலும் அந்த வாழ்க்கை இயந்திரத் தன்மை இல்லாமல் இருந்தால்தான் மகிழ்ச்சியாக இருக்கும் என்பதை எடுத்துக் காட்டிய 'ஒன்பது கிலோ மீட்டர்களும் நிலையற்ற மனசும்' வைட்டமின் சிறுகதை அருமை.
சென்னை, கன்னி. சுப்பிரமணியன்

கல்யாணத்துக்கும் டெரகோட்டா நகைகளே போதும் என்றால், பெண்ணைப் பெற்றவர்கள் ரொம்ப சந்தோஷப்படுவார்கள்.
மதுரை, என். பாலகிருஷ்ணன்

அங்கிங்கென்னாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் எண்ணிலடங்கா காட்டுத்தனமான கட்சிகள் இருக்கும்போது, ஏ.கே. வேங்கட சுப்பிரமணியனின் நல்லெண்ணப்படி 'உள் சுய ஆட்சி' வர வாய்ப்பிருக்கிறதா என்ன? கட்சி சார்பற்ற மனிதர் ஒருவரை நிறுத்திய அனுபவத்தையும் அவரே சொல்லி இருக்கிறார். இன்றுள்ள அவல நிலையில் நல்லவர்கள் துணிந்து நிற்க முடியாத அளவிற்கு வன்முறையும், பணமுறையும் வலுத்திருக்கிறதே. இந்தக் கலியில் நல்லவை எல்லாமே Still born children.
சென்னை, கிருஷ்ண. ராஜ்கோபால்

உச்சநீதிமன்றத்தின் மூலம் நிரந்தர தீர்வு வந்தால் மட்டுமே தமிழகத்திற்கு நிம்மதி கிடைக்கும் என்ற உமது தலையங்க வரிகள் நூற்றுக்கு நூறு உண்மை. அது வரை காவிரி 'பாலிடி(ரி)க்ஸ்' தொடரும்.
திருவாரூர், ஆரூர் பாலநாதன்

'எல்லாம் எமக்குத் தெரியும்' என்ற திருவிளையாடல் வசனத்தைப் போலத்தான் தமிழக முதல்வரின் 'காவிரி விளையாடல்' வசனமும் இருக்கிறது. 'காவிரி பாலிடிக்ஸ்' தலையங்கத்தை ஒரு தடவையாவது முதல்வர் வாசித்தால் வேகத்தோடு விவேகமும் மலர்ந்து யோகம் தரும்.
நெல்லை, ஆர்ஜி.அம்பி

மாறி வரும் மதிப்பீடுகளிலும், ரசனைகளிலும், வாழ்வியல்களிலும் சின்னச் சின்னக் கலைப் பொருட்கள் தத்தம் தனித்துவத்தால் அழகை நிலைநிறுத்திக் கொண்டேயிருக்கிறது என்பதை மிகச் சுருக்கமாக விளங்க வைத்திருந்தார் சீதாரவி. நல்ல எழுத்துக்கள் கூட கலைப் பொருள்தானே?
சென்னை, ஜி. ஸ்வாமிநாதன்



சுகி சிவத்தின் மனைவி ராஜேஸ்வரிக்கு (மகரம்) உற்சாகமான மனநிலை ஏற்படும்.

மேஷம் : உங்களோட சமயோசிதப் புத்தியால உங்களோட எல்லா முயற்சிகளும் இந்த வாரம் வெற்றி பெறும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை உண்டாகும். புதிய முயற்சிகள் கை கூடலாம். சிலருக்கு இடமாற்றம், புதிய பொறுப்புகள் வந்து சேரும். கொடுக்கல் வாங்கலில் பலன்கள் உண்டு. குடும்பத்துல செலவு எகிறும். என்னதான் பொத்திப்பொத்தி வைத்தாலும் செலவு கட்டுக்கடங்காது. இருந்தாலும் தேவைக்கேற்ப பணவசதி கிடைக்கும். சுப காரிய முயற்சிகள் கைகூடும். சொத்து சம்பந்தமான சிக்கல்கள் முடிவுக்கு வரும்.

ரிஷபம் : இதுவரை தாமதமாகிவந்த காரியங்கள் கைகூடும். நண்பர்கள் உறவினர்களிடம் கவனமாகப் பழகுங்க. வீண்பழி ஏற்பட வாய்ப்பிருக்கு. பேச்சில் கடுமை கூடாது. பொறுத்தார் பூமியாள்வார்ங்கற மாதிரி அமைதியாக இருங்க. உடல் ஆரோக்கியத்துல கவனம் வையுங்க. வேலையில் எதிர்ப்புகள் இருந்தாலும் பாதிப்பு ஏற்படாது. கடினமான காரியங்களையும் பொறுப்போடு செயல்பட்டு வெற்றி பெறுவீங்க. கொடுக்கல் வாங்கல்ல லாபம் உண்டு. குடும்பத்துல சுபகாரியங்கள் நடக்க வாய்ப்பிருக்கு. பெண்களுக்கு இது இனிமையான வாரம்.

மிதுனம் : மனசுல தன்னம்பிக்கையும், துணிச்சலும் பெருகும். ஜென்மராசியில் உலவும் சனியின் காரணமாக ஏற்படும் தொல்லைகள், பிரச்னைகள் தெய்வ பலத்தால் சூரியனைக் கண்ட பனிபோல் விலகும். நீங்களே அதிசயிக்கும்படி பேச்சாற்றல் வளரும். பேச்சில் வசீகரம் உண்டாகும். அலுவலகத்தில் புகழ் பாராட்டு உண்டு. மதிப்பு செல்வாக்கு உயரும். புதிய தொழில், வியாபாரத்தில் ஈடுபடும் வாய்ப்பு உருவாகும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. பய

அக்னிசர்மா பக்கம் ● அக்டோபர் 2 முதல் 8 வரை

நடக்கு

ணத்தால் அனுகூலம் உண்டு. சிலருக்கு வீடு கட்டும் அல்லது வாங்கும் யோகம் உண்டு.

கடகம் : இந்த வாரம் உங்களுக்குத் தெய்வ பலம் கூடும். எதிர்ப்புகள் மறையும். எதிரிகள் மறைந்து போவார்கள். பண வசதிக்குப் பஞ்சமில்லை. தாராளமா இருக்கும். வேலையில் அனுகூலமானத் திருப்பம் உண்டாகும். புதிய பொறுப்புகள் வந்து சேரும். அதிக உழைப்பிருந்தாலும் அதுக்கான பலன் உண்டு. வேலை சம்பந்தமாகச் சிலர் வெளியூர் செல்லும் வாய்ப்பிருக்கிறது. வரவேண்டிய பாக்கிப் பணம் இப்போது வசூலாகும். கூட்டாகத் தொழில் செய்கிறவர்களுக்கு முன்னேற்றம் உண்டு. பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

சிம்மம் : இந்த வாரம் தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். புனிதப் பணிகளில் பங்கு கொள்ள சந்தர்ப்பம் வரும். மனத்தில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். அலுவலகத்தில் எதிர்ப்புகள் விலகும். சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் ஆகியவை ஏற்படும். வெளிநாடு போகும் முயற்சி சிலருக்குக் கைகூடும். தொழிற்சாலை, பர்னிச்சர், அச்சகம், புத்தகம், பத்திரிகை மற்றும் வெளிநாட்டுத் தொடர்புடைய தொழில்கள் ஆதாயம் கொண்டு வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சுப செலவுகள் உண்டாகும். மனை, நிலம், வீடு, இந்த வகையில் அளவோடு நன்மை தரும். பெண்களுக்கு உற்சாகமான மனநிலை உண்டாகும்.

கன்னி : மனசுல துணிச்சலும் தன்னம்பிக்கையும் பிறக்கும். சிலருக்குத் திடீர் அதிர்ஷ்டம் உண்டாகும். எடுத்த காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். அலுவலகத்தில் ஒற்றுமை நிலவும். இதனால்

மென்மார்; நடக்கும்!

மகிழ்ச்சி உண்டாகும். வேலை சம்பந்தமாக வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறவங்களுக்குப் பெயர், புகழ் கூடும். சுய தொழில் செய்பவர்கள் வளர்ச்சிப் பெறுவார்கள். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு எதிர்பாராத ஆதாயம் உண்டு. குரு பலம் பரிபூர்ணமாக இருப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்க வாய்ப்பிருக்கு. பெண்கள் தாங்கள் நினைத்ததைச் சாதிப்பார்கள்.

துலாம் : உங்கள் அறிவாற்றல், பேச்சாற்றல் இந்த வாரம் வெளிப்படும். பணவசதி தாராளமாக இருக்கும். மனசுல துணிவு, தன்னம்பிக்கை பிறக்கும். அலுவலகத்தில் உயரதிகாரிகள் பாராட்டுக் கிடைக்கும். அலுவலக சம்பந்தமாக வெளிநாடு போக சிலருக்கு வாய்ப்பிருக்கு. சுயமாகத் தொழில் பண்றவங்களுக்கு அதிர்ஷ்டம் இருக்கு. நீண்ட நாட்களாக இழுத்தடித்துக் கொண்டிருந்த பாக்கித் தொகை இப்போது வந்து சேரும். உணவு வகைப் பொருள்கள், மருத்துவம், கெமிக்கல் மற்றும் ஆடை ஆபரணங்கள் போன்ற துறைகளில் ஆதாயம் உண்டு. குடும்பத்தில் சிறுசிறு பிரச்னைகள் வந்து விலகும். அமைதி காப்பது நல்லது. பயணத்தில் கவனம் தேவை.

விருச்சிகம் : மனசுல இருந்து வரும் சிறு சிறு சஞ்சலங்கள் இப்போ மறையும். உத்தியோகஸ்தர்கள், அலுவலகப் பணியாளர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சிலருக்குப் பதவி உயர்வு, இடமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு. புதிய உத்தியோக முயற்சிகள் கைகூடும். தெளிவான சிந்தனை, துணிச்சல், தன்னம்பிக்கை உண்டாகும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். அலுவலகத்தில் இதுவரை இருந்து வந்த போட்டி, பொறாமை நீங்கும். ஏற்றுமதி இறக்குமதி ஆதாயம் கொண்டு வரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் பொன், பொருள் ஆபரணங்கள் சேர்க்கை நிகழும்.

தனுசு : மனசுல தெளிவும் தெய்வ பலமும் உண்டாகும். மறைமுக நேர்முக எதிர்ப்புகள் விலகும். இதனால் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். குடும்பத்தில் கணவன் மனைவி உறவு நிலை சீரா இருக்கும். சுபகாரிய முயற்சிகள் வெற்றி தரும். மனை, நிலம், ரியல் எஸ்டேட் இந்த வகையில் அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம். சட்டம் காவல் இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயர்வாங்க. பூர்வீக சொத்து விவகாரங்கள் அனுகூலமாகும். வியாபாரிகள் அனுகூலமடைவார்கள். கொடுக்கல் வாங்கல் கைகொடுக்கும். பத்திரிகை ஹோட்டல், எலக்ட்ரானிக்ஸ், உணவுவகை ஆகிய துறைகள் லாபம் தரும். புதிய உத்தியோக முயற்சிகள் வெற்றி தரும். சிலருக்குப் பதவி உயர்வு இடமாற்றம் கிடைக்கலாம்.

மகரம் : இந்த வாரம் உற்சாகமான மனநிலை ஏற்படும். பணவசதி தாராளமா இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்புண்டு. திருமணம் ஆகாதவர்களுக்கு அதுக்கான வாய்ப்பு தேடி வரும். கலைத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு ஆதாயம் உண்டு. உடன்பிறந்தவர்களால் நன்மை இருக்கிறது. அரசு விவகாரங்கள்ல அனுகூலம் உண்டாகும். அரசியல்வாதிகள் முன்னேற்றமடைவார்கள். இதுவரை வராமல் இழுத்தடித்துக் கொண்டிருந்த பணம் இப்பொழுது வந்து சேரும்.

கும்பம் : இந்த வாரம் வீட்ல சந்தோஷம் தாண்டவமாடும். பண வசதிக்குப் பஞ்சமில்லை. பல வழிகளில் வந்து பையை நிரப்பும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உடல் நலம் சீரா இருக்கும். செலவு கட்டுக்கடங்காது. பெண்களுக்கு இந்த வாரம் உற்சாகம் நிறைந்திருக்கும். பிரிந்தவர்கள் ஒன்றுசேரும் வாய்ப்பிருக்கிறது. அலுவலகத்தில் ஒத்துழைப்பு கிடைக்கும். சிலருக்குப் புதிய பொறுப்பு வந்து சேரும். அரசியல்வாதிகளுக்குப் புகழ், பாராட்டு உண்டு. வாரக் கடைசியில் எதிர்பார்த்திருந்த பணம் வந்து சேரும். உங்கள் அறிவாற்றல் திறமை மேன்மையடையும். எவ்வளவு சிக்கல் வந்தாலும் சமயோசிதமா செயல்பட்டு காரியங்களை நிறைவேற்றிடுவீங்க.

மீனம் : இந்த வாரம் சரளமான பணவசதி கிடைக்கும். இதனால மகிழ்ச்சிக்குப் பஞ்சமிருக்காது. வழக்கு விவகாரங்கள்ல அனுகூலமானப் போக்கு தென்படும். அலுவலகத்தில் மதிப்பு, செல்வாக்குக் கூடும். செய்யும் தொழில் தொடர்பாக வெளிநாடு / வெளியூர் போக வாய்ப்பிருக்கு. ஹோட்டல், ஜவுளி, உணவுப் பொருட்கள், கெமிக்கல்ஸ் மற்றும் கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு ஆதாயம் உண்டு. குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். பொன், பொருள், ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்பு உண்டு. பெண்களுக்கு இது உற்சாகமான வாரம்.

சென்னை குரோம்பேட்டையில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, ஒரே, ஓர் அநாதைப் பெண்மணியோடு தொடங்கப்பட்ட 'விச்ராந்தி', 25 ஆண்டுகளைக் கடந்து வந்து விட்டது. இன்று பாலவாக்கத்தில், நூறு முதியோருக்கு மேல் தங்கியிருக்கக்கூடிய வசதிகளுடன் வளர்ந்திருக்கிறது.

'மண்டே சாரிடி கிளப்' என்று சிறிய அளவில் சமூக சேவை செய்யத் தொடங்கிய சாவித்திரி வைத்திக்கு, தங்களுடைய ஓய்வு நேரத்தை உபயோகமாகச் செலவழிக்க முன்வந்த சுமார் இருநூறு குடும்பப் பெண்மணிகள் கைகொடுக்க, உருவான பெரிய திட்டம்தான் ' விச்ராந்தி'. ' விச்ராந்தி' பிறந்த பிறகும், திங்களன்று உறுப்பினர்கள் சந்திக்கும் வழக்கம் இன்னும் மாறவில்லையாம்.

"எங்கள் கிளப்பில் உறுப்பினராக இருந்த ஏவி.எம்.குமரனின் துணைவியார் ரூ. 20,000 நன்கொடை கொடுத்தார். அதை அப்படியே கொடுத்துத்தான் இப்போது இருக்கிற இடத்துக்கான நிலத்தை வாங்கினோம். ஹெல்ப்ஏஜ்-இந்தியா அமைப்பு, முப்பத்தாறு பள்ளிகள் மூலம், கட்டடம் கட்ட நிதி உதவியது," என்கிறார் சாவித்திரி.

'நிழல்' என்ற இவர்களது திட்டத்தில், வீட்டை விட்டு வந்து விட்ட மகளிருக்கு, மூன்று மாதங்களுக்கு இலவசமாக உணவும், தங்க இடமும் கொடுக்கிறார்கள். பிறகு சட்ட உதவி, கௌன்சலிங் எல்லாம் தந்து, குடும்பத்துக்குத் திருப்பி அனுப்பி வைக்கிறார்கள்.

'மலர்ச்சி' பிரிவில், பத்தாவது வகுப்பு வரை படிக்க வைத்துவிட்டு, பிறகு குடும்பத்துக்கு அனுப்புகிறார்கள். பெற்றோரில் அம்மாவோ, அப்பாவோ மட்டுமே இருக்கிற பெண்களுக்குத்தான் இந்தச் சலுகை.

"கிராமத்துப் பெண்கள்தான் அதிகம் வந்து விடுகிறார்கள். பாதுகாப்பு முக்கியம். இங்கே வந்தால் பாதுகாப்பாக இருக்கலாம் என்ற நம்பிக்கையை 'விச்ராந்தி' உருவாக்கியிருக்கிறது," என்கிறார் சாவித்திரி வைத்தி.

உடல்நலம் குன்றிய முதியோரை நர்ஸிங் உதவியோடும் மருத்துவ வசதியோடும் பாதுகாக்க புதிய திட்டம் தொடங்கி இருக்கிறார்கள். இருபது படுக்கைகள் இருக்கின்றன. இதற்கு மட்டும் ஒரு நாளைக்கு இருநூறு ரூபாய் வசூலிக்கிறார்கள். இப்போது ஒன்பது பேர் இந்தப் பிரிவில் இருக்கிறார்களாம். உடல்நிலை தேறிய பிறகு வீட்டுக்கு அனுப்பி விடுகிறார்கள்.

தாம் தினசரி சந்திக்கும் பெண்களின் கதைகளை வருத்தத்துடன் சொல்லுகிறார் சாவித்திரி வைத்தி எந்த விருதையும், பாராட்டையும் எதிர்பார்க்காமல் சமூகத்துக்காக உழைப்பது என்பது எத்தனை பேருக்கு சாத்தியம்?





விச்ராந்தி 25

பப்ளிக் ஹெல்த் சென்டர் - 50





சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன், அன்றைக்கு மத்திய நிதி அமைச்சராக இருந்த டி.டி.கிருஷ்ணமாச்சாரி, தேர்தல் பிரசாரத்துக்காக மேற்கு மாம்பலம் பகுதிக்கு வந்தார். அங்கே சுகாதார - மருத்துவ வசதிக் குறைகளைப் பார்த்து அதிர்ந்து போய் விட்டாராம்!

"எல்லோரும் இலவசமாக எளிதில் மருத்துவ வசதி பெற ஒரு மையம் இங்கே தொடங்க வேண்டும்" என்றார் டி.டி.கே. அப்படிப் பிறந்ததுதான் மேற்கு மாம்பலம் பப்ளிக் ஹெல்த் சென்டர். ஆரம்பிக்கப்பட்டது ஓர் ஓலைக் குடிசையில்! நல்ல வேளையாக, சென்டருக்கு ஒரு தொண்டர் கிடைத்தார். அவர் பெயர் எம்.சி. சுப்பிரமணியம். தமது சக-தொண்டர்களோடு இவர் ஆரம்பித்த மையம், இன்று கிட்டத்தட்ட எல்லாத் துறைகளோடும், இஸிஜி, ஈ.ஈ.ஜி, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், எலிசா ரீடர் என்று ஆலமரமாக வளர்ந்து நிற்கிறது. இலாப நோக்கம் இல்லாததால், கட்டணங்களும் குறைவு.

ரோட்டரி, லயன்ஸ், ரவுண்ட் டேபிள், தொழில்துறை நிறுவனங்கள், வள்ளல்கள் சிலர் என்று நன்கொடை கொடுத்து மையத்தை வளர்த்திருக்கிறார்கள். (நன்கொடையாளர்களுக்கு நன்றி கூறும் தினம் ஒன்று அனுசரிக்கப்படுகிறது!) எந்தவித மருத்துவ வசதியும் இல்லாத இடங்களில் இவர்கள் போய் நடத்தும் மருத்துவ முகாம்கள் ஏராளமான எளியவர்களுக்கு உதவியிருக்கின்றன.

குழந்தைகள் காப்பகம், மனநலம் குன்றியவர்களுக்கான பள்ளி, அவர்களுக்கு வேலை வாய்ப்புப் பயிற்சிகள் அளிக்க ஓர் அமைப்பு எல்லாம் இங்கேயே இருக்கின்றன. யூனிசெஃபில் இதை 'பேபி-ஃப்ரெண்ட்லி ஹாஸ்பிடல்' என்றே பெயர் சூட்டி விட்டார்கள். தாய்மார்களுக்கு ஆலோசனையும், உணவு வகை ஆலோசனையும் மையத்தின் ஸ்பெஷாலிடி. டி.வி.எஸ். குடும்பத்தைச் சேர்ந்த டி.எஸ். சீனிவாசன் நினைவுச் சொற்பொழிவு வருடம்தோறும் நடத்தி, ஒரு நிபுணரின் அருமையான சிந்தனைகளை டாக்டர்களும், பொது மக்களும் அறியச் செய்வது குறிப்பிடத்தக்க பணி.

செப்டெம்பர் 2003 வரை, மாதா மாதம் இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப் போகிறார்களாம். புதிய கட்டடம் கட்டுவது, பட்டமேற்படிப்புக்கு அங்கீகாரம் பெறுவது, என்று சில திட்டங்கள் இருக்கின்றன.

ராஜாஜி, கல்கி, ம.பொ.சி. கி.வா.ஜ., சி.பி. ராமசாமி ஐயர், ஜெயப்பிரகாஷ் நாராயண், தமிழக ஆளுநர்கள் - எல்லோருமே மையத்துக்கு வந்து வியந்து பாராட்டியிருக்கிறார்கள்.

சிவசங்கரி 60

தமது அறுபதாவது பிறந்த நாளை அர்த்தமுள்ளதாகக் கொண்டாடப் போகிறார் சிவசங்கரி.

இன்று நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் எழுத்தாளர்கள் அறுபது பேரின் சிறுகதைகளை இரண்டு தொகுதிகளாக வெளியிடப் போகிறார். மூத்த எழுத்தாளரான லா.ச.ரா. முதல், இன்றைய தலைமுறை சீதா ரவி வரை இந்தத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கிறார்கள். அயல்நாட்டில் வாழும் தமிழ் எழுத்தாளர்கள் கீதா பென்னெட், காஞ்சனா தாமோதரன், அ. முத்துலிங்கம் ஆகியோரின் படைப்புகளும் உண்டு.

கிட்டத்தட்ட பதினெட்டு மாதங்கள் இதற்காகப் பாடுபட்டிருக்கிறார் சிவசங்கரி. கதையை எழுதிய எழுத்தாளரின் வாழ்க்கைக் குறிப்பு, புகைப்படம், முகவரி எல்லாம் தொகுத்திருக்கிறார். கடிதம் எழுதி, நினைவூட்டி, ஒவ்வொன்றாகச் சேர்த்திருக்கிறார்.

"நான் கேட்டுக் கொண்ட அறுபது எழுத்தாளர்களும், அவர்களே தேர்வு செய்து, அவர்களுடைய மிகச் சிறந்த சிறுகதையை அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவர்கள் நெஞ்சங்களிலும், என் நெஞ்சத்திலும், வாசகர்களின் நெஞ்சங்களிலும் இடம் பிடித்த கதைகளை இந்த இரண்டு தொகுதிகளிலும் படித்து ரசிக்கலாம்!" என்கிறார் சிவசங்கரி. முப்பது கதைகளே முந்நூறு பக்கங்களைத் தாண்டி விடுவதால், இரண்டு தொகுதிகளாக வருகிற பதின்மூன்றாம் தேதி வெளியிடுகிறார்.

தன்னைப் பிறர் அடையாளம் காணத் தமது எழுத்துதான் காரணம் என்பதால், தமது வாழ்க்கையின் முக்கியமான கட்டத்தில், இலக்கியத்துக்குத் தமது சமர்ப்பணமாக இவை இருக்கும் என்கிறார். தமது பெருமைக்கும் புகழுக்கும் காரணமான சாவியும், மணியனும் இப்போது இல்லாத சோகம் சிவசங்கரியின் குரலில் தெரிகிறது...

கதைகள் ஒவ்வொன்றும் முத்துக்கள் என்று குறிப்பது போல, ஒரு புதையல் பெட்டகத்திலிருந்து முப்பது முத்துக்கள் கொண்ட மாலை வெளிப்படுகிற மாதிரி புத்தகத்தின் அட்டை ஓவியம் அமைந்திருக்கிறது.

இந்த இரண்டு நூல்கள் தவிர, 'வானதி' திருநாவுக்கரசு, சிவசங்கரியின் சிறுகதைகள் அறுபதைத் தொகுத்திருக்கிறார். இந்தப் புத்தகமும் அன்றே வெளியிடப்படும்.





அகடமி-75





சென்னை மியூசிக் அகடமி 75 வருடங்களை முடித்து பவள விழா கொண்டாடுகிறது.

சென்னையில் காங்கிரஸ் மாநாடு நடந்த போது சங்கீத வித்வான்களும் மியூசிக் அகடமியோடு தொடர்பு கொண்டதும், மாநாட்டில் இசை நிகழ்ச்சிகள் வழங்கியதும் வரலாறு ஆகி விட்டது. துவக்க காலத்தில் அகடமியின் கச்சேரிகள், மயிலை ஆர். ஆர். சபாவில்தான் நடத்தப்பட்டன. பிறகே தற்போதைய கட்டடத்தில் அகடமி இயங்கத் தொடங்கியது. ஜவாகர்லால் நேரு அரங்கத்தைத் திறந்து வைத்தார்.

மியூசிக் அகடமியின் 'சங்கீத கலாநிதி' விருது என்பது திரையுலகின் ஆஸ்கார் விருதுக்குச் சமம். இதனாலேயே ஒவ்வோர் ஆண்டும் இந்தப் பட்டத்தைப் பெறுபவர் பற்றிய ஊகங்களும், கிசுகிசுக்களும் பரபரப்பாகப் பேசப்படும்.

பிளாட்டினம் ஜூபிலியை ஒட்டி, சில இசை நிகழ்ச்சிகளை மியூசிக் அகடமி இந்த ஆண்டு ஏற்பாடு செய்திருந்தது. 'சங்கீத கலாநிதி' விருது பெற்ற சில மூத்த கலைஞர்களின் கச்சேரி, 'வாத்ய மாதுரி' என்ற வாத்தியக் கலைஞர்களின் கச்சேரி இரண்டும் நடந்து முடிந்து விட்டன. நாதஸ்வர இசை விழாவும், தமிழ் இசை விழாவும் நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

காங்கிரசுடன் தொடர்பு இருந்ததாலோ என்னவோ, உட்பூசல்களும், கோஷ்டி கானங்களும், மியூசிக் அகடமியில் வலுத்துக் கொண்டு வருகின்றன. டி.டி. வாசு தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட போது அகடமியின் நிதியைப் பெருக்கி, கட்டடத்தை நேர்த்தியாகப் பராமரித்து எல்லாத் தரப்பினரின் பாராட்டுகளையும் பெற்றார். ஆனால் அவரே தொடர்ந்து தலைவர் பதவியில் ஃபெவிகால் போட்ட மாதிரி ஒட்டிக் கொண்டு செயல்படுவது இப்போது சிலரிடம் வெறுப்பையும் கோபத்தையும் உண்டாக்கியிருக்கிறது.

பவள விழா சமயத்திலாவது பூசல் - கூச்சல் எல்லாவற்றுக்கும் ஒரு மங்களம் பாடி விட்டால் நன்றாயிருக்கும் என்பதே இசை ரசிகர்களின் விருப்பம்.

'குறையொன்றுமில்லை' அடுத்த வாரம்

அல்லயன்ஸ் 100

பதிப்புத் துறையில் நூற்றாண்டைக் கடந்து விட்ட ஒரே தமிழ்ப் புத்தக வெளியீட்டு நிறுவனமான அல்லயன்ஸ் கம்பெனி, இம் மாதம் 18 ஆம் தேதி நூற்றாண்டு விழா கொண்டாடுகிறது.

சோ, வாலி, நடிகர் சிவகுமார், திலகவதி என்று நட்சத்திர பேச்சாளர்களின் சொற்பொழிவுகள் இருக்குமாம். துவக்கக் காலத்தில் தமது நூல்களை வெளியிடக் கொடுத்து உதவிய ராஜாஜியின் வாரிசு தவிர, த.நா. குமாரசாமி, எஸ்.வி.வி., கி.வா.ஜ., தேவன், கா.ஸ்ரீ.ஸ்ரீ., பி.ஸ்ரீ., தி.ஜ.ர. ஆகியோரின் வாரிசுகளும் விழாவில் கௌரவிக்கப்படுகிறார்கள்.

"கு.ப.ரா.வின் நூற்றாண்டு என்பதால், அவருடைய படைப்புகள் அத்தனையும் அன்று வெளியிடுகிறோம். அவருடைய மகன் பட்டாபிராமன் வருவதாகக் கூறியிருக்கிறார். அவரை கௌரவிக்கவும் விரும்புகிறோம்!" என்கிறார் அல்லயன்ஸ் சீனிவாசன்.

இந்த நூற்றாண்டு விழா தொடர்பாக, என்சைக்ளோபீடியா வகையில், நூறு உண்மைகள் கொண்ட நூறு புத்தகங்கள் வெளியிடப் போகிறார்கள். நம்மவர் செய்த விந்தைகள் - 100, உலகப் புகழ்பெற்ற சொற்பொழிவுகள்-100, அரண்மனை ரகசியங்கள்-100, நம்ப முடியாத உண்மைகள்-100, தமிழ் வளர்த்த பெருமக்கள்-100 என்று இவை இருக்கும்.

நேதாஜியின் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்ட பதிப்பகம் என்ற தனிப்பெருமை அல்லயன்ஸ் நிறுவனத்துக்கு உண்டு. இதற்கு அனுமதி அளித்து நேதாஜி எழுதிய 27.12.1937 தேதியிட்ட கடிதம் இவர்களிடம் பத்திரமாக இருக்கிறது!

அந்தக் காலத்தில் சிறுகதைக் கோவை வெளியிட்டவர் அல்லயன்ஸ் ஸ்தாபகர் குப்புசாமி அய்யர். இதனால் நஷ்டம்தான் வரும் என்று பலரும் அவரிடம் சொன்ன போது, "இப்போது சிறுகதை எழுத்தாளர்களை ஊக்குவிக்காவிட்டால், அப்புறம் சிறுகதைக்கு எதிர்காலமே இருக்காது" என்று கூறினாராம்.

பேட்டி, கட்டுரைகள் : **சித்தார்த்**



நீங்க எந்த வகை?



டாக்டர்
எல்.மகாதேவன்



தேவ மருந்து-10

வாதபிரக்ருதி ஆட்களாக இருந்தால், கீழ்க்கண்ட குணங்கள் விசேடிமாகக் காணப்படும். எனவே, வாசக அன்பர்களே, இந்தப் பட்டியலை முழுவதும் படித்து, உங்களுக்குப் பொருந்தும் காரணிகளை மட்டும் '✓' செய்து கொள்ளுங்கள். இதை வைத்து நீங்கள் இந்தப் பிரிவுக்குள் எந்த அளவுக்குப் பொருந்துகிறீர்கள் என்பதைக் கணிக்கலாம்.

	எனக்குப் பொருந்தாது	எப்போதாவது பொருந்தும்	சில சமயம் பொருந்தும்	அநேகமாக பொருந்தும்	மொத்த மதிப்பெண்
மதிப்பெண்	0	1	2	3	
பாகம் 1. வாதபிரக்ருதி					
1. எனது உடல்கட்டு மெலிந்திருக்கிறது.					
2. சதைப் பற்று மெலிந்துள்ளது.					
3. எலும்புகள் மெலிந்தவை. இணைப்புகள் தெளிவாகத் தெரியும்.					
4. எவ்வளவு முயன்றாலும் சதை போடாது.					
5. கண்கள் கூர்மையானவை, சிறியவை.					
6. சருமம் வறட்சியாக இருக்கும்.					
7. சருமத்தின் நிறம் கறுப்பு.					
8. முடி கறுப்பாக, மென்மையாக இருக்கும்.					
9. பொதுவாக உஷ்ணமான காலநிலை எனக்குப் பிடிக்கும். சூரிய ஒளியும் எனக்கு நல்லது.					

10. சீக்கிரம் பசி ஏற்பட்டுவிடும். ஆனால் குறைவாகவே சாப்பிடுவேன்.					
11. ஒழுங்காக மலம் போவதில்லை. மலம் கட்டியாக உலர்ந்து இருக்கும். மலச்சிக்கல் உண்டு.					
12. ஜீரண சக்தி சில சமயம் நன்றாக இருக்கிறது. சில சமயம் இல்லை.					
13. ஒழுங்குமுறையான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடிவதில்லை.					
14. ஓயாத சிந்தனையாளன்.					
15. எப்போதும் சுறுசுறுப்பாக இருக்க விரும்புகிறேன்.					
16. மனத்தை அடிக்கடி மாற்றிக் கொள்கிறேன்.					
17. மன உளைச்சலின்போது பயமும் கவலையும் ஏற்படுகிறது.					
18. நிறைய கனவுகள் காண்கிறேன்.					
19. இனிப்பு, புளிப்பு, உப்பு சுவையுள்ள ஆகாரங்கள் பிடிக்கும்.					
20. நொறுக்குத் தீனி பிடிக்கும்.					
21. கை, கால்கள் குளிர்ந்திருக்கின்றன.					
22. காய்ச்சல் வரும்போது உடல் வலியும் இருக்கிறது					
23. இலேசான உறக்கம்தான் வருகிறது.					
24. எனக்காக பணம் செலவழிப்பதைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை.					
25. நகங்கள் விரைவில் உடைந்து விடுகின்றன.					
26. மனத்தில் மாறிமாறி விருப்பமும், வெறுப்பும் தோன்றுகிறது.					
27 கை, கால்களில் வெடிப்புகள் அதிகம் இருக்கின்றன.					
28. நண்பர்களை அடிக்கடி மாற்றிக் கொள்கிறேன்.					
29. உடல் உறவுபற்றி விதவிதமான கற்பனைகளும் எண்ணங்களும் உண்டு.					
30. நாடித் துடிப்பு வேகமாக அடிக்கிறது. இலேசாக இருக்கிறது. அடிக்கடி மாறுகிறது.					
மொத்த மதிப்பெண்கள்					

வாதப்பிரக்ருதி மனிதர்களைத்தான் நடைமுறையில் நாம் அதிகம் பார்க்கிறோம். மொத்த மதிப்பெண்களையும் கூட்டிப் பாருங்கள். அடுத்ததாக வரவிருக்கும் பித்த, கப பாகங்களில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் இது போன்றே மதிப்பெண் கொடுத்துப் பாருங்கள். எந்த பாகத்தில் (வாதம், பித்தம், கபம்) நீங்கள் அதிக மதிப்பெண் பெற்றிருக்கிறீர்களோ, அதுதான் உங்கள் பிரக்ருதி என்பது உறுதியாகும்.

மாறுமா டாக்டர்?

கேள்வி : நாம் உண்ணும் காய்கறி, பழம், தானியம், பால், தயிர் போன்றவற்றின் ருசியும், குணமும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும் இந்தச் சூழலில், ஆயுர்வேத மருந்துகள், அந்தக்கால பலனையே தருமா?

- டீ.எஸ்.டீ. ராயன், மயிலாடுதுறை

பதில் : பூச்சிமருந்து, ரசாயன உரம், மாசுப்பட்ட சூழல் போன்ற காரணங்களால், இயற்கையான உணவுப் பொருட்களின் வீரியம் சற்று குறையலாமே தவிர, அவற்றின் அடிப்படை தாரமும், மருத்துவப் பலனும் மாறாது.



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. போன்: 276 0612.

City Office: No.7, முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன்: 371 4942.

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 180 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (180 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு.	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் / வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான <u>தீபாவளி</u>, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.


இறைவன் தொண்டில்

சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் (நிறுவனர்) சுவாமி ஸ்ரீ பாலகிருஷ்ணானந்தா

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு

பொய்யி

வாஸந்தி



சினேகாவின் முகமே மாறிவிட்டது. பிஸ்மில்லா கானுடைய ஷெஹனாய் வாத்தியத்தின் ஒலி, நடுக் கூட்டத்திலிருந்த மியூஸிக் ஸிஸ்டத்திலிருந்து அந்த பிரும்மாண்ட மாளிகையின் அறைகளிலெல்லாம் சாம்பிராணி புகைபோல சுகந்தமாகத் தவழ்ந்து, வெளித் தாழ்வாரத்துக்குப் பயணம் செய்து, வாயிலில் இருந்த அகண்ட புல்வெளியில் புல்லுக்குச் சேதமில்லாத வகையில் நின்று பூத்தோரணம் கட்டிக் கொண்டிருந்த பணி ஆட்களின் செவிகளில் விழுந்தது. புதிதாக ஒரு மங்கலப் போர்வை போர்த்தி வளாகமே களைகட்டியிருந்தது.

சகுந்தலாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. சினேகாவின் முகத்தில் இருந்த மாறுதல்களைக் கண்டு. ஜரிகை வேலைப்பாடு செய்யப்பட்ட இளஞ்சிவப்பு ஜார்ஜெட் மேலாடை தலையைப் போர்த்தியிருக்க, வெட்கம் கலந்த புன்னகையுடன் மறுதோன்றியிடப்படுவதற்காகக் கைகளை நீட்டியபடி அமர்ந்திருந்தாள். முழங்கை வரை ஒரு கை முடிந்திருந்தது. இடது கையில் மறுதோன்றி இடும் பெண் வெகு லாகவமாக வரைந்து கொண்டு போனாள். கொடிகள், மலர்கள், கிளிகள், கண் சொடுக்கும் நேரத்தில் ஆவாகித்தன. வேகமாக, சீரான கோடுகளில் அமர்ந்தன. மறுதோன்றி இடும் பெண்கள் இன்னும் சிலர், வந்திருந்த பெண்களுக்கு இட்டுக் கொண்டிருந்தனர். அவளைக் கண்டதும்

புத்த நிஜம்



சினேகா மகிழ்ச்சியுடன், "ஹாய் சக்கு! நீயும் மெஹந்தி வெச்சுக்கோ!" என்றாள்.

"ஹாய் சக்கு!" என்றான் கதிர் அவளைப் பார்த்து. மறுதோன்றி இடுவதற்காகக் கையை நீட்டிய நிலையில் சகுந்தலா அவனைத் திரும்பிப் பார்த்து சிரித்தாள்.

"ராஜகுமாரன் மாதிரி இருக்கே!" என்றாள்.

"ராஜகுமாரனாவே ஆயிட்டதா எனக்குத் தோணுகிறது" என்று அவன் சிரித்து, சினேகாவைப் பார்த்து ஒரு முத்தத்தை வீசிவிட்டு அகன்றான். சினேகா கன்னிகழியாத பெண்போல முகம் சிவந்தாள். சித்திகளும், அத்தைகளும், பாட்டிகளும் ஏகமாய்ப் பரிகாசம் செய்ய, ஒரு பெண் டோலக்கைத் தட்டிப் பாட ஆரம்பிக்க, எல்லாரும் சேர்ந்து கொள்ள, பிஸ்மில்லாகானின் ஷெஹ்னாய் அடங்கிப் போயிற்று.

சினேகாவும் கதிரும் ஒரு வருஷமாக சேர்ந்து வாழ்வது இவர்களுக்குத் தெரியாமல் இருக்காது. தங்களது வழிக்குக் கடைசியில் அவர்கள் இணங்கி வந்தது இவர்களுக்கு சந்தோஷமளித்திருக்க வேண்டும். அதற்கான கொண்டாட்டமே இது. அவர்களது உறவை சடங்கின் மூலம் புனிதப்படுத்துவதாக இவர்கள் நினைக்கலாம். நாங்கள் எல்லாரும் அந்த பந்தத்துக்கு சாட்சிகள் என்பதுபோல — எந்த இக்கட்டிலும் சாட்சி சொல்ல நாங்கள் இருக்கிறோம் என்பதுபோல.

மறுநாள் ரிஸெப்ஷனுக்கு விவேக் வந்திருந்தான். சகுந்தலாவைப் பார்த்துப் பெரிய புன்னகையுடன் அருகில் வந்தான். அவளை ஃபோனில் அடிக்கடி கூப்பிட்டுப் பேசினாலும் நேரில் பார்த்து நாளாகியிருந்தது. இதுவரை அவன் அவளுக்கு எத்தனைப் பக்கபலமாய் இருந்து வந்திருக்கிறான் என்கிற நினைப்பு அவனை நேரில் காணும்போது நெகிழ்ச்சியை அளித்தது.

"ஹாய்! புடைவையிலே ரொம்ப அழகா இருக்கே!" என்றான். "இந்த அரக்கு உனக்கு ரொம்பப் பொருத்தமா இருக்கு."

"தாங்க்ஸ்" என்றாள் அவள் மகிழ்ச்சியுடன். "இது ராஜாவுடைய செலக்ஷன். ஒரு தடவை மைசூருக்கு அவன் போகல்லே? அப்ப வாங்கிண்டு வந்தான்."

"ஓ! ராஸ்கலுக்கு அப்ப நல்ல டேஸ்ட்தான்" என்றான் விவேக் இலேசாக. பிறகு எதேச்சையாகக் கேட்பதுபோல "ஏதாவது தகவல் உண்டா?" என்றான்.

"அவன்கிட்டேயிருந்து எனக்கா?" என்றாள் சகுந்தலா. "சான்ஸே இல்லே."

"நினைவு மெல்ல மெல்லத் திரும்பலாம்னு டாக்டர் சொன்னார் சக்கு."

"டாக்டர் தெய்வமில்லே" என்றாள் சகுந்தலா மென்மையாக. அவளைவிட விவேக்தான் அதிகமாக ராஜாவின் மறதிக்காக வேதனைப் படுவதுபோல இருந்தது. "நினைவு திரும்பலாம் என்பது அவரது ஊகம், நம்பிக்கை. எனக்கு நம்பிக்கை போய் ரொம்ப நாளாச்சு விவேக்."

"ஓ, சக்கு!" என்று விவேக் அவள் தோளை ஆதரவாக அணைத்தான்.

"நா அழமாட்டேன். பயப்படாதே. ஒரு வேடிக்கை தெரியுமோ? அன்னிக்கு நீயும் நானும் அவனை கெஸ்ட் ஹவுஸிலே பார்த்தமே, அன்னிக்குதான் எனக்கு துக்கமும் அழுகையும் வந்தது. ரொம்ப அநியாயமா நா ஏமாற்றப்பட்ட மாதிரி கோபம் வந்தது. நாம் திரும்பும் போது நீ சொன்னே, உணர்ச்சிவசப்படாம மூணாம் மனுஷியா யோசிச்சுப் பார்த்தா ராஜாவுடைய பிரச்னை புரியும்னு. தினமும் யோசிச்சுப் பார்க்கும்போது நீ சொன்னது சரிதான்னு தோண ஆரம்பிச்சது."

விவேக் புன்னகையுடன் சொன்னான். "நா சொன்னதாலே இல்லே. நீயே யோசிச்சு அந்த முடிவுக்கு வந்திருப்பே. நீ ரொம்ப தைரியசாலி சக்கு."

26

"அதெல்லாம் ஒரு மண்ணும் இல்லே. சின்ன வயசிலேந்து எனக்கு எதிர்நீச்சல் போட்டே வழக்கமாயிட்டது. விதிக்கு என்னோட விளையாடறதே வேலையாப் போச்சு."

"விதியிலெல்லாம் எனக்கு நம்பிக்கை யில்லே!"

"என் வாழ்க்கையிலே நடக்கிற, எனக்குப் புரியாத விஷயங்களுக்கு நா விதின்னு பெயர் வைச்சிருக்கேன். ஏன் இப்படி நடந்தது, ஏன் நடக்கிறது, என்ன தப்பு பண்ணேன் இப்படி ஒரு தண்டனை கிடைக்கங்கற கேள்விக்கு பதில் கிடைக்காதபோது அதுக்கு என்ன பெயர் சொல்லுவே?"

"கேள்வி கேக்கறதுதான் தப்பு சக்கு! கேள்வி கேட்டேன்னா விளக்கம் வேணும். விளக்கம் கிடைச்சா காரணம் வேணும். பாவம், புண்ணியம், பிராயச்சித்தம்னு நம்ம சமாதானத்துக்காகச் சொல்லலாம். ராஜாவுக்கு ஏற்பட்டது ஒரு மருத்துவ பிராப்ளம். அத்தைப் பாட்டி மாதிரி பேசாதே."

சகுந்தலா சிரித்தாள். "ஆமாம், நீ சொல்றது சரிதான். வரவர நா என் பாட்டி மாதிரி யோசனை பண்றேன்னு நினைக்கிறேன்."

"ஏன், வேலைக்குப் போறியோ இல்லையோ?"

"பின்னே? அதை விட்டுட்டா நானும் பரத்தும், நடுத்தெருவிலே நிக்க வேண்டியதுதான்."

"அந்த சரவணனைக் கொஞ்சம் பயமுறுத்தினா, சில லட்சங்கள் உனக்கு ஒதுக்கி வைக்கலாம்."

"சே, அப்படிப்பட்ட கேவலத்துக்கு நா இறங்க மாட்டேன். பயமுறுத்தணும்னா, ராஜா சென்னைக்குக் கிளம்பறதுக்கு முந்தியே பயமுறுத்தியிருக்கலாம். அன்னிக்கு பர்ஃபெக்ட் ஸீனாக இருந்தது. உனக்கு நினைவு இருக்கா, அன்னிக்கு என்னைப் பார்க்கவே ராஜா கூச்சப்பட்டான். நா என்னவோ இன்னொருத்தனுடைய மனைவி மாதிரி. துஷ்யந்தன் அப்படித்தான் சகுந்தலை குழந்தையோடு நின்னப்ப நினைச்சானாம்."

"சக்கு, ப்ளீஸ். மகாபாரத காலத்திலேயே நிக்காதே!"

அவள் சிரித்தாள். "மனுஷனுடைய கதை ஏற்கெனவே சொல்லப்பட்ட கதை, விவேக். எதுவுமே புதுசா நடக்கல்லே."

"தாங்க்யூ பாட்டி" என்று விவேக் கைகூப்பினான். "நான் நிகழ்காலத்தில் வசிப்பவன்."

எதிர்த்தாற்போல் இருந்த புல் தரையில் சமேலி பரத்துக்கு விளையாட்டுக்காட்டியபடி அமர்ந்திருந்தாள். அவள் "ஆஜா ஆஜா" என்று கையசைத்துக் காட்ட பரத் சிரித்தபடி அவளருகில் ஓடி வந்தான். அவள் கையுடன் கொண்டுவந்திருந்த அவனது உணவை கொடுத்துக் கொண்டிருந்தாள்.

விவேக் வியப்பும் சந்தோஷமுமாய்ப் பார்த்தான்.

"அட.. பரத் நடக்க ஆரம்பிச்சாச்சா?"

"ஆமாம்" என்றாள் சகுந்தலா பெருமையுடன். "ஒரு வாரமா. எனக்கென்னவோ இதுவரை எந்தக் குழந்தையும் செய்யாத சாகஸத்தை அவன் செய்யற மாதிரிஇருக்கு."

விவேக் சிரித்தான். "எல்லா அம்மா அப்பாக்களும் அப்படித்தான் நினைப்பாங்க."

சற்று நேரம் இருவரும் ஏதும் பேசவில்லை. பரத்தைப் பார்த்தபடி நின்றார்கள்.

"விவேக், நா ஒரு கேள்வி கேக்கலாமா?"

"கேளேன்."

"நீ ஏன் சிங்கிளாவே இருக்கே?"

"எனக்குப் பிடிச்ச மாதிரி யாரும் கிடைக்கல்லே."

"எத்தனை பேரோடப் பழகறே, யாரு மேலா பிடிக்கல்லே?"

அவன் உதட்டைப் பிதுக்கினான் "லைஃப் பார்ட்னரா இருக்கும்படியா எனக்கு யாரும் கிடைக்கல்லே. எனக்குள்ள இருக்கிற குறையா இருக்கலாம் அது."

அவன் விளையாட்டாகச் சிரித்தான். "நா தேடறேன். சொல்லு, உனக்கு எப்படி இருக்கணும்?"

"சுமாரா உன்னை மாதிரின்னு வெச்சுக்கயேன்!"

அவள் புருவத்தை உயர்த்தி சிரித்தாள். "கஷ்டம்! என்னை மாதிரி இன்னொருத்தி கிடைக்கமாட்டா!"

"டாக்டர்.. எங்க வீட்டு வாஷிங்மெஷின் மயக்கம் போட்டு கீழே விழுந்திட்டுது.. உடனே வர்றீங்களா?"

"என்னம்மா உளர்றீங்க?"

"உளரலை டாக்டர்.. காலையிலிருந்தே தலை சுற்றலா இருக்குன்னு சொல்லி அவர் ஆபீசுக்குக் கூடப் போகலை!"

— புளியரை கணேசன்

அவன் தோளைக் குலுக்கி உதட்டைச் சுழித்து "அப்ப கஷ்டம்தான். இப்படியே இருந்துட்டுப் போறேன் போ. ஐ ஆம் ஹாப்பி!"

இருவரும் சிரித்தார்கள்.

யாரோ ஒருத்தர் வந்து "கானா தையார் ஹை, ஆயியே!" என்று அழைத்தார். இருவரும் புஃபே சாப்பாட்டுக்குச் சென்றார்கள். ஷெஹ்னாய் வாத்தியம் மெலிதாகப் பின்னணியில் கேட்டுக் கொண்டிருந்தது. அங்கு பரத்தப்பட்டிருந்த சாப்பாட்டு வகையைப் பார்த்து அவள் அசந்து போனாள்.

"ஆறு மாசத்துக்கு முந்தி நினைச்சிருப்பியா விவேக், சுதிர் இப்படிக் கல்யாணம் செஞ்சுப்பான்னு!"



"எல்லார் சித்தாந்தமும் ஆடிப்போச்சு, உனக்கு ஏற்பட்ட அனுபவத்திலே!"

"உன்னுடையதுமா?"

அவன் இல்லை என்பது போலத் தலையசைத்தான். "என்னைக் கேட்டா இந்தச் சடங்கு தேவையில்லேம்பேன். ஆனா எந்த கால கட்டத்திலேயும் இது தப்பு அது தான் சரின்னு எப்படிச் சொல்ல முடியும்? நீ சேர்ந்து வாழப் போற நபருடைய கருத்துக்கும் நீ மதிப்பு கொடுக்கணும். சினேகா பயந்ததாலே சுதிர் ஒப்புக் கொண்டான்."

"இதையெல்லாம் அவனே இப்ப ரசிக்கிற மாதிரி இருக்கு" என்று சகுந்தலா சிரித்தாள்.

"பின்னே? இன்னிக்கு ஹீரோ அவன் தான்! நீயும் ராஜாவும் இப்படிக் கல்யாணம் பண்ணிண்டிருந்தா, இந்த ஷெஹ்னாய் வாத்தியத்தை அவன் கேட்கும்போது ஞாபகம் வந்திருக்கும். டாக்டர் சொன்னார், சில சமயம் சங்கீதம் ஞாபக அலைகளை எழும்பும்னு!"

"நடக்காததைப்பத்தி இப்ப என்ன பேச்சு?" என்றாள் அவள் திமீர் அலுப்புடன்.

"ஸாரி" என்றான் விவேக். அவன் ஏதோ சொல்லத் தயங்குபவன் போலிருந்தது.

"ஏதாவது கேள்விப்பட்டியா அவனைப் பத்தி?" என்றாள் அவள். குரல் அவள் அடக்கப் பார்த்தும் படபடத்தது.

"குல்ஃபி வேணுமா, ஐஸ்க்ரீம் வித் ஹாட் ஜிலேபி வேணுமா?" என்றான் அவன்.

"குல்ஃபி" என்றாள் அவள்.

"குட்! எனக்கும் அதுதான் வேணும். நா கொண்டுவரனே இரு" என்றுவிட்டு அவன் விரைந்தான். மார்பு ஏன் படபடக்கிறது என்று புரியாமல் அவள் காத்திருந்தாள். அவன் இரண்டு ப்ளேட்களில் குல்ஃபியும் ஸ்பூனுமாக வந்தான். "ஏதாவது விஷயமிருந்தா இப்பச் சொல்லாதே" என்றாள் அவள். "சமேலிக்குச் சாப்பாடு கொண்டு போய்க் கொடுக்கணும். இந்தக் குல்ஃபி ஒழுங்கா உள்ளே போகணும்."

அவன் மென்மையாகச் சிரித்தான்.

"பூகம்பத்தை ஏற்படுத்தப்போற விஷயம் எதுவுமில்லே."

"எதுவானாலும்."

அவள் நிதானமாக குல்ஃபியை ரசித்துச் சாப்பிட்டாள். பட்டும் வைரமுமாக மின்னும் உயர்மட்ட நவ நாகரிகக் கும்பலில் தான் ஒரு பரதேசியைப் போல நிற்பதாகத் தோன்றிற்று. சினேகா இத்தனைப் பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவள் என்று அவளுக்குத் தெரியாது. ராஜாவின் குடும்பத்தைப் பற்றியே அவளுக்குத் தெரியாது. அவனுடைய பெற்றோர்கள் பெரும் பணக்காரர்களாக இருக்கலாம். அவர்கள் கண்ணுக்கு அவள் பரதேசியைப் போலத் தோற்றமளித்திருக்க வேண்டும். அதனால்தான் அத்தனை சுலபமாக அவளைக் கடாசிவிட்டுப் போக முடிந்தது. அவள் குல்ஃபியை முடித்துவிட்டு, 'சமேலிக்குச் சாப்பாடு எடுத்து வரேன். நீ புல்வெளிக்குப் போ' என்று விவேக்கிடம் சொல்லிவிட்டு சமேலிக்கு அவன் சாப்பிட்டிருக்க முடியாத பதார்த்தங்களை ப்ளேட்டில் அடுக்கிக் கொண்டு போனாள். விவேக் பரத்திடம் விளையாடிக் கொண்டிருந்தான். சமேலி விரிந்த விழிகளுடன் "இவ்வளவா!" என்று கூவியபடி சாப்பாட்டை வாங்கிக் கொண்டாள். "நீ சாப்பிடு சமேலி, அப்புறம் ஐஸ்க்ரீம் கொண்டுவந்து தரேன்" என்று சொல்லி விட்டு விவேக்கிடம் "நாம கொஞ்

சம் நடந்துட்டு வரலாம் வா'' என்றாள். விவேக் பரத்தைத் தூக்கிக் கொள்ள இருவரும் நடந்தார்கள்.

"இப்பச் சொல்லு!"

"ஒண்ணும் பெரிய விஷயமில்லே சக்கு. எனக்குத் தெரிஞ்ச மதராசிப் பையன் ஒருத்தன் இங்கே இருக்கான். அவன் ராஜாவைப் பார்த்திருக்கான். அவனுக்கு ராஜாவுடைய ப்ராப்ளம் தெரியும். அவன் ஒரு கல்யாணத்துக்காக சென்னைக்குப் போயிருந்தான். ராஜாவும் அவனுடைய அப்பாவும் அம்மாவும் கல்யாணத்துக்கு வந்திருந்தார்களாம். ராஜாவுக்குத் தன்னை அடையாளம் தெரியாதுன்னு இவன் போய் பேசல்லே. ராஜாவுக்கு ஏதோ கல்யாணப் பேச்சு நடந்தாப்பலே இருந்ததுன்னான்."

அவன் சற்று நிறுத்தினான், அவன் ஜீரணித்துக் கொள்ளக் காத்திருந்தவன் போல. இதயம் வெகு வேகமாக அடித்துக் கொள்வதைத் தடுக்க முடியாத பலவீனத்துடன் அவள் நின்றாள். செவி மடல்கள் சூடேற மேல் உதட்டில் வியர்வை அரும்பு கட்ட அவள் கேட்டாள்.

"அப்புறம், வேற என்ன சொன்னான்?"

"பேச்சு ஒண்ணும் முடிவடையல்லே போலிருக்குன்னான். பெண் வீட்டுக்காரங்க ரொம்பப் பணக்காரர்கள், ராஜாவுடைய அம்மாவும் அப்பாவும் ரொம்ப ஆர்வமா இருக்கிற மாதிரி பேசிக் கொண்டதாகச் சொன்னான்."

"ராஜா? அவன் என்ன சொன்னான்?" அவள் குரலிலிருந்த நடுக்கத்தைக் கண்டு, விவேக், அவள் தோளை அணைத்து, "ரிலாக்ஸ், சக்கு, ராஜா எதுவும் பதில் சொல்லல்லே போலேயிருக்கு. அதனாலேதான் பேச்சு ஒண்ணும் முடிவாகல்லே"_ என்றான்.

"நா உனக்குச் சொல்ல வேண்டாம்னு நினைச்சேன். நீயே அன்னிக்கு சொன்னே, அவனுக்கு அவர்கள் கல்யாணம் செய்து வைக்க முயன்றால் நீ ஆச்சரிப்படமாட்டேன்னு சொன்னே. தைரியசாலி மாதிரி பேசறே, நிச்சயமில்லாத ஒரு சேதிக்குக்கூட எப்படி கலங்கறே பாரு."

அவள் பதிலே பேசாமல் சில விநாடிகள் நின்றாள். தன் உணர்ச்சிகளை மறைத்துக் கொள்ள, "நா சமேலிக்கு ஐஸ்க்ரீம் கொண்டு வந்து தரேன்" என்று அவள் நகர்ந்தாள். ஒரு ஜடத்தனத்துடன் இனிப்பு வழங்கும் இடத்திற்குச் சென்று ஐஸ்க்ரீமும் சூடான ஜிலேபியும் வாங்கிக் கொண்டு நன்றியும் ஆவலுமாக நீண்ட சமேலியின் கரங்களில் வைத்து "சாப்பிடு" என்று புன்னகைத்தாள்.

விவேக்கைச் சென்று அடைந்தபோது மார்பின் படபடப்பு அடங்கியிருந்தது.

"ஆர் யூ ஓ.கே?" என்றான் அவன்.

"ஃபைன்!" என்று அவள் சிரித்தாள்.

"நா எதுக்காக இந்த விஷயத்தை உனக்குச் சொன்னேன்னா, நீ இதுக்கெல்லாம் உன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளணும்ங்கிறதுக்காக" என்றான் அவன் மிருதுவாக.

"எனக்குப் புரியிறது' என்றாள் அவள் நிதானமாக. "அவனுக்குக் கல்யாணம் நடந்தாலும் சட்டப்படி அவனை நா சாலஞ்சு செய்ய முடியாதுன்னும் எனக்குத் தெரியும்."

"அதுக்கெல்லாம் துணிஞ்சுதான் இந்த உறவுக்கு நீ சம்மதிச்சிருப்பே சக்கு!"

"உண்மைதான்."

"அதனாலே, நிதானமா, யோசித்து எதிர்காலத்தைப் ப்ளான் பண்ணு. ராஜா, உனக்கு மோசம் செஞ்சுட்டுப் போயிட்டதா நீ நினைக்கக் கூடாது."

"நா நினைக்கல்லே."

"குட்! எப்படி வந்தே நீ இங்கே? உன் காரிலேயா?"

"இல்லே, சினேகா கார் அனுப்பியிருந்தா."

"அப்ப நா டிராப் செய்யறேன் வா. சினேகாவுக்கு நா தகவல் சொல்லிடறேன்."

அவள் நிம்மதியுடன் அவனுடன் கிளம்பினாள். பரத் தூங்கிவிட்டிருந்தான். வழிநெடுக விவேக் அவளுக்கு சமாதானமாகப் பேசிக் கொண்டு வந்தான். நான் உனக்கு ஒரு நண்பன் இருக்கிறேன் என்று தைரியம்

தும்பிக்கை தத்துவம்!

அந்த குடும்பத் தலைவர் பெயர் சாமி. வயது 62. தனது 15வது வயதிலேயே யானைப் பாகனாக மாறிவிட்டதாக சாமி கூறுகிறார். இவருக்கு நான்கு மகன்கள். நால்வரும் குருவாயூர் தேவசம் போர்டுக்குச் சொந்தமான நான்கு யானைகளின் பாகன்கள். இவரது மருமகன்கள் இருவரும் யானைப் பாகர்கள்தான்.

''யானையை எப்போதும் அன்பால் அடக்கிவிடலாம் என்று நினைக்கக் கூடாது. கொஞ்சம் பயமும் யானைக்கு நம்மிடம் இருக்க வேண்டும். ஆனால் எடுத்ததற்கும் தொடுத்ததற்கும் எல்லாம் கோபப்படுபவர்களால் நல்லதொரு யானைப் பாகனாக இருக்க முடியாது.

யானைக்கு திடீரென மதம்பிடிக்காது. யானையைக் கவனித்து வந்தால், அது கோபப்படப்போகிறது, கலாட்டா பண்ணப் போகிறது என்பது தெரிந்து விடும். அப்போது யானையை நைசாக மிரட்டிக் கட்டிப் போட்டுவிட வேண்டும்" என்கிறார் சாமி.

பலருக்கும் யானைகள் வாங்க பீகார், உத்தர பிரதேசம், அந்தமான் போன்ற மாநிலங்களுக்கும் இவர் பலமுறை சென்று வந்துள்ளார். நாலு யானைகளைச் சொந்தமாக வாங்கி யானைப் பாகன் – கம் யானை அதிபராகவும் மாறி உள்ளார்.

"நூறு தடவை சொல்லி, ஆறு தடவை மிரட்டி, ஒரு தடவை அடிக்க வேண்டும். அப்போதுதான் யானை நம் கட்டுப்பாட்டில் இருக்கும்" என்பது சாமியின் யானைத் தத்துவம்.

– திருவனந்தபுரம் எஸ்.எஸ். மணி



சொல்வதுபோல.

"ரொம்பக் குறைவான பேருக்குதான் வாழ்க்கை ஒரே சீராகப் போகும். எத்தனைக் குடும்பங்கள்லே நம்ப முடியாத நிகழ்வுகள் ஏற்படுகிறதுன்னு நமக்குத் தெரிய வரதில்லே. உனக்கு ஏற்பட்டது போல நம்ம புத்திக்கு உட்பட்டு எதுவுமே செய்ய முடியாத இக்கட்டுகள் ஏற்படுகின்றன. எங்க மாமாவுக்கு ஒரே பிள்ளை. மரீன் இன்ஜினியரிங் படிச்சு ஒரு கப்பல் கம்பெனியிலே வேலைக்குச் சேர்ந்தான். இருபத்துமூணு வயசு. சூதுவாது தெரியாத குழந்தை. கப்பல்லே போனவன் வீட்டுக்கே வரல்லே. கப்பலே காணாம போயிட்டது. ரொம்ப நாள், ரொம்ப வருஷம் எங்க மாமா அவன் வருவான்னு எதிர்பார்த்திருந்தார் பாவம். இதெல்லாம் ஏன் நடக்கிறது? சில பேருக்கு மட்டும் ஏன் நடக்கிறது? இதுக்கெல்லாம் பதில் இல்லை. என்னைக் கேட்டா பதிலைத் தேடிப் போகக் கூடாது. இப்படித்தான் என் சித்தியுடைய சினேகிதி. ஜே.என்.யூ.விலே படிச்சிட்டிருந்தா. காலேஜ்லே சஞ்சிகை ஒண்ணு வெளியிடுவா. அப்ப எமர்ஜென்ஸி சமயம். இவ காரசாரமா அரசாங்கத்தை அட்டாக் பண்ணி எழுதினா. மறுநாளைக்கு என் சித்தி வீட்டுக்குச் சாப்பிட வரேன்னு சொன்னவ வரவேயில்லே. காணாமப் போயிட்டா. கடத்திட்டு போனாங்களா, கொலை செய்யப்பட்டாளா ஒண்ணும் தெரியவரல்லே. அவளுடைய அம்மா ரொம்ப பூஜை செய்கிறவர், பாவம். எனக்கு ஏன் இப்படி நடந்ததுன்னு அழுவாராம்."

விவேக்கின் பேச்சு இதமாக வருடுவது போல இருந்தது. சகுந்தலா பதிலே பேசாமல் அமர்ந்திருந்தாள். பின் சீட்டில் சமேலியும் பரத்தும் தூங்கிப் போயிருந்தார்கள்.

"என்னுடைய தாத்தா ஒரு வேதாந்தி" என்று விவேக் தொடர்ந்தான். "எல்லா உறவும் – தகப்பன் பிள்ளை, அம்மா பெண் உறவுகூட ஒரு விபத்துன்னு சொல்வார். எங்கேயாவது ஒரு உயிர் பிறக்கணும். அதுக்கு ஒரு இடம் தேவை. தகப்பனோட பிள்ளை, அம்மாவுடைய பெண், மனைவியோட புருஷன் என்கிற உறவு நிலையை விட மனுஷனா, மனுஷியா வாழறதுதான் முக்கியம்னு சொல்வார். இதை நாம புரிஞ்சுக்கிட்டம்னா, இப்படிப்பட்ட இக்கட்டுகள்லே தடுமாற்றம் ஏற்படாதுன்னு சொல்வார்."

சகுந்தலாவின் வீடு வந்ததும், அவன் வண்டியை நிறுத்தினதும், "தாங்க்ஸ் விவேக், உன் உபதேசத்தை நினைவு வைச்சுக்கறேன்" என்று அவள் புன்னகை செய்தாள்.

அவர்கள் விஃப்டுக்குள் ஏறும்வரை கவனித்துக் கொண்டிருந்துவிட்டு அவன் கிளம்பினான். ஒரு பஞ்சாபி ரெஸ்டாரெண்டில் ஒரு இளம் பெண்ணுடன் ராஜா மக்கய்கி ரோட்டி சாப்பிட்டுக் கொண்டிருந்ததையும் சென்னைக்குச் சென்றவன் பார்த்தான் என்று அவளிடம் சொல்லியிருந்தால் அவன் தாங்கியிருக்கமாட்டான் என்று நினைத்துக் கொண்டான். ராஜா, வேலை செய்யும் அலுவலகத்தின் விலாசத்தைக் கொடுப்பதாக அவன் சொன்னது நினைவுக்கு வந்தது. நாளைக்கு முதல் வேலையாக அவனுக்கு ஃபோன் செய்து வாங்கிக் கொள்ள வேண்டும்.

(தொடரும்)

நூறு மார்க் பூரிப்பு!

சினி பூ

ஏதைச் செய்தாலும் சிரத்தையுடன் செய்கிற குணம் உடைய ஏவி.எம். சரவணன், கடந்த முப்பது வருடங்களாக ரோட்டரி சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறார். ஆனால் விஷயம் அது அல்ல. கடந்த முப்பது வருடங்களாக, ஒரு ரோட்டரி சங்கக் கூட்டத்தையும் விடாமல், தொடர்ந்து சென்று நூற்றுக்கு நூறு சதவிகித வருகைக்காக சிறப்பு விருது பெற்றிருக்கிறார். இதற்காக ரோட்டரி சங்கத்தில் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ், அவரது அலுவலக அறையில் ஏவி.எம். நிறுவனம் பெற்ற ஏராளமான நினைவுப்பரிசுகளுடன் கம்பீரமாக உட்கார்ந்திருக்கிறது.

''ரோட்டரி சங்கங்கள் ஆற்றி வரும் சமூகப் பணியால் ஈர்க்கப்பட்டு, சென்னை நகரில் துவக்கப்பட்ட 'ரோட்டரி கிளப் ஆப் மெட்ராஸி'ல் முப்பதாண்டுகளுக்கு முன் உறுப்பினரானேன். அது ஒரு புது அனுபவமாக இருந்ததால், ஆர்வமாகப் பங்கேற்றேன்.

என் தந்தையார் மறைவின்போது ரோட்டரி கிளப் மீட்டிங்கிற்குச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால், தந்தையின் மறைவுக்கு நாலைந்து நாட்கள் கழித்து, ''நீங்கள் எல்லாம் அலுவலகம் போய் சுறுசுறுப்பாக இருப்பதைத் தானே அப்பா விரும்புவார். நீங்கள் யாரும் சோகமாய் வீட்டிலேயே இருக்கக் கூடாது. வெளியே போய்விட்டு வாருங்கள்'' என்றார் என் தாயார்.

''நான் ஸ்டுடியோவுக்குப் போனேன். அடுத்து ரோட்டரி மீட்டிங்கையும் தவறவிடவில்லை. ரோட்டரி உறுப்பினர்கள், தங்கள் கிளப் மீட்டிங்குக்கு வர முடியாமல் போகும் பட்சத்தில், அதற்கடுத்த இரண்டு வாரங்களுக்குள் வேறு ஒரு ரோட்டரி கிளப் மீட்டிங்குக்குப் போனாலும் சரிதான்; அல்லது, முன்னதாகவே, வேறு கிளப் மீட்டிங்கிற்கும் போக அனுமதி உண்டு.

நான் அயல்நாடுகளுக்குப் போன சமயங்களில் இந்தச் சலுகையைப் பயன்படுத்தி, நூறு சதவிகித வருகைப் பதிவு பெற்றேன்.

பத்தாண்டுகளுக்கு இதைக் கடைபிடித்தபோது, பதினைந்தாம் ஆண்டு வரை கடைபிடிப்போமே என்று நினைத்தேன். அதன்பின் இருபது, இருபத்தைந்து... இப்போது முப்பது ஆண்டுகளாக நூறு சதவிகித வருகைப் பதிவைக் கடைபிடித்து விட்டேன். இதை நினைக்கிறபோது, நூறு மார்க் வாங்கிய மாணவனின் பூரிப்பு ஏற்படுகிறது.''



சந்திப்பு: கௌதம் ராம்





உல்லாஸ்

சிம்புக் கின்னது

"மீன்ஸி நீதி. மீன்ஸி நீதி. லால் ரங் தேக்கோ, தேக்கோ ஆஜ் லால் ரங்" குழந்தைகள் கோரஸாகக் கத்திக் கொண்டு ஓடி வந்தன. துடிப்பான சிறுவன் ஒருவன் நல்லாவில் இறங்கி, கைகளில் கலர் தண்ணீரை வேறு அள்ளிக் கொண்டு வந்திருந்தான்.

மீன்ஸி படபடப்புடன் அவன் கைகளைத் தட்டி விட்டு, நன்றாகக் கழுவித் துடைத்து விட்டாள். கள்ள மில்லாத அக் குழந்தைகள், கலகல என்ற சிரிப்புடன் கலைந்து ஓடிப் போனார்கள்.

மீன்ஸி ஆயாசத்துடன் அருகில் இருந்த ஒரு சிறு பாறை மீது அமர்ந்து கொண்டாள். காலைக் காற்று சிலுசிலு என்று அலை பாய்ந்து கொண்டு இருந்தது. ஓடை சொல்ல முடியாத துர்மணத்துடன் நுரைத்துச் சுழித்து ஓடிக் கொண்டிருந்தது.

இன்று சிவப்பு நிறம். சில நாட்களில் பச்சை, சில நாட்களில் மஞ்சள்! மனித இரத்தத்தைக் குடித்துச் செழித்திருக்கும் அரக்கனைப் போல இரண்டு புறமும் மண்டிக் கிடக்கும் புதர்கள். இந்தப் புதரையும் தாண்டி, சில சமயம் சில குழந்தைகள் நல்லாவில் புகுந்து நீரை அளைகிறார்கள்.

கல்யாண் முதல் அம்பர் நாத் வரை ஒரு ஜோக் உண்டு. 'made in USA என்று ஒரு சாமான் மீது எழுதி இருந்தால் அந்த சாமான் made in உல்லாஸ்நகராக இருக்குமப்பா' என்று. உல்லாஸ் நகரில் அவ்வளவு தொழிற்சாலைகள். அருகிலே அம்பர்நாத். கேட்கவே வேண்டாம். ரசாயனத் தொழிற்சாலைகள். எல்லா தொழிற்சாலைகளின் விஷக் கழிவுகளும் இந்த நல்லாவில் ஓடுகின்றன.

நகர்



மனது அழுதது. எத்தனை குழந்தைகள், எத்தனை கால்நடைகள், ஏன், எத்தனை செடிகள் அழிந்து போய்க் கொண்டிருக்கின்றன! முதலில் கை கால்களில் சிரங்கு போல ஆரம்பிக்கும். பிறகு ரத்தம் சொட்ட ஆரம்பிக்கும். முகம் வெளிறும். கை கால்கள் சூம்பிப் போகும், கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் அடங்கிப் போவார்கள். தாய், தகப்பனுடன் மீன்ஸியும் கைகளைப் பிசைந்து கொண்டு செய்வது அறியாது நிற்பாள்.

எதிர்த்த வீட்டு நகுல் எத்தனை அழகும் அறிவும் நிரம்பிய குழந்தை! இந்த பஸ்தியில் ஏறக்குறைய எல்லோருமே வேலைக்குப் போய் விடுகிறார்கள். அம்பர்நாத், கல்யாண் பகுதிகளுக்குத் தொழிற் சாலைகளில் வேலை செய்ய சிலர், வீட்டு வேலை செய்ய செல்லுவோர் பலர், பம்பாய்க்கு டப்பா தூக்கிச் செல்லுவோர் பலர். சிறு குழந்தைகளை நின்று கவனிக்க யாருக்குமே பொழுது இருப்பதில்லை. மீன்ஸி வேலைக்குச் செல்வதில்லை. தாதி மா தனியாக இருக்க முடியாது. கால் சூம்பிப் போன தம்பி கிருஷ்ணா. குட்டித் தங்கை.

இந்த பஸ்திக் குழந்தைகளைக் கண்காணிக்கும் பொறுப்பை, தானே உவந்து ஏற்றுக் கொண்டாள். ஏழைப் பெற்றோர் உவந்து அளிக்கும் பணம் அம்மாவின் முணுமுணுப்பை அடக்கப் போதுமானதாக இருக்கிறது.

முடிந்த வரை குழந்தைகளைப் பார்த்துக் கொள்கிறாள். ஆனால் தனி ஒரு பெண்ணால் எத்தனை தான் சாதித்து விட முடியும். நகுலைக் காப்பாற்ற முடிந்தா?

நகுலிடம் ஒரு நாள் மீன்ஸி சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"நகுல், உனக்கு அம்மா பிடிக்குமா அப்பா பிடிக்குமா?"

வியாதியினால் சோர்ந்திருந்த நகுல் யோசித்து விட்டுப் பதில் சொன்னது.

"இருவரும் தான்."

"ஏன்?"

"சாந்த் ஹம்கோ பசந்த் ஹை. ஆனால் சூரியன் இல்லாவிட்டால் சாப்பாடு இல்லையே."

மீன்ஸி வியந்து போனாள். கோபக்காரத் தந்தையைப் பிடிக்காவிட்டாலும் அவனும் வாழ்க்கைக்கு அத்யாவசியமானவன் என்று எந்த ஒன்பது வயதுக் குழந்தையால் இதைவிட நாசூக்காக, நாகரிகமாகச் சொல்லி இருக்க முடியும்?!

நகுல் உடம்பு கெடத் தொடங்கியதுமே மீன்ஸி அவள் தந்தையிடம் சண்டை பிடித்தாள். "சாச்சா, நகுலின் உடம்பு கெடத் தொடங்கி இருக்கின்றது. நீங்களும் ஒரு கெமிக்கல் கம்பெனியில் தான் வேலைசெய்கிறீர்கள். இந்த அநியாயத்தை எதிர்த்துப் போராட வேண்டாமா?"

கிஸன்சந்த் வேதனையோடு சிரித்தான். "நான் ஒரு தனி ஆள் போராடுவதால் என்ன நடந்துவிடும்?"

"ஏன் எல்லோர் குடும்பங்களும் தான் பாதிக்கப்படுகின்றன. எல்லோருமாகச் சேர்ந்து தான் போராடுங்களேன்."

"சுப் ரஹோ பேட்டீ" என்று அம்மா கத்தினாள்.

"மீன்ஸி, நாங்கள் போராடலாம். உடனே லே ஆஃப் செய்வார்கள். அல்லது லாக் அவுட் கூடக் கொடுக்கலாம். அவர்களுக்கு அதைத் தாங்கும் வல்லமை இருக்கின்றது. ஆனால், ஏழைத் தொழிலாளிகள் என்ன செய்வோம். நகுலைப் போல நாலு வயிறு இருக்கிறதே இந்த வீட்டில்."

இந்த வயிறு தான் வாழ்க்கையா?

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வைட்டமின் சிறுகதை - 5

நகுல் இறந்து போன பொழுது, அவன் தந்தை வேலை செய்யும் தொழிற்சாலையிலிருந்து அதிகாரிகள் காரில் வந்து இறங்கினார்கள். உபசார வார்த்தைகள் பேசினார்கள். சில நோட்டுக் கட்டுகள் கை மாறுவதைப் பார்த்தாள் மீன்ஸி.

நகுலின் காரியங்களின்போது மிட்டாஸும் சாராயமும் கரைபுரண்டோடின. குடும்பத்தார் புதுப்புது உடைகள் அணிந்து கொண்டார்கள். மிஞ்சிய பணத்தில் கலர் டீ.வி. வந்தது.

"நகுல் கொடுத்த வாழ்வு இது தாதி மா" என்று கிஷன் உருக்கமாகச் சொன்ன பொழுது தாதிமா கையை ஓங்கினாள்.

தாதி மா எண்பத்து ஏழு வயதிலும் 'டிங்'என்று இருக்கிறாள். "நான் சுத்தமான உணவு உண்டு, சுத்தமான தண்ணீர் குடித்து, சுத்தமான காற்றைச் சுவாசித்து வளர்ந்தவள்" என்று பெருமை அடித்துக் கொள்கிறாள். வாஸ்தவம்தான். அவள் ஆட்டாவை அடித்துப் பிசைந்தால் ரோட்டி, புட்பால் பந்து போல உப்பிக் கொள்கிறது. குடும்பத்தவர் அவ்வளவு பேருக்கும் நூறு ரோட்டி ஆனாலும் சளைக்காமல் செய்து விடுகிறாள். வெறும் சப்ஜி வெட்டுவதற்குக் கூட அம்மாவிற்கு முடிவதில்லை. மனிதர்கள், ஏன், மரங்கள் கூடச் சோம்பிக் கறுத்து நிற்கின்றன.

ஒருமுறை ராம்லாலை ஒரு மாதம் போலக் காணோம். பிறகு மீன்ஸி அதைப் பற்றி விசாரித்தாள்.

"மீன்ஸி, முதலாளியின் பெண், பேரன் பேத்திகள் வந்து இருந்தார்கள். அவர்களுக்குக் கார் ஓட்டப் போய் விட்டேன்" என்றான் பெருமையாக.

"க்யா, ஓ லோக் அம்பர்நாத் மே ரஹ்தே ஹைங்?"

ராம்லால் தலையைப் பின்னே சாய்த்துக் கொண்டு கடகடவென்று சிரித்தான்.

"மீன்ஸி. இத்னா பேவ் கூஃப் கைஸே ஹோ சக்தே ஹோ! இந்த அழுக்குத் தண்ணீர், அசுத்தக் காற்று, சுகாதாரமற்ற இடத்திலெல்லாம் அவர்கள் இருப்பார்களா? புனே செல்லும் வழியில் பசுமை நிறைந்த அவர்களது பண்ணை வீடு இருக்கின்றது. அங்கே தான் இருப்பார்கள்."

"கந்தே லோக், கந்தா பானி, கந்தா ஜஹவஹி இவ்வளவும் அழுக்கு. ஆனால் இங்கிருந்து வரும் பணம் மட்டும் வேண்டுமா அவர்களுக்கு!" என்று மீன்ஸி கத்தினாள்.

அவள் கோபத்தைக் கண்டு எல்லோரும் சிரித்தனர்.

"முதுகெலும்பில்லாத ஜனங்கள் இதி. இவர்களுக்கு விழிப்புணர்வு எப்பொழுது ஏற்படும். நாமெல்லாம் வேறெங்காவது போய் விடலாமா?"

"வழியே இல்லை மீன்ஸி. உயிர்களைப் போட்டு உழுது பயிரிட்டு அனுபவிக்கும் கும்பல் மிகவும் வலுவாகி விட்டது. எல்லா இடங்களிலும் இதே கதை தான். ஏன் உன் சந்தா மௌஸியின் கதை என்னவாயிற்று?"

மீன்ஸிக்குத் துக்கம் பொங்கி வந்தது. சந்தாமௌஸி அழகானவள். அந்தக் கால மீனா குமாரி மாதிரி இருப்பாள். தாதி மா அவளைப் பெருமையோடு திருமணம் செய்து கொடுத்தாள். ஷாபாதில் கம்பெனியில் வேலை செய்யும் பையன். நூறு ஆடுகள் இருக்கின்றன அவர்களுக்கு!"

கல்யாணில் வேலை செய்யும் அத்தனை ரயில்வே சிப்பந்திகளும் சந்தா மௌஸியின் பித்தர்கள். கண்ணைச் சிமிட்டிக் கொண்டே எந்த பாசஞ்சர் கூட்ஸ் ட்ரெயின் ஆனாலும் டிக்கட் இல்லாமல் ஏறி விடுவாள். கூடவே வால் போல மீன்ஸியும் கிருஷ்ணாவும். லோனாவாலா சிக்கியைக் கடித்துக் கொண்டே சந்தா மௌஸியுடன் பயணம் செய்த காலம் கவிதைக் கோலம்.

> "என்னய்யா கையில கட்டு?"
> "ஏதாவது பணம் கிடைக்குமான்னு ஒருத்தனோட பாக்கெட்ல கையை விட்டேன்; அவனே ஒரு பிக்பாக்கெட் போல... பையில வச்சிருந்த பிளேடு என் கையைப் பதம் பார்த்துடுச்சு!"
> – சீர்காழி வி. ரேவதி

சந்தா மௌஸியைப் போலவே வளமையாக இருந்தது ஷாவாத் அப்பொழுதெல்லாம். மெதுவாக ஆடுகள் சாகத் தொடங்கின. சிமெண்ட் தூசி படிந்த புற்களைச் சாப்பிட்ட காரணம் என்றார்கள். பின்னர் சிமெண்ட் தூசி பட்டுப் பட்டே, புற்களும் செத்து விட்டன. இப்பொழுது சிமெண்ட் கலர் கற்களால் நிரம்பிய பாலைவனம் போல இருக்கிறது ஷாபாத்.

சந்தாமௌஸி ஆட்டா கூட இங்கிருந்து சக்கியில் அரைத்துப் போவாள். 'அங்கே தூசி படிகிறது அம்மா' என்று சொல்லி. குழந்தைகள் ஒவ்வொன்றாக இறந்து போயின.

"வெகு தூரம் தள்ளிப் போவோமே" என்று கேட்டுக் கொண்டே இருந்தாள் சந்தா மௌஸி. "இத்தனை சம்பளமும் வசதிகளும் எங்கே கிடைக்கும்?" என்று மறுத்து விட்டான் அவன் கணவன். இன்று சந்தா மௌஸி தளர்ந்து

போன கிழவியைப் போல இருக்கிறாள். அவள் கண்களில் ஒளி இல்லை. "வெகு தூரம் போய் விட வேண்டும்" என்று அவள் வாய் முணுமுணுத்துக் கொண்டே இருக்கின்றது. அந்த ஊர்ப் பெண்கள் முடுக்கிவிட்ட ரோபோக்கள் போல இருக்கிறார்கள்.

"இந்த ஆலைகள் எல்லாம் தேவைதானா?" என்று கத்தினாள் தாதி மா.

"ஆமாம். கட்டடங்கள் அணைக்கட்டுக்கள் வேண்டாமா? மனிதர்கள் சுகமாக வாழ அவை வேண்டும் அல்லவா?"

"எந்த மனிதர்கள்? செத்துப் போய் சவமாகி விட்ட மனிதர்களா?" தாதி மா வெறுப்புடன் சொன்னாள்.



அடிக்கடி தாதி மா சொல்லுவாள், "சந்தாவைப் போல அழகும் அறிவும் நிரம்பிய பெண் மீன்ஸி. அவள் வாழ்க்கையும் சந்தாவைப் போலப் பாழாக விட மாட்டேன்."

"என்ன செய்யப் போகிறாய்?" என்று ஏளனமாகக் கேட்பார் கோபால்.

"பொறுத்திருந்து பார்" என்ற திடமான பதில் வரும்.

"இங்கே கோபால் என்பவர் வீடு எதுங்க?"

மீன்ஸி தூக்கிவாரிப் போட்டு எழுந்திருந்தாள். எண்ணங்களில் மூழ்கித் தன்னை மறந்து எத்தனை நேரமாக இருந்திருக்கிறோம் என்ற கூச்சம் ஏற்பட்டது.

கேள்வி கேட்டவர்களைப் பார்த்தாள். 'பளிச்' என்று புரிந்து போயிற்று. மீன்ஸியின் தந்தை கோபால் எட்டு வயதிலேயே ரயிலேறி தானா வந்து விட்டவர் என்றாலும் மதுரை கிராமத்துப் பக்கமிருக்கும் தம் உறவினர்களின் தொடர்பை அறுத்துக் கொள்ளவில்லை. கடிதப் பரிமாற்றம், புகைப் படங்கள் பரிமாற்றம் என்று ஒருவரை ஒருவர் அறிந்தே வைத்திருந்தனர். வந்திருப்பது தன் பாட்டி, அத்தை, அத்தை மகன் என்று புரிந்து கொண்டாள் மீன்ஸி. அத்தை மகன் ஷாருக்கான் மாதிரி அம்சமாக இருக்கிறான் என்று அரைநொடியில் மனம் களிப்பு கொண்டது.

"தாதி மா, ரிஷ்ட்டேதார் ஆயேன் ஹைங்" என்று பாட்டியைக் கூப்பிட்டு விட்டு வந்தவர்களை வணங்கி வரவேற்றாள்.

"நீதான், என் பேத்தி மீனாக்ஷியா?" என்று அகமும் முகமும் மலர, பேத்தியை அணைத்துக் கொண்டாள் பாட்டி.

தாதி மா ஓடி வந்து சம்பந்தியை அணைத்து வரவேற்றாள். குடும்பத்தில் சந்தோஷமான சந்தோஷம்.

இரவு எல்லோரும் சாப்பிட்டபின் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த பொழுது தான் இந்த திடீர் விஜயத்தின் நோக்கம் தெரிந்தது.

"தம்பி, திதி, மீன்ஸி திருமணம் பற்றி எழுதி இருந்தார்கள். நானும் பாண்டியனின் ஜாதகத்தை ஜோஸியரிடம் காண்பித்தேன். உறவுக்குள்ளே தான் கல்யாணம் முடிக்க வேண்டுமென்று சொல்றாக. நீ என்ன சொல்லுதே."

"மீன்ஸி நகரத்திலே பிறந்து வளர்ந்த பெண். கிராமத்திற்கு வரச் சம்மதமா என்று கேட்டுக்க அம்மா" என்றார் கோபால். ஐ.டி.ஐ. படித்தும் விவசாயம் பார்க்கும் மருமகனை அவருக்கும் மிகவும் பிடித்துத் தான் இருந்தது.

தாதிமா மௌனமாக மீன்ஸியைப் பார்த்தாள்.

"பாட்டி, உங்கள் ஊரில் தொழிற்சாலை எதுவும் இருக்கிறதா?" என்று கணீரென்று கேட்டாள் மீன்ஸி.

"இல்லையே அம்மா" என்று குழம்பியவளாக பதில் சொன்னாள் மதுரைப்பாட்டி.

"பாட்டி, இரண்டு கண்டிஷனோடு இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்கிறேன். எந்தக் காரணம் கொண்டும் அத்தான் விவசாயத்தை விட்டுவிட்டு நகர்ப்புறம் வரக் கூடாது. இரண்டாவது, என் தம்பி தங்கைகளையும் என்னோடு கூட்டி வந்து விடுவேன். சம்மதமா?"

எல்லோர் முகமும் விகசித்த தாமரை மலர் போல ஆயிற்று.

தாதி மா தன் பேத்தியை அணைத்துக் கொண்டாள்.○

ஓம் ஜெயசக்தி



அருள்வாக்குச் சொல்லுகின்றார்

அன்னை ஸ்ரீ மூகாம்பிகையின் அருள்வரமும் அனுக்கிரகமும் பெற்ற ஸ்ரீ அருணாதேவியார் அவர்கள் சொல்வது தெய்வ வாக்காகப் பலிக்கிறது.


அன்னை ஸ்ரீ மூகாம்பிகையின் அருளால் உங்கள் வாழ்வில் நடந்தது, நடந்து கொண்டிருப்பது, நடக்கப்போவது, குடும்ப வாழ்க்கை, வியாபாரத் தடை, திருமணத்தடை, குழந்தைப்பேறு இல்லாமை, மற்றும் படிப்பு, பட்டம் பதவி, பதவியுயர்வு எதிர்பார்ப்புகளால் ஏற்படும் தன்மைகள் எல்லாவற்றையும் விபரமாகக் கூறுவர். மேலும், சுபமுகூர்த்தம், தீபாவளி, நவராத்திரி, திருக்கார்த்திகை, தைப்பூசம், அமாவாசை, பௌர்ணமி நாட்களில் கிரகங்களின் அடிப்படையில் யாகங்களும் சிறப்பு பூஜைகளும் நடத்தி பழங்கால ஏட்டுச் சுவடிகளின் முறைப்படி தாயத்துகளும் மாந்திரீக முறையுள்ள அட்சரங்களும் அளிக்கப்படும்.

போக முனிவரின் சாரணை ரகசியத்தின்படி மூலிகையின் சக்தி மந்திர சக்தியின் மூலமும் ரசமணி கட்டித் தரப்படும். இதை அணிகின்றவர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள நன்மைகள் மட்டுமே கிடைக்கும். (1) தாம்பத்ய உறவு இன்பமாதல் (2) மனம் ஒருமைப்படும் (3) பதட்டம் கட்டுக்குள் வரும் (4) ஜன வசீகரமும் ஏற்படும். பிரிந்தவர்களை ஒன்று சேர்க்கும்.

அருள்வாக்கின் பதிலை அவருடைய கைப்பட விவரமாக எழுதி அனுப்பி வைக்கின்றார். பதிலைப் பெற காணிக்கையாக ரூ. 25 அனுப்பவும். (கவருக்குள் பணம் அனுப்ப கூடாது) பெயர், பிறந்த தேதி குறிப்பிட வேண்டும். அருள்வாக்கு நேரில் கேட்க வருபவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 5 மணி முதல் 6 மணி வரை அருள்சக்திபுரம் அன்னை ஸ்ரீமூகாம்பிகை திருக்கோயில் கணக்கன்பட்டி, திண்டுக்கல், பழனி நெடுஞ்சாலை முகவரிக்கு வரவும். பழனியிலிருந்து மூகாம்பிகை திருக்கோயிலுக்கு வர 7,1,24, 6 ஆகிய எண்ணுள்ள டவுன்பஸ்கள், மற்றும் பழனி, திண்டுக்கல் வழியாக செல்லும் பஸ்களிலும் வரலாம். (வெளிநாட்டு அன்பர்கள் ரூ. 50/- M.O. செய்யவும்)

தபால் எழுதும் முகவரி : ஸ்ரீ அருணா தேவியார்,
35, மில் ரோடு, சண்முகபுரம், பழனி - 624 601. போன் நம்பர் : 04545 - 42777

உங்களுக்கு குழந்தை இல்லையா?



பல வருடங்களாக குழந்தை இல்லாத தம்பதிகள் எங்களிடம் 5 மாத சித்த மருந்து சாப்பிட்டு அழகான குழந்தை பெறலாம். இதில் சந்தேகம் இல்லை. பத்தியம் இல்லை! பக்க விளைவுகள் இல்லை!

ஆண்கள்	பெண்கள்
★ Impotence - ஆண்மை குறைவு ★ Azoospermia - விந்தணுக்கள் முற்றிலும் இல்லாமை ★ Oligozoospermia - விந்தணுக்கள் குறைவாக இருப்பது ★ Aspermia - விந்து இல்லாமல் இருப்பது ★ Atrophy of the testicles - விதைகள் வளர்ச்சியின்மை	★ Hypo Plastic Uterus - சிறிய கருப்பை ★ Tubal Block - கருக்குழாய் அடைப்பு ★ Poly Cystic Ovarian Disease - நீர்க்கட்டிகள் ★ Immature Follicles - கருமுட்டைகள் வளர்ச்சியடையாமை ★ Irregular menses - மாதவிடாய் கோளாறுகள் ★ Leucorrhoea - வெள்ளைப்படுதல் ★ Uterine Fibroid - கருப்பை கட்டிகள் ★ Frequent Abortion - அடிக்கடி கருச்சிதைவு

மேலும் ஆண்மலடு மற்றும் பெண்மலடுகளின் குறைபாடுகளை நீக்கி மிக விரைவிலேயே குழந்தை பெற செய்வதில் இந்தியாவிலேயே எங்கள் மருத்துவமனைதான் முதன்மையானது என்பது குறிப்பிடத்தக்கது. எங்களிடம் மருந்து சாப்பிட்டு 5 நாட்கள் முதல் 6 மாதங்களுக்குள் கர்ப்பம் அடைந்து ஆயிரக்கணக்கானோர் குழந்தை பெற்றுள்ளார்கள்

Dr. R. ராஜகோபால் B.A.M.S., ஸ்ரீ சந்தோஷ் சித்த மருந்தகம்

பில்லுக்கடை பஸ் ஸ்டாப் அருகில், தாதகாப்பட்டி, சேலம்-6. ✆: (0427) 469267 Cell : 98427-46653
வேலை நேரம் : காலை 9 மணிமுதல் இரவு 8 மணிவரை. ★ ஞாயிறு விடுமுறை

குறிப்பு : டாக்டர் அவர்கள் திங்கள் முதல் வெள்ளி வரை RAJ TVயில் காலை 10.30 மணிக்கு 'நல்ல பெண்மணி' என்ற தலைப்பில் குழந்தை இல்லாத தம்பதிகளுக்கு ஆலோசனை கூறுகிறார். கேட்டு பயன்பெறுங்கள்.

ஓ... ப்ரியா!

கனல் பறக்கும் கண்கள், அனல் தெறிக்கும் சொற்கள், சமூக ஊழல்களை எதிர்த்துப்



• கின்னஸ் ஆசை



• ப்ரியா

மும்பை மசாலா

போராடும் கம்பீரம் – நினைவிருக்கிறதா 'ரஜனி'யை? ஒரு காலத்தில் டீ.வி.யில் ராமாயணத்துக்கு இணையாக டி.ஆர்.பி. ரேட்டிங்க்ஸ் பெற்ற 'ரஜனி' சீரியலின் நாயகி ப்ரியா டெண்டுல்கரை அவ்வளவு எளிதாக மறக்க முடியுமா என்ன? அவர் சித்திரித்த பாத்திரத்தைப் போலவே, சக்தி சொரூபி! சிறுகதைகள் எழுதி, மராத்தி மேடை, திரைப் படங்களில் நுழைந்து, இந்தி சீரியல், சினிமாவை ஒரு கை பார்த்தவர். 'ப்ரியா டெண்டுல்கர் டாக் ஷோ' மூலமாக காரசாரமாக பல பிரச்னைகளை, பல பெரும் புள்ளிகளை முன்னிறுத்தி விவாதித்தவர். அநீதிகளை எதிர்த்து ஆரவாரமாகப் போராடியவர் கான்சரை எதிர்த்து மௌனமாகப் போராடினார்; திடீரென்று மாரடைப்பில் அகால மரணமடைந்துவிட்டார். சொந்த வாழ்க்கையில், ஒரு தனிமையும் சோகமும் அவரை வாட்டி வதைத்தன. சென்ற ஆண்டு இவரது தம்பியும் பிரபல காமிராமேனுமான ராஜு மரணித்தது, நாடகாசிரியர் விஜய் டெண்டுல்கர் குடும்பத்துக்கு முதல் அடி; நாற்பத்தியொரு வயதில் ப்ரியா மரித்தது அடுத்த அடி; கலை உலகுக்கோ இடிமேல் இடி!

இடி இடிக்கும்; மின்னலடிக்கும்; ஆனால் மழை பெய்யாது! அண்டர்வர்ல்ட் டான் அபுசலீம் விஷயத்தில் எங்கள் காவல் துறையின் அதிர்ஷ்டம் இப்படித்தான் இருந்து வந்தது; துபாயில் ஒரு முறை பிடிபட்ட போது, இவர்களால் இவன்தான் சலீம் என்று நிரூபிக்க முடியவில்லை; ஷார்ஜாவில் அகப்பட்டபோது அவர்கள் கேட்ட கைரேகைகள் இவர்களிடம் இல்லை! இத்தனைக்கும் நூற்றுச் சொச்ச கொலை, கொள்ளை, பண மிரட்டல், கடத்தல் வழக்குகளில் அபு சலீம் சம்பந்தப்பட்டிருக்கிறான். அவற்றுள் குல்ஷன் குமார் கொலை, மனிஷா கொய்ராலா காரியதரிசி கொலை, மில்டன் ப்ளாஸ்டிக்ஸின் அதிபர் கடத்தல், மும்பை குண்டு வெடிப்புகள் போன்றவை பிரசித்தம். தாவூத் குழுவில் இருந்து, மனஸ்தாபத்தால் பிரிந்து, பாங்காக் அலி புத்தேஷி குழுவுடன் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருந்தவன். பாலிவுட் ஹிட் படங்களின் அயல் நாட்டு உரிமைகளைக் கேட்டே சுபாஷ் கய், ராகேஷ் ரோஷன், ஷாருக்கான், ஆமீர்கான் போன்றோரை மிரட்டிக் கொண்டிருந்தான். மும்பையிலிருக்கும் இவன் அடியாட்கள், இண்டர்நேஷனல் சிம் கார்டுகளை உபயோகித்து, துபாயிலிருந்து பேசுவது போல் இங்குள்ளவர்களை மிரட்டுவதில் கில்லாடிகள். இருப்பினும், தாவூத்துடன் முறித்துக் கொண்டதால், அவன் மூலமாக சலீமின்

புதுப்புது மொபைல் நம்பர்கள், புதிய இருப்பிடங்கள் போன்றவை நம் போலீசுக்குக் கிடைத்து, இண்டர்போல் உதவியுடன் அபுசலீமை ஒரு வழியாக, போர்ச்சுகலில் பிடித்துவிட்டார்கள். அந்த நாட்டுடன் எந்த ஒப்பந்தமுமில்லாத பட்சத்தில் அவனை இங்கு வரவழைக்க முடியுமா என்பது, மீண்டும் ஒரு கேள்விக்குறியாகி விட்டது!

கேள்விக்குறியாகி விட்டதே, பன்னிரண்டு வயது கேசவ் ஸோனவானேயின் தீக்குளிப்பு? கல்யாணில் உள்ள ராயல் ஸ்கூலில் எட்டாவது படிக்கும் இந்த மாணவன், அதே ஊரிலுள்ள ஷாஜிமலாங் என்ற மசூதிக்குச் சென்று வந்து, சிறிது நேரத்தில் மண்ணெண்ணெய் ஊற்றித் தன்னைக் கொளுத்திக் கொண்டுவிட்டான். 'நான் 12 நாட்களாக ஸ்கூலுக்குப் போகவில்லை; அதனால் 120 ரூபாய் ஃபைன் போட்டு விட்டார்கள்; அப்பாவிடம் கேட்க பயம்; ஆகையால் தீக்குளித்தேன்' என்று போலீசில் வாக்குமூலம் அளித்திருக்கிறான். இவன் ஸ்கூலுக்குப் போகாததே பெற்றோருக்குத் தெரியவில்லை; ஃபைன் எதுவுமே போடவில்லை என்கிறார்கள் ஸ்கூலில். இத்தனைக்கும் படிப்பு, பாட்டு, ஓவியம், பேச்சு, நாடகம் எல்லாவற்றிலும் பரிசு வாங்கியிருக்கிறான். பசி, பிணி, சந்தேகம் என்று பெரியவர்கள் தான் தீக்குளிப்பார்கள். இந்தப் பிஞ்சுக்கு அப்படி என்ன பிரச்னையோ?



"நான் வாழ்க்கைல இதுவரைக்கும் யார்க்கிட்டேயும் கடன் வாங்கினதே கிடையாது."
"நிஜமாவா...?"
"ஆமாம்! முதல் தடவையா உங்ககிட்டே தான் கேட்கிறேன் ஒரு நூறு ரூபாய் இருந்தா கொடுங்களேன்..?"
— வி. சாரதிடேச்சு

பிரச்னைக்கு தீர்வு காண்பார்கள் என நினைத்தால் மேலும் சிக்கலாக்குகிறார்களே? முதலில் நான்காம் கிளாஸ் குழந்தைகளுக்கெல்லாம் போர்ட் எக்ஸாம் என்றார்களா? இப்போது, அரசின் உதவித் தொகை பெற்ற பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு மட்டும் நாலாவதில் போர்ட் எக்ஸாம் என்கிறார்கள். கேட்டால் சிங்கப்பூர் ஸ்டைல் இதுதான் என்கிறார்களே? சுத்தம், சுகாதாரம், ஜனத் தொகை விஷயத்தில் சிங்கப்பூர் ஸ்டைலைப் பின்பற்றினால் சந்தோஷப்படலாம்; நச்சுத் தாளாமல் பல பள்ளிகள் ஸ்டேட் போர்டிலிருந்து சென்ட்ரல் போர்டுக்கு மாறப் போகின்றனவாம்; ஒரு போர்டு எக்ஸாமிற்காக போர்டையே மாற்றுவது புது ரிக்கார்டுதான்!

ரிக்கார்டு ஏற்படுத்தவென்று ஒவ்வொருத்தர் என்னவெல்லாம் செய்கிறார்கள்? 'ஷூ பஜார்' என்ற செருப்புக்கடையின் முதலாளியான மர்சண்ட் 'ஷூ' வடிவிலிருக்கும் 3000 பொருட்களை– ஹேர்பின், இங்க் பாட்டில், பெண்டண்ட், ஊதுபத்தி ஸ்டாண்ட், பொம்மை, கத்தி, மெழுகுவர்த்தி, காதணி, இத்யாதிகள் – சேகரித்து, புதிய ரிகார்டை உருவாக்கியுள்ளார். ஏற்கெனவே லிம்கா புக்கில் இடம்பெற்றிருக்கும் இவருக்கு, கின்னஸ் புக்கிலும் இடம்பெற ஆசையாம்; அதனால் பலர் முன்னிலையில் ஒரு கண்காட்சியே நடத்தி விட்டார்! இவராவது பரவாயில்லை, ஏ.எக்ஸ்.என். டீவியின் 'who dares wins' நிகழ்ச்சியில் முகம் காட்ட வேண்டுமென்று மும்பையில் ஒரு மாணவன், பத்து சென்டர் ஷாக் சூயிங்கம்களை ஒரே நிமிடத்தில் சாப்பிட்டிருக்கிறான். ஐயோ! அந்தப் புளிப்பை ஒரு நொடிக்குத் தாங்குவதே அதிகம்... ஒரு நிமிடத்திற்கா? ஷாக்கிங்! (இந்த டீவிக்காரர்களின் அடுத்த விஸிட் சென்னையாமே?)

— ஜெய்ஸ்ரீ ராஜ்



ஜிஜினு

ப்ரணா

ஜில்லென்று இருந்த சுவரில் கையை வைத்துவிட்டு, குளிர்தாங்காமல் 'ஸ்...ஸ்...ஸ்' என்று உதறுவது ஜிஜினுக்குப் பிடித்திருந்தது.

ஜிஜின் – ஐந்து வயது ஆறு மாதங்கள்.

''அம்மா! அம்மா! இது எப்படிம்மா வருது?'' என்று ஜன்னல் வழியே கை நீட்டிக் கேட்டான்; தூறிக் கொண்டிருந்தது.

''எல்லாம், அப்படித்தான் வருது'' இலேசான தூறலுக்குக் கூட மின்சாரம் துண்டிக்கப் பட்டது அவளுக்கு எரிச்சலை வரவழைத்திருந்தது. அம்மா கோபப்பட்டாள்.

ஜிஜினுக்கோ மழையின் மீது ஒரு லயிப்பு. பிரமிப்பு. குளிர்ந்த காற்று. மரங்களின் உடம்பு முழுக்க தண்ணீர்ப் பூக்கள், நனைந்த இலைகளின் பளபளப்பு. அவன் அனுமதி யின்றி அவன் உடல் முழுதும் விரவும் சுகந்த வாசம். கருமேகங் களின் கர்ஜனை. இத்தனை நாள் பார்த்த நீல வானம் காணாது போன அதிசயம். வீடு நுழைபவர்கள் விட்டுச் செல்லும் தண்ணீர்த் தடங்கள். தனது தலையிலிருக்கும் தண்ணீ ரைக் கீழே சொட்டிக் கொண்டே இருக்கும் குடை யின் அழகு. இதையெல்லாம் பார்க்கப் பார்க்கப் பரவசமா னான். பள்ளிக்கூடம் இல்லா தது, அவனது கூடுதல் சந் தோஷத்துக்கு உதவி செய்தது.

ஜன்னல் வழியே எட்டிப் பார்ப்பான். தூறல் திடீரென மழையானால் குதூகலிப்பான். இரண்டு மூன்று நாளாய் மெல்லியதாகவும், பெரிதாகவும் பொழியும் மழை, ஜிஜினை வசீகரித்தது.

ஜன்னல் கம்பிகளில் கையை

ஜில் மழையும்!



வைத்து, குளிரை உணர்ந்து குதித்துக் கும்மாள மிடுவான்.

இதுபோன்ற மழை நேரங்களில், சுடச்சுட அம்மா வடை சுடுகிற வாசம் அவனை வேறேதோ உலகுக்குக் கொண்டு செல்லும். வாசம் பிடிக்குமெனினும், அவன் வடையைத் தொடமாட்டான்.

"இந்தாடா! இந்தப் பாலைக்குடி!" ஆகா! ஆவி பறக்கும் பால்.

வெளியில், உடலை ஊடுருவிப் பாயும் குளிர்; இந்தச் சூடான பால் எத்தனை இதமாய் இருக்கும்.

எப்படி என் ஆசையை அம்மா அறிந்தாள். நான் எதிர்பார்த்த நேரத்தில் சரியாக கொண்டு வந்துவிட்டாளே! வியந்தான்.

மெல்லியதாய்ப் பொழியும் மழை, திடீரென, பெரிதாய், உடனே மெதுவாய், என மழை எழுப்பும் சப்தம் சுகத்திலும் சுகமாய் இருந்தது.

பூக்களில் பட்டுத் தெறிக்கும் மழைத்துளி மனசை நனைத்தது.

தாங்க முடியாத மிகப்பெரிய சந்தோஷச் சாரலில் திக்குமுக்காடினான் ஜிஜின். இது எப்படி இவ்வளவு நாள் இல்லாது, இரண்டு நாளாய் மேலிருந்து தண்ணீர் கொட்டு கிறது!

நிமிர்த்தி வைத்திருந்த தண்ணீர் நிரம்பிய, வான அண்டாவை யாரோ கவிழ்த்ததால் தான் இப்படி என்று நினைத்தான்.

வீட்டிற்குள்ளிருந்தபடியே ஜன்னல் வழியே, வானத்தை அண்ணாந்து அண்ணாந்து பார்த் தான். திடீரென குதித்தான்; திடீரெனச் சிரித்தான். மழை பெரிதாகும் போது கை தட்டினான்.

ஜனநடமாட்டத்தை நோட்டமிட்டான். சிலர் குடையோடு சைக்கிளிலும், பைக்கிலும், சிலர் நடந்தும், சிலர் குடையின்றி நடைபாதையிலே ஓடியும், சிலர் ரெயின் கோட்டு அணிந்தும்...

எதிர் வீட்டு வாண்டுகள் சில, வீட்டு வாசலில் தேங்கும் தண்ணீரில் காகிதக் கப்பல் செய்து விட்டுக் கொண்டிருந்தன. அதையே கண் இமைக்காமல் பார்த்தான். அவனுக்கும் ஆசையாய் இருந்தது. அம்மா எரிந்து விழுவாள். அப்பா வந்தவுடன் காகிதக் கப்பல் விடும் எண்ணத்தில் இருந்தான்.

சதா ஜன்னலருகே அமர்ந்து மழையையே பார்த்துக் கொண்டிருந்தான். அப்பாவின் வருகை யும் அவசியமாய்ப் பட்டது அவனுக்கு. கப்பல் கிடைக்குமே!

"என்னங்க இவ்வளவு நேரமாயிடுச்சு? என்ன இப்படி நனைஞ்சிருக்கீங்க. இந்தாங்க தலையைத் துடைங்க" துண்டு கொடுத்தாள் அம்மா.

"ஹையா! அப்பா வந்தாச்சு!" என்று குதித்தான் ஜிஜின். தனது அறைக்கு ஓடினான்.

"என்ன பண்றது நம்ம பொழப்பு அப்படி. மழையா பிச்சுகிட்டு ஊத்துது. இந்த எம்.டி.கிழம், அவன்கிட்ட போய் செக்கை வாங்கு, இவன்கிட்டே போய் பணத்தை வாங்குன்னு அலைய விட்டுடுச்சு. சனியன் பிடிச்ச மழை வேற, ஊரையே நாரடிக்குது; இப்ப மழை வரலைன்னு எவன் அழுதான்" தனது கோபத்தைக் கொட்டினார் அப்பா.

தனது அறைக்குள் சென்றிருந்த ஜிஜின் ஒரு பழைய நியூஸ் பேப்பரை எடுத்து வந்தான்.

அயர்வாய் அமர்ந்திருந்த தனது தந்தையின் மடியில் குதூகலமாய், ஒரு குதிகுதித்து அமர்ந்தான்.

"சனியனே!" அவனைத் தள்ளிவிட்டார்.

"அப்பா கப்பல் செஞ்சுத்தாப்பா!"

"ஏண்டா உயிரை வாங்குற; பாழாப்போன மழை வேற பொழிஞ்சு தொல்லை பண்ணுது; வீட்டுக்கு வந்தா நீ வேற" சிடுசிடுத்தார்.

என்னவோ போல் ஆகிவிட்டது ஜிஜினுக்கு. கண்களும் இலேசாகக் கலங்கின. பேப்பரைக் கீழே போட்டுவிட்டு ஜன்னலருகே வந்தான்.

வெளியே, முன்னைக் காட்டிலும், பலமாய்ப் பொழிந்து கொண்டிருந்தது மழை.

ஆனால் ஜிஜினுக்கு இப்போது மழையைப் பிடிக்கவில்லை. ❍

சுத்தமான பட்டு, நியாமான விலை, வாங்கும் சேலைகளுக்கு உத்திரவாதம்!

திருமணம் மற்றும் பண்டிகை போன்ற மக்களின் அன்றாட வாழ்க்கையில் வரும் விழாக் காலங்களில் முக்கிய பங்கு வகிப்பது ஆடைகள் ஆகும். அதிலும் பெண்கள் பட்டுசேலைகள் உடுத்தியும், ஆண்கள் பட்டு வேஷ்டி சட்டை உடுத்தியும், பார்த்தால் அதன் அழகே தனி.




அப்படிப்பட்ட பட்டு ஆடைகளை சென்னையில் உள்ள மைலாப்பூரில் B.M சில்க் சாரிஸ் ரசனைக்கேற்ப பல புதிய டிசைன்களை தரத்துடன், விலை நியாயமானதாகவும், நாம் உழைத்து சம்பாதிக்கும் பணத்தில் வாங்கும் ஆடைகளுக்கு முழு உத்திரவாதமும் அளித்து கடந்த பதினோரு ஆண்டு காலமாக மக்களின் நம்பிக்கையையும், பேராதரவையும் பெற்று நிறுவனத்தை சிறந்த முறையில் நிர்வகித்து வருகிறது.

இன்றைய காலத்தில் மக்களை மிகவும் ஆட்கொண்ட மீடியா டீ.வி ஆகும். ஆனால் B.M சில்க் சாரிஸ் நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரர் திரு. A. சந்திரன் அதற்கு முற்றிலும் மாறுபட்டு தரமான பட்டுசேலை நியாமாக விலையில் வாங்க வேண்டுமா?

உடனே B.M சில்க் சாரிஸ் மைலாப்பூர்க்கு சென்றால் வாங்கலாம் என்ற மகத்தான நம்பிக்கையை பெற்று மக்களை ஆட்கொண்டு சாதனை படைத்து வருகிறார் என்று அவரிடம் காலம் காலமாக வரும் வாடிக்கையாளர்களே சொல்கிறார்கள்.

Ex: *தரமும், நியாமான விலையும் இருந்தால் என்றும் நிலைத்து மக்களின் மனதில் இடம் பெறலாம் என்பதற்கு மைலாப்பூர்* **B.M** *சில்க் சாரிஸ் ஓர் எடுத்துககாட்டு.*



குறிப்பு: டீ.வி மீடியாக்களில் விளம்பரம் செய்து ஏராளமாக அதற்கு பணம் செலவழிப் பதைவிட வாடிக்கையாளர்க்கு விலையைக் குறித்து தரமான சேலை களை விற்பனை செய்யலாம் என்பது நிர்வாகத்தின் முக்கிய கருத்து ஆகும். மேலும் முக்கியமாக பரிசு பொருட்களை குலுக்கல் மூலம் தேர்வு செய்து கொடுப்பதையும் ஊக்குவிப்பதில்லை.

பி.எம். சில்க் சாரிஸ் தனி சிறப்பு என்னவென்றால் ரூ.4000/-, 5000/- விலையுள்ள சேலைகளில் உள்ள டிசைன்களை விலை குறைந்த சேலைகளிலும் அளித்து எல்லோரையும் மகிழ்ச்சி அடைய செய்வதுதான்.

(இந்த வருடம் மட்டுமல்ல! இனி வரும் உங்கள் இல்ல தீபாவளி திருநாளை எங்கள் பி.எம். சில்க் சாரீஸ் மூலம் ஆனந்தமாகக் கொண்டாடுங்க)

விலை உயர்ந்த சேலைகளின் டிசைன்களை
விலை குறைந்த சேலையில் அளிக்கும்...!

B.M. SILK SAREES

Mfrs of : Kancheepuram Silk Sarees

9/5. North Mada Street, Mylapore, Chennai 600 004
(Near Kapaleeswarer Temple)

ADVT

"ஐயோ.

அருண் சரண்யா



கையில் இரண்டு துணிப் பைகளும் அரை டஜன் மெலிந்த வாழைப்பழங்களுமாக அந்த முதிய தம்பதி உள்ளே நுழைந்தார்கள்.


"மாப்ள, ரெண்டு நாளைக்குத் தங்கிட்டுப் போகலாம்னு வந்தோம்'' என்று மாமனார் சொல்வது பொய் என்பது ஆறுமுகத்துக்குத் தெரிந்தே இருந்தது. குறைந்தது இருபது நாட்களாவது இருந்துவிட்டுத்தான் அரை குறை மனத்தோடு கிளம்பிப் போவார்கள். அவ்வளவு நாள் தங்குவதைவிட, அவ்வளவு நாள் தங்குவதாகக் கூறுவது அதிக கௌரவக் குறைச்சல்!

ஆறுமுகத்துக்குத் தெரியும் என்பது அவர்களுக்கும் தெரியும். என்றாலும் போலிகௌரவம் போனபாடில்லை. விவசாயம் பொய்த்துப் போக, சென்னையில் உள்ள மகளின் வீட்டுக்கு அவர்கள் அடிக்கடிக் கிளம்பி வந்துவிடுவது வழக்கமாகிவிட்டிருந்தது. பாசமான மகள். ஆறுமுகமும் அதிர்ந்து பேசாதவன்.

கபாலீஸ்வரர் கோவிலை ஒட்டியுள்ள தெருவில் கைவினைப் பொருள்களை விற்கும் கடையை நடத்தும் மாப்பிள்ளைக்கு வருமானம் எவ்வளவு என்பது அவர்களுக்குத் தெரியாது. மகளுக்கும் தெரியவில்லை. "கடன் எதுவும் இல்லப்பா'' என்று அவள் கூறியதே நிம்மதியாக இருந்தது.

ஊரிலிருந்து வந்து தங்கும் போதெல்லாம் அடிக்கடி மாப்பிள்ளையின் பார்வை தன்மீது பதிவது மாமனாருக்குத் தெரியும். "பாவம், பெத்தவங்க பாசம் அறியாமலேயே வளர்ந்துட்ட புள்ள, நம்மகிட்ட அதோட அப்பனைப் பார்க்குது'' என்று மனைவியிடம் கூறி

அந்த மூக்கு!”



நெகிழ்ந்து போவார்.

மாமனாரை உற்றுப்பார்த்தபோது இம்முறையும் அந்தக் கேள்வி, ஆறுமுகத்தின் மனத்தில் அந்த ஆதங்கம் எழுந்தது. 'இப்படி ஒரு சொத்தைத்தானா இவர் தன் மகளுக்கு விட்டுச் செல்லவேண்டும்!' அப்பாவைப் போலவே மகளுக்கும் நீண்ட மூக்கு.

தெருவில் நடந்து கொண்டிருக்கும்போது “ஐ, நாசர்டா” என்று கிண்டலாகச் சில விடலைகள் கத்துவது கேட்கும். தன் கம்பீரமான தோற்றத்துக்குக் கிடைத்த பாராட்டு என்று முதலில் ஆறுமுகம் தப்பாக நினைத்துக் கொண்டிருந்தான். ஜோடியாக வராமல், தனியாகச் செல்லும்போது அப்படிப் பட்ட கிண்டல் எதுவும் வரவில்லை என்பதைப் பிறகுதான் உணர்ந்து கொண்டான்.

“உன் மூக்கு நடிகர் நாசரோட மூக்கு மாதிரி பெருசா இருக்கு” என்று ஆறுமுகம் ஒரு நாள் கூறியபோது அவள் முகம் கொஞ்சம் சுருங்கிவிட்டது. “இந்திராகாந்தி மூக்குன்னு தான் என் சினேகிதிங்க சொல்லுவாங்க” என்றாள். பிறகு சட்டென்று “இப்படியொரு மூக்குக்காரியைக் கல்யாணம் செய்துக்கிட்டமேன்னு அவமானமா இருக்குதா?” என்றாள். “சேச்சே” என்று மறுத்தான். அவமானமில்லை. ஆனால் நெருடல் உண்டு. பெண் பார்த்துவிட்டு வந்த அன்று 'மாட்டேன் என்று சொல்லிவிட்டால் அந்த ஏழைக்குடும்பம் எப்படியெல்லாம் வருத்தப்படும்!' என்ற நினைவுமட்டுமே அதிகமாகத் தோன்றி, சம்மதத்தை வெளிப்படுத்தியாகி விட்டது.

இப்போதெல்லாம் அவளது வித்தியாசமான மூக்கு எழுப்பும் கோபத்தை அணைக்கக் கஷ்டமாக இருந்தது. ஏதோ மதிப்புக் குறைவான பொருளைத் தன் தலையில் கட்டிவிட்ட கழிவிரக்கம்! தன் வீட்டுக்கு அடிக்கடி வந்துவிடும் மாமனாரைப் பார்க்கையில் இது மேலும் அதிகமாகிறது.

ஜெர்மன் மொழியில் கோபுரத்தின் சிறப்பை விளக்கிக் கொண்டிருந்தாள் அந்த வழி காட்டிப் பெண்மணி. நாற்பது வயதை நிச்சயம் கடந்திருக்க வேண்டுமென்றாலும் அவள் காதுகளில் ஜிமிக்கி!

கோபுரத்திலிருந்து தன் பார்வையை மீட்டுக் கொண்ட அந்த ஜெர்மன்காரரின் கண்கள் ஆறுமுகத்தின் கடைமீது விழுந்தன. சாவி கொடுத்த பொம்மை போல நேராக அந்தக் கடையை நோக்கி அவர் வர, வேறு வழியில்லாமல் அந்த ஜிமிக்கிக்காரியும் பின் தொடர்ந்தாள்.

ஷோகேஸில் இருந்த அந்த மினி கபாலீஸ்வரர் கோவில் செட்டின்மீது அவர் பார்வை பதிந்திருந்தது. எடுத்துக் காட்டச் சொன்னார்.

நெட்டியால் செய்யப்பட்ட கலைப்பொருள் அது. கண்ணாடிப் பெட்டி ஒன்றுக்குள் பாது காக்கப்பட்டிருந்தது. சின்னச்சின்ன நகாசு வேலைகள் அதன் தரத்தை அதிகமாக்கியிருந்தன. கிழக்கு வாசலிலிருந்த பிள்ளையார் சன்னதியிலிருந்து, சிவபெருமானுக்கு எதிரே இருந்த நந்திகேஸ்வரர்வரை பல விவரங்கள் அதில் பதிவாகியிருந்தன.

வழிகாட்டிக்கும் அந்த கலைப்பொருள் பிடித்துப் போயிருக்க வேண்டும். ஜெர்மன் மொழியில் அவள் விளக்கியது என்னவென்று புரியவில்லை, என்றாலும் அது உசத்தியானதாகத்தான் இருக்க வேண்டும் என்று புலப்பட்டது ஆறுமுகத்துக்கு.

“என்ன விலை?” என்று கேட்டாள்.

ஆறுமுகம் தயங்கினான். வழிகாட்டி, ஜெர்மன்காரர் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்தனர். “தான் ஒரு வெளி நாட்டு ஆசாமி என்பதால் யானை விலை சொல்லப்போகிறார் இல்லையா?” என்ற கேள்விப் புன்னகை ஜெர்மன்காரரின் முகத்தில். “அப்படியிருக்கவும் வாய்ப்பு உண்டு. என்ன செய்வது?” என்று ஒத்துக் கொள்ளும் சங்கடப்புன்னகை அந்த வழிகாட்டியின் முகத்தில்.

"சீக்கிரம் விலையைச் சொல்லுங்க" என்றாள் அந்த வழிகாட்டி.

"வழக்கமா இருநூறு ரூபாய்க்கு இதை விப்போம்மா. ஆனா..."

மேலும் அவன் பேச்சைத் தொடர்வதற்குள் அந்த ஜிமிக்கிக்காரி பொரிந்து தள்ளினாள். "வெளிநாட்டுக்காரங்கன்னா அதிக விலை சொல்றது ரொம்பத் தப்பு. நம்ம சிலைகள், சிற்பங்களின் அருமைகளை நேரே பார்க்கறதுக்காக பல ஆயிரங்களைச் செலவு செய்துகிட்டு வராங்க இவங்க. இவங்களை ஏமாத்தறது தப்பு மட்டுமில்லே, பாவம்கூட."



"கட்சிக் கூட்டம் நடத்த லைசென்ஸ் தரேன்; ஆனா கூட்டத்தை சாலை வளைவில்தான் நடத்துவேன்னு அடம் பிடிக்கிறீங்களே, ஏன்?"

"ஒவ்வொரு கூட்டமும் எங்க கட்சிக்கு திருப்புமுனையா இருக்கணும்கிற ஆசைதான்!"

— கே.நேசினி

"அதுதான் என் நினைப்பும். இவரை நான் ஏமாத்த விரும்பல்லே. அதனாலேதான் இதை அவருக்கு விக்கறதா இல்லே."

வழிகாட்டி புரியாமல் விழித்தான். அவளுக்கு விளக்கினான் ஆறுமுகம். இவ்வளவு அருமையாக உருவாக்கப்பட்டிருந்த அந்த வேலைப்பாட்டில் ஒரு முக்கியமான விஷயத்தில் தவறு நேர்ந்திருந்தது. நந்திதேவருக்கு எதிரே உள்ள சன்னதியில் லிங்கத்துக்குப் பதிலாக அம்மனின் உருவம். கற்பகாம்பாள் சன்னதியில் லிங்கத்தை மாற்றிவைத்திருந்தார் உருவாக்கியவர்.

"தன் நாட்டுக்கு இதை எடுத்துக்கிட்டுப் போகும் இவர் நிச்சயம் இதைத் தன் வீட்டு ஷோகேஸில்தான் வைப்பார். தன் நண்பர்களிடமெல்லாம் காட்டுவார். அப்படிப்பட்ட ஒரு பொருளில் இப்படிப்பட்ட ஒரு அடிப்படைத் தவறு இருக்கலாமா?"

வழிகாட்டி கருணை பொங்கும் பார்வை ஒன்றை ஆறுமுகத்தின்மீது பிரயோகித்தான். அந்த ஜெர்மன்காரரிடம் விஷயத்தை விளக்கினான். பிறகு, இனி கிளம்ப வேண்டியதுதான் என்கிற வகையில் இரண்டெட்டு வைத்தான்.

ஆனால் ஜெர்மனிக்காரர் நகருவதாகத் தெரியவில்லை. கையில் வைத்து வியந்து கொண்டிருந்த அந்தக் கோவிலின் பிரதியை கீழே வைப்பதாகவும் இல்லை. அவர் முகத்தில் இப்போது விவரிக்க முடியாத குதூகலம் புலப்பட்டது.

சில நிமிடங்களானபின் ஒரு வழியாக அந்தக் கலைப் பொருளைக் கீழே வைத்துவிட்டு வழிகாட்டியை அருகில் வரச் சொன்னார். தான் சுமந்து கொண்டிருந்த தோல் பையின் ஆழத்திலிருந்து ஒரு தபால் தலையை எடுத்துக் காட்டினார். பின் அதே பையின் வேறொரு தடுப்பறையிலிருந்து சிறிய சங்கு ஒன்றை எடுத்துக் காட்டினார். பிறகு ஆறுமுகம் விற்பனைக்கு வைத்திருந்த பொருளைச் சுட்டிக்காட்டி மகிழ்ச்சியுடன் ஏதோ பேசினார்.

வழிகாட்டியின் முகத்திலும் பாவங்கள் மாறிக் கொண்டே வந்தன. ஒன்றும் புரியாமல் நின்று கொண்டிருந்த ஆறுமுகத்திடம் ஒருவழியாக விளக்கினான்.

"தற்செயலாகத் தவறாகப் பதிவாகிவிடும் பொருள்களைச் சேகரித்து வைப்பதில் இவருக்கு ரொம்ப ஆர்வம். இவர் காட்டிய தபால் தலையில் இங்கிலாந்து ராணியின் முகம் தலைகீழாக அச்சிடப்பட்டிருக்கிறது. வலம்புரிச்சங்கு அரிதானது என்பதால் அதில் ஒன்றை வாங்கி வைத்திருக்கிறார். தன் வீட்டில் இதுபோன்ற பல வினோத கலெக்ஷன்களை வைத்திருக்கிறாராம். 'வித்தியாசத்துக்குத்தான் என்னைப் பொறுத்தவரை அதிக டிமாண்ட். வழக்கமான விஷயங்களில் என்ன கவர்ச்சி இருக்கிறது?' என்கிறார். நீங்கள் கேட்கும் விலையைப் போல இரண்டு மடங்கு தொகையை இதற்குத் தரச் சொல்கிறார்.

அன்று மாலை ஆறுமுகம் தன் மனைவியைப் பார்த்தபோது அதில் சங்கடக் குறுகுறுப்பு முற்றிலுமாக இல்லை. "கடையில் விற்பனை செமத்தியாக இருக்க வேண்டும். அதுதான் இந்த உற்சாகம்" என்று அவள் சரியாகவும் தவறாகவும் எண்ணிக் கொண்டு சந்தோஷப்பட்டாள். ○


• லக்கி பிரைஸ்



• செக்போஸ்ட்



• அனுபவமில்லாத அழுத்தம்



சோபிப்பாரா?

ராஜீவ் காந்திக்கு மிகவும் நெருங்கியவராக இருந்த, ஓய்வு பெற்ற ஒரு தமிழக ஐ.ஏ.எஸ் அதிகாரி சில மாதங்களுக்கு முன்னர் சோனியாகாந்தியைச் சந்தித்தார். பேச்சுக்கிடையே தமிழகத்தில் காங்கிரஸை பலப்படுத்தும் விஷயமும் அடிபட்டது. அப்போது சோனியா 'தமிழக விவகாரம் ரொம்ப குழப்பமாக இருக்கிறது. ஐந்தாறு தலைவர்கள் வருகிறார்கள்; என்னைச் சந்தித்துப் பேசுகிறார்கள். அவர்களைச் சுற்றி ஐம்பது கோஷ்டிகளாவது இருக்கும் போலிருக்கிறது. அங்கிருக்கும் சிக்கலை எப்படி அவிழ்ப்பது என்றே தெரியவில்லை. எங்கள் செயலாளர்களும் சமயத்தில் குழப்புகிறார்கள். முடிவில் பலருக்கு அதிருப்தியான, விளக்கெண்ணெய்த்தனமான முடிவுகளையே எடுக்க வேண்டியதாக இருக்கிறது'' என்றாராம். சோ. பாலகிருஷ்ணனைத் தலைவராகப் போட்டதிலும் 'செயல் பட்டுக்கொண்டிருக்கும் இளங்கோவனை 'செயல்' தலைவராகப் போட்டதிலும் மீண்டும் குழப்பமும், விளக்கெண்ணெய்த்தனமும் வெளிப்பட்டிருக்கின்றன என்பது வெளிப்படை.

யாரைத் தலைவராகப் போடுவது என்பதில் ஒருமித்த கருத்து உருவாகாததால், அதிர்ஷ்டவசமாக இளங்கோவனே நீடிக்கும் வாய்ப்பு இருப்பதாக முதலில் கூறப்பட்டது. ஆனால் இறுதிக் கட்டத்தில் வாசன் கொடுத்த 'அழுத்தம்' காரணமாக வேறு வழியின்றி சோ.பா.வுக்கு லக்கி

சொதப்புவாரா?



பிரைஸ் அடித்துவிட்டது. இதில் பீட்டர் அல்போன்ஸுக்கும் ஏக வருத்தம். ஏற்கெனவே ஆல் இந்தியா கத்தோலிக் காங்கிரஸ் என்று கிண்டலுக்கு ஆளாகியிருக்கும் ஏ.ஐ.சி.சி சிறுபான்மை இனத்தவர் ஒருவரை தமிழகத் தலைவராக நியமித்தால் மீண்டும் விமர்சனத்துக்கு ஆளாகக் கூடும் என்பதால் பீட்டருக்குத் தலைவர் வாய்ப்பு கை நழுவிப் போனது என்கிறார்கள்.

ஏற்கெனவே தமது ஜெயலலிதா எதிர்ப்பு நிலையால், தமிழக அரசியலைச் சூடேற்றியிருக்கும் இளங்கோவனை ஒரேயடியாகக் கைகழுவி ஜெயலலிதாவுக்குக் குஷியைக் கொடுக்க காங்கிரஸ் விரும்பவில்லை. அதேசமயம் சோ.பாவும் (வாசனும்!) தமிழக காங்கிரஸ் கட்சியை ஏகபோகமாக்கிக் கொள்ளாதவாறு செயல் தலைவராக, செக் போஸ்டாக இளங்கோவனைப் போட்டு விட்டார்கள்.

த.மா.கா.வை இணைக்கும் ஆர்வத்தில் கொடுத்த அதிக பட்சமான வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருக்கிறது காங்கிரஸ் மேலிடம். இனி சத்தியமூர்த்தி பவனில் வாண வேடிக்கைகள்தான். இதற்குக் காரணம் செயல் தலைவர் என்ற பதவிக்குக் குறிப்பிட்ட அதிகாரங்கள் கிடையாது. எப்போதும் எட்டடி பாயும் இளங்கோவன், சோ.பாவை விழுங்கத் துணியும் பட்சத்தில், வாசன் மேலிடத் துணையோடு அவரை எதிர்கொள்ள நேரிடும். 1996-2001 கால கட்டத்தில் எதிர்கட்சித் தலைவராக இருந்த சோ.பா, கடைசிக் கட்டத்தில் தி.மு.க அரசு மீது ஏகப்பட்ட ஊழல் புகார்களைச் சொன்னார் என்பது குறிப்பிடத்தக்கது. அமைதி, ஆக்கபூர்வமான பணி என்று சோ.பா ஒரு பக்கம் காரியத்தில் இறங்க, அதிரடி, அட்டகாசம் கலகலக்க தமிழகத்தில் காங்கிரஸ் 'களை கட்ட'த் துவங்கிவிட்டது என்று நம்பிக்கையோடு சொல்கிறார் மூத்த காங்கிரஸ் தலைவர் ஒருவர்.

தமிழக அரசியலைப் பொறுத்த மட்டில் இளங்கோவன் பாணியே ஜெ.வுக்கு சவாலாக இருக்கும் என்று அழுத்திச் சொல்கிறார்கள் காங்கிரஸ் தொண்டர்கள். தம்மைச் செயல் தலைவர் ஆக்கியதும், கோபப்பட்டு ராஜினாமா கடிதம் கொடுக்க சோனியாவைச் சந்தித்தாராம் இளங்கோவன். ஆனால் சோனியா, 'உற்சாகமாக வேலை செய்யுங்கள். உங்களுக்கு மேலிடம் எப்போதும் பக்க பலமாக இருக்கும்' என்றாராம்.

"சோனியாவுக்கு எதிராக ஜெயலலிதா சொன்ன கருத்துகளின் சூடு தணிந்த பின் தேர்தல் நெருங்கும் சமயத்தில் அம்மாவோடு கட்சியைக் கூட்டணி சேர்த்து விடலாம்" என்ற நம்பிக்கையில் சிலர் இளங்கோவனை விரட்ட நினைத்தார்கள். ஆனால் அது நடக்கவில்லை, மேலிடம் 'ஜெ.வோடு கூட்டணி இல்லை' என்ற முடிவுக்கும் வந்துவிட்டது என்கிறார் இளங்கோவன் தரப்பு பிரமுகர் ஒருவர். 'வாசன் தரப்பு, அம்மாவோடு கூட்டணி அமைக்க ஆதரவு கொடுக்கக் கூடுமே' என்று சந்தேகப்படுபவர்களும் இருக்கிறார்கள். அரசியலுக்கு வந்து ஒரு வருடமே கூட ஆகாத, அனுபவமில்லாத வாசனின் அழுத்தத்துக்கு காங்கிரஸ் மேலிடம் ஆளானது குறித்து காங்கிரஸ் வட்டாரத்தில் அதிருப்தி கொட்டிக் கிடக்கிறது. இதில் சிலர் அம்மா கட்சிக்கும் தாவக்கூடும்.

"தமிழகத்தில் காமராஜ் ஆட்சியைக் கொண்டு வருவோம்" என்கிறார்கள் காங்கிரஸ்காரர்கள். ஆனால் மேலிடம் செய்யும் குழப்பம் காரணமாகத் தமிழகத்தில் காங்கிரஸ் உருப்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. இதையும் மீறி காங்கிரஸ் வளர்ந்தால் அதற்கு ஜெயலலிதாவின் செயல்பாடுகள் மட்டுமே காரணமாக இருக்க முடியும்" என்கிறார் ஒரு மூத்த பத்திரிகையாளர்.

— ப்ரியன்

தொலைதூர தொடர்பா? - மிகவும் அருகிலேயே தொடர்பு கொள்ளுங்கள்!


சாதாரண மக்கள் முதல் தொழில் அதிபர்கள் வரை இன்றைய கம்ப்யூட்டர் யுகத்தில் மிக அவசியமானதும், ஓர் இடத்தில் இருந்தபடியே தம் தேவைகளை வாய்ச் சொல் மூலமாகவே முடித்து கொள்ளவும், மிகவும் அவசியமான ஒரு சாதனம், தொலை தொடர்பு சாதனமான தொலைபேசி (Telephone) ஆகும்.

இப்பொழுது 75% சதவீதம் அனைவரது வீட்டிலும் தொலைபேசி உள்ளது. நாம் அதை எப்படி பயன்படுத்துகிறோம் என்பது மாத பில் வரும்பொழுதுதான் தெரிகிறது. பல சமயங்களில் பில் தொகை அதிகம் வரும்பொழுது (நாமோ அல்லது வீட்டிற்கு வருகைதரும் நண்பர்களோ, உறவினர்களோ) யார் எந்த ஊருக்கு பேசி இருப்பார்கள் என்று பெரும் குழப்பமாக இருக்கும்.

நாம் மேலும் பிரச்னையை பெரிது படுத்தாமல் பில் தொகையை கனத்த மனதுடன் செலுத்திவிட்டு மற்ற பணிகளை கவனிக்க தொடங்கிவிடுவோம். இப்படி யாரும் குழப்பமாக இருக்க கூடாது என்ற நல்ல எண்ணத்தில் உருவானதுதான் **Santhosh Inc.** என்ற நிறுவனம் **தி.நகர் சென்னை - 17, 11, தியாகராயா ரோடு, GA செல்லமால் Complex** என்ற எண்ணுள்ள கட்டிடத்தின் தரை தளத்தில்

அமைந்துள்ளது. விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய **தொலைபேசி எண் : 4351502, 4351358.**

மற்றும் சுலபமான இப்பொழுது நடைமுறையில் உள்ள Cell Phoneகளின் உபயோகத்தை சொல்ல வார்த்தைகளே கிடையாது. இதற்காக இணைப்புகள் எத்தனை வகைகள் உள்ளன? எப்படி உபயோகித்தால் நாம் நம் தேவைகளை



பூர்த்தி செய்ய கணக்கு போட்டு பணத்தை மிச்சப்படுத்தலாம் என்பதையும், மேற்படி நிறுவனமான **Santhosh Inc.** விற்பனை செய்யும் **Hutch, RPG, Airtel,** *pre-paid, post-paid connection* மூலம் தெரிந்து கொள்ளலாம்.

எங்கள் நிறுவனத்தின் அங்கங்கள்

RPG, AirTel, Hutch, *Pre-paid & Post-paid connection*

STD, ISD, Gift Articles,


Fax & DTP Fancy Jewellery

GA செல்லமால் Complex

தி.நகர் சென்னை - 17, 11, தியாகராயா ரோடு,

குறிப்பு : **Cell Phone** தகவல் தொடர்பு சந்தேகத் திற்கு விளக்கம் பெறும் நேரம்.

2 p.m. to 4.30 p.m. Ph : 4351502



அற்புதம்

மெகா நட்சத்திரங்கள், ஆஹா இயக்குனர்கள், வெளிநாட்டில் பாடல் பதிவு என்கிற ரீதியில் பந்தாவாக எடுக்கப்பட்டு, தியேட்டருக்குப் போன வேகத்தில் திரும்பிவரும் பெரிய பட்ஜெட் படங்களைவிட, வளரும் நட்சத்திரங்களையும், புதிதாகப் [illegible] இளம் இயக்குனர்களையும் கொண்டு, [illegible]ரான கதைக்கு அழுத்தமான திரைக்கதை அ[illegible]து எடுக்கப்படும் மினி பட்ஜெட் படங்களே [illegible] புதமான வெற்றியை எட்டிப்பிடித்து விடுகி[illegible]றன என்பதற்கு இந்தப் படம் நடப்பு உதாரணம்.

கேட்கிற போதெல்லாம் பிள்ளையை நம்பிப் பணம் கொடுக்கும் இளிச்சவாய் அப்பா பிரமிட் நடராஜனுக்கு பொறுப்பில்லாத மூத்த மகன் லாரன்ஸ். இவர் அனுபிரபாகரின் நல்ல குணங்களைக் கண்டு அவர்மீது காதலாகி, அதைத் துணிச்சலாகச் சொல்லவும் செய்கிறார். ஆனால் அனுபிரபாகரோ அணுகுண்டாக வெடிக்கிறார். "இப்போ நீ என்ன சாதிச்சிருக்கே? முதல்லே வாழ்க்கையில் ஜெயிச்சு, உன்னை நீ நிரூபிச்சுக்காட்டு. அப்புறம் நான் என்ன, ஆயிரம் பொண்ணுங்க உன் பின்னாடி வருவாங்க'' என்கிறார் அதிரடியாக.

"என் வாழ்க்கையிலே நீ இருக்கேன்னு ஒரு வார்த்தை சொல்லு, நான் ஜெயிச்சுக் காட்டுறேன்'' என்கிறார் பதிலுக்கு லாரன்ஸ். ஆனால் அனு, ஏற்கெனவே குணாவைக் காதலித்துக் கொண்டிருக்கிறார். எங்கே தன்னால் ஓர் இளைஞன் பாதிக்கப்பட்டு விடுவானோ என்று பயந்து, தலையாட்டி, உற்சாகம் தர, அப்புறம் தான் படமே சூடுபிடிக்கிறது. எதிர்பார்த்த முடிவு என்றாலும் யதார்த்தத்தைப் புதைத்து விடாத முடிவு. வசனங்கள் படத்துக்கு பெரிய ப்ளஸ்.

தொடக்கத்தில் தறுதலைப் பிள்ளையாகவும், பிறகு தன்னை உணர்ந்து தன்னம்பிக்கையோடு உயிர்த்தெழும் இளைஞனாகவும் இயல்பாக நடித்திருக்கிறார் லாரன்ஸ். டயலாக் டெலிவரியும் கச்சிதம். ஆனால் அவரது நடன அசைவுகள் ரிபீட் உணர்வைத் தருகின்றன.

இருபது படங்களைத் தாண்டியும் குணால் கொஞ்சமும் முன்னேறவில்லை. மெரினா கடற்கரையில் கண்டக் கஞ்சி குடித்துவிட்டு அரை போதையில் திரிவது மாதிரி நடிப்பதிலும் உடல் மொழியிலும் வழக்கமான மந்தம்.

அற்புதமான முகபாவங்கள் மூலம் அசத்தி விடுகிறார் அனுபிரபாகர். சொந்தக் குரலில் சுத்தமான தமிழ் உச்சரிப்பு பிரமாதம்.

சிவாவின் இசையில் பாடல்கள் பரவாயில்லை ரகம். ஊதாரியாகத் திரியும் ஒருவனை உயர்த்தும் சக்தி காதலுக்கு உண்டு என்னும் ஒருவரிக் கதைக்கு, அற்புதமாக உயிர் கொடுத்திருக்கும் அறிமுக இயக்குனரை வரவேற்கலாம்.

— விஷுவல்தாசன்

● அபவ் ஆவரெஜ்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Pvt. Ltd.
Editorial Team : C. Egnath Raj, Anuradha Sekhar, C.Jesudoss. Layouts : S.Stephen, P.R. Rajan.
Editor : Seetha Ravi.
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Half Yearly Subscription : India : Rs. 165/-
Overseas (Air Mail) Annual : 62 U.S. Dollars, Srilanka Rs.2000/-

நிழலாகத் தொடரும் நிஜமான உறவு

தொன்று தொட்டுத் தொடர்ந்து வரும் உறவுகள் இனியவை. மிக இனிதான இந்த உறவுகள், குடும்பத்தின் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் நிழல் போலத் தொடர்ந்து வரும் நிஜமான உறவுகளாகத் திகழ்கின்றன.

விஜயதசமி

வெற்றியைக் கொண்டாடும் திருநாள். அத்துடன் வெற்றிப் பயணத்திற்கான முயற்சியைத் துவக்கும் நன்னாள். விஜயதசமி விழா, சீட்டுத் திட்டங்கள் போலவே 3000 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய மக்களால் போற்றப்பட்டு வருகிறது.

ஸ்ரீராம் சிட்ஸ்

28 ஆண்டுகளாக, பல லட்சம் குடும்பங்களின் வளமான வாழ்வுக்கு வழிகாட்டி வரும் உற்ற துணை. இப்போது, உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்திற்குப் பாதுகாப்பு அளிக்கும் திட்டங்களையும் உங்களுக்கு அளிக்கிறது.

இலவச இன்சூரன்ஸ் பாலிசிகள்*

ரூ.1,00,000 மற்றும் அதற்கு மேல் மதிப்புள்ள சீட்டுத் திட்டங்களில் சேருபவர்களுக்கு ரூ.20,000 மதிப்புள்ள ஆயுள் இன்சூரன்ஸ் பாலிசியும், ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும் ரூ.80,000 மதிப்புள்ள தனிநபர் விபத்து இன்சூரன்ஸ் பாலிசியும் இலவசமாக வழங்கப்படும்.

*விதிமுறைகளுக்கு உட்பட்டது.

ஸ்ரீராம் சிட்ஸ் சிறப்புகள்

நிதி உதவிச் சேவையில் இந்தியாவின் இமயம் • பல லட்சம் குடும்பங்களின் வளமைக்கு உதவும் உறுதுணை • தவணை தவறாமல் இதுவரை ரூ.9000 கோடி சீட்டுத் தொகை பட்டுவாடா • பல லட்சம் பேருக்கு, நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு • தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் 465 கிளைகள்.

விஜயதசமி விழாவைக் கொண்டாட கோலாகலமான பரிசுகள்!



(ரூ. 5,00,000 சீட்டு)



(ரூ. 3,00,000 சீட்டு)



(ரூ. 1,50,000 சீட்டு)



(ரூ. 1,00,000 சீட்டு)

திட்டங்கள்		சீட்டு மதிப்பு	சந்தாதாரர் பரிசுகள்
ரூ. 250	X 40 மாதங்கள்	ரூ. 10,000	ரைஸ் பவுல் செட்
ரூ. 500	X 30 மாதங்கள்	ரூ. 15,000	செல்லோ சூப்பர் ஃப்ரெஷ் 7 லிட்டர்
ரூ. 625	X 40 மாதங்கள்	ரூ. 25,000	எஸ்.எஸ். பிளேட்
ரூ. 500	X 60 மாதங்கள்	ரூ. 30,000	எஸ்.எஸ். டிபன் பாக்ஸ் செட்
ரூ. 1,000	X 50 மாதங்கள்	ரூ. 50,000	எஸ்.எஸ்.பி.பி. அரேபியன் பாட் (மூடியுடன்)
ரூ. 2,500	X 30 மாதங்கள்	ரூ. 75,000	எஸ்.எஸ். பஞ்சாபி கன்டெய்னர் (மூடியுடன்)
ரூ. 2,500	X 40 மாதங்கள்	ரூ. 1,00,000	ஃபிளிக்ஸ் சாஸ் பேன் (மூடியுடன்)
ரூ. 5,000	X 30 மாதங்கள்	ரூ. 1,50,000	தீர்லெப் டீப் கடாய் (மூடியுடன்)
ரூ. 5,000	X 40 மாதங்கள்	ரூ. 2,00,000	செல்லோ எஞ்சுராய் கேஸரோல்&கல் டைட்டன்
ரூ. 10,000	X 30 மாதங்கள்	ரூ. 3,00,000	எஸ்.எஸ். காண்டினென்டல் குக்வேர் செட்
ரூ. 12,500	X 40 மாதங்கள்	ரூ. 5,00,000	3 கிராம் தங்க நாணயம்



(ரூ. 75,000 சீட்டு)

நுழைவுக் கட்டணம் தனி. முன் அனுமதி பெறப்பட்டது. நேரடியாகச் சீட்டில் சேருவோருக்கும் சந்தாதாரர் பரிசு உண்டு.

ஸ்ரீராம் சிட்ஸ்
விஜயதசமி'02
வந்தவர்க்கெல்லாம் வெற்றி வசமாக!

அக்டோபர் 3 - 15, 2002

ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு (பி) லிமிடெட்

சுப்ரமணியன் பில்டிங், 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை 600 002. போன்: 8461833-39.

WORDCRAFTS